# இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

# نبـــذة عن الإســـــلام

(باللغة التاميلية)

# உள்ளடக்கம்

*பாகம் 1*

இஸ்லாம் ஒரு பார்வை

*பாகம் 2*

குர்ஆன் ஓர் ஒப்பற்ற நூல்!

*பாகம் 3*

இஸ்லாம் ஓர் இணையற்ற மார்க்கம்!

*பாகம் 4*

முஹம்மத் (ஸல்) அவர்கள் - ஓர் அழகிய முன்மாதிரி!

*பாகம் 5*

மறுமை வாழ்வு ஒரு தெளிவு!

*பாகம் 6*

இறைவழிபாடு - இஸ்லாத்தின் பார்வையில்

*பாகம் 7*

இஸ்லாத்தில் மனித உரிமைகள்

*பாகம் 8*

இஸ்லாமிய ஒழுக்கவியல்

*பாகம் 9*

இறைவனைப் பற்றி இஸ்லாத்தின் கருத்தோட்டம்

*பாகம் 10*

இஸ்லாத்தில் இறைத் தூதுத்துவம்

*பாகம் 11*

இம் மனிதரைத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால்....

# 1

# இஸ்லாம் - ஒரு பார்வை !

மனிதன் தனது வாழ்வை சரியான முறையில் சீரமைத்துக்கொள்ள அவனுக்கு இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன.

1. தனது உலக வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக தனிப்பட்ட முறையிலும், சமூக ரீதியிலும் அவனுக்குத் தேவைப்படும் உலகியல் சாதனங்கள்.

2. தனி வாழ்விலும் சமூகவாழ்விலும் நீதியையும் அமைதியையும் கட்டிக் காத்திடுவதற்கு அவன் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றிய அறிவு!

மனிதவாழ்வுக்குத் தேவைப்படும் இந்த இரண்டையும் அதாவது உலகியல் சாதனங்களையும், கொள்கைகள் பற்றிய அறிவையும் மனிதனைப் படைத்த இறைவன் நிறைவாகவே அவனுக்கு அருளியுள்ளான். அவை அனைத்தும் அவன் முன் பரந்து விரிந்து கிடக்கின்றன. அவற்றை அவன் விரும்பியவண்ணம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மனிதனின் ஆன்மீக, சமூக மற்றும் கலாச்சாரத் துறைகளில் தேவைப்படும் கொள்கைகளை நிறைவு செய்திடுவதற்காக இறைவன் மனித இனத்திலிருந்தே தனது திருத்தூதர்களை எழுப்பினான். இந்தத் திருத்தூதர்கள் வாயிலாக இறைவன் தனது வழிகாட்டுதலை தன் வேதவெளிப்பாடாக(Devine Revelation) அளித்தான்.

அந்த இறைவழிகாட்டுதல், முழுமையான ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். அந்த வாழ்க்கைத்திட்டத்தின் பெயர்தான் இஸ்லாம்.

இஸ்லாம் என்பது ஓர் அரபிச்சொல்லாகும். கீழ்ப்படிதல், சரணடைதல், அடிபணிதல் ஆகிய பொருள்களை அது குறிக்கின்றது. ஒரு நெறி எனும் முறையில் இஸ்லாம், ஒரே இறைவனுக்கு அடிபணிந்து அவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து நடக்கும்படி வலியுறுத்துகின்றது. இறைவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து வாழ்வதே

இஸ்லாத்தின் குறிக்கோளாகும். இஸ்லாம் எனும் சொல்லுக்குரிய மற்றொரு அகராதிப்பொருள் 'அமைதி' என்பதாகும்; உண்மையான ஒரே இறைவனிடம் சரணடைந்து அவனுக்கே கீழ்ப்படிவதால் மட்டுமே ஒருவன் உடல் மற்றும் ஆன்ம அமைதியை அடைந்துவிட முடியும் என்பதை இது அறிவுறுத்துகிறது.

## இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை தவ்ஹீத் - ஏகத்துவம், அதாவது ஓரிறைக் கொள்கையாகும். இதன் கருத்து இதுதான்: இந்தப் பேரண்டம் முழுவதும் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றது. அவனே இப்பேரண்டத்தின் அதிபதியும் ஆட்சியாளனும் ஆவான். இறைவன் ஒருவனே! அவனது மேலாதிக்க உரிமையிலும் அவனது இறைமை அந்தஸ்திலும் அவனுக்கு இணையானவர்கள் - துணையானவர்கள் யாரும் இல்லை. அவனே இப்பேரண்டத்தின் ஆட்சியாளன்; பாதுகாவலன்; பராமரிப்பாளன்; படைப்பாளன். அவனே மனிதனைப் படைத்துள்ளான்; மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பூமியின் மீது வாழ்வதற்கான குறிப்பிட்ட ஒரு கால அளவை அவனே நிர்ணயித்துள்ளான்.

இறைவன் மனிதனுக்கு குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை நெறியை வகுத்துத் தந்துள்ளான். அந்த வாழ்க்கை நெறியை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சுதந்திரம் கொண்டவனாக மனிதன் இருக்கின்றான். இந்த வாழ்க்கைநெறியை ஏற்றுக்கொண்டு அதற்கு முற்றிலும் இசைவாக வாழ்க்கை நடத்துபவரே முஸ்லிம். அதாவது, இறைநெறிக்குப் பணிந்து வாழ்பவர். இந்த வாழ்க்கைநெறியை நிராகரிப்பவர், இறைவனுக்குப் பணிந்து வாழாதவர் - அவனை மறுப்பவர் ஆவார்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரே என்றும் இறைவன் ஒருவனே என்றும் மனதார ஏற்று அதனை வாய்மையாக அறிவிப்பதன் வாயிலாக ஒரு மனிதன் இஸ்லாத்தில் இணைந்துவிடுகின்றான். இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக்கொள்கை,இறைத் தூதுத்துவமே ஆகும். இதன் கருத்தாவது: வாழ்க்கைக்குத் தேவையான எந்த வழிகாட்டுதலையும் வழங்காமல் மனிதனை இறைவன் விட்டுவிடவில்லை. மாறாக, அவன் தன் வழிகாட்டுதலை தூதர்கள் வாயிலாகவும் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வாயிலாகவும் வழங்கியுள்ளான். இப்போது ஓர் இறைத்தூதரை நம்புகிறோம் எனில் அதன் பொருள் இதுவே: அவர் கொண்டு வந்த தூதை சத்தியமானது என நாம் ஏற்றுக்கொள்கிறோம்; மேலும், அவர் வழங்கிய சட்டதிட்டத்தைப் பின்பற்றி வாழ்கிறோம்; அவர் அறிவுறுத்தியபடியே நம் வாழ்வை நாம் நடத்துகின்றோம்.

இந்தத் தூதுத்துவக் கொள்கை தானாகவே நம்மை இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படைக் கோட்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. அந்தக் கொள்கை மரணத்திற்குப்

பின்னுள்ள வாழ்வின் மீது நம்பிக்கை கொள்வதாகும். இஸ்லாத்தின் கருத்துப்படி இந்த உலகம் ஒரு சோதனைக்களமாகும். இங்கு மனிதன் சோதனைக்குள்ளாக்கப்பட்டு, அவன் எத்தன்மை வாய்ந்தவன் என்று மதிப்பிடப்படுகின்றான். மனிதன் இந்த உலகில் செய்கின்ற செயல்கள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியே தீர வேண்டும். ஒரு நாள் இந்த உலகம் அடியோடு அழிக்கப்பட்டு அதன் ஆயுள் முடிவடைந்துவிடும். அதன் பிறகு புதிய உலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும். அந்தப் புதிய உலகில் - மரணத்திற்குப் பின் வருகின்ற அந்த மறுமை வாழ்வில்தான், மனிதன் அவனது நற்செயல்களுக்கான வெகுமதியையோ, தீயசெயல்களுக்கான தண்டனையையோ அளிக்கப்பெறுவான். தமது இம்மை வாழ்வில் இறைவனுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து வாழ்பவர்கள், மறுமைவாழ்வில் நிரந்தரமான சுவனப்பேற்றை அடைவார்கள்; இறைவனின் கட்டளைகளை அலட்சியப்படுத்தியவர்கள், இறைவனுக்கு நன்றியில்லாமல் நடந்து கொண்டதற்கான கசப்பான விளைவுகளை அனுபவிப்பார்கள்.

## இஸ்லாத்தின் எளிமை, அதன் அறிவுப்பூர்வமான நடைமுறைக் கேற்ற அமைப்பு:

இஸ்லாம் புராணங்கள், கட்டுக்கதைகள் ஏதுமில்லாத ஒரு நெறியாகும். அதன் அறிவுரைகள் எளிதானவையும் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவையுமாகும். அது எல்லாவித மூடநம்பிக்கைகளையும் பகுத்தறிவுக்கொவ்வாத நம்பிக்கைகளையும் விட்டுத் தூய்மையான தாகும். இஸ்லாத்தில் மதகுருமார்களின் ஆதிக்கம் கிடையாது. நடைமுறை வாழ்வுக்கும் மனிதத் தேவைகளுக்கும் தொடர்பில்லாத வெற்று தத்துவங்களுக்கும் பயனற்ற சடங்குகளுக்கும் அதில் இடமில்லை. புரிந்துகொள்ள முடியாத சிக்கலான சடங்குகளும் சம்பிரதாயங்களும் அதில் இல்லை. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் திருமறையை நேரடியாக அணுகி அதன் வழிகாட்டுதலில் இருந்து பயனடைய முடியும்.

இஸ்லாம் மனிதனின் பகுத்தறியும் ஆற்றலைத் தட்டியெழுப்புகின்றது. அவனை தனது அறிவாற்றலைப்பயன்படுத்தும்படி தூண்டுகின்றது. எந்த ஒரு விஷயத்தையும் அதன் எதார்த்த நிலையின் வெளிச்சத்தில், அதன் விரிவான பின்னணியில் பார்க்கும்படி - சிந்திக்கும்படி கட்டளையிடுகின்றது. "என் இறைவா! என் அறிவை அதிகப்படுத்தியருள்!" (20:114) என்று பிரார்த்திக்கும்படி மனிதனுக்கு திருக்குர்ஆன் அறிவுறுத்துகின்றது. ''அறிவில்லாதவர்கள், அறிவுடையோருக்குச் சமமாக மாட்டார்கள்'' (39:9) என்று அது அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றது. சிந்திக்க மறுப்பவர்களை ''மிருகங்களைப் போன்றவர்கள்; ஏன் அவற்றை விடவும் தாழ்ந்தவர்கள்'' (7:179) என்று இடித்துரைக்கிறது.

## *உலகியலும் ஆன்மிகமும்:*

இஸ்லாத்தின் தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறப்பம்சம் என்னவெனில் அது வாழ்க்கையை உலகாயதம் சார்ந்தது; ஆன்மீகம் சார்ந்தது என - ஒன்றோடொன்று இசைந்து போக முடியாத - இரு வேறுபட்ட கூறுகளாய்ப்பிரிப்பதில்லை. அது மனிதவாழ்வை பிரிக்க முடியாத ஒன்றாகக் கருதுகிறது. வாழ்வைத் துறப்பதை அது ஆதரிப்பதில்லை. மாறாக வாழ்க்கையை நிறைவுடையதாக்கிக் கொள்ளும்படி அது வலியுறுத்துகின்றது. துறவு மனப்பான்மையைச் சரியானது என அது ஏற்றுக்கொள்ளவில்லை. உலகப்பொருட்களை விட்டு ஒதுங்கி வாழும்படி அது மனிதனைக் கேட்க வில்லை. கரடுமுரடான இன்னல் நிறைந்த வாழ்க்கையிலும் இறையச்சத்துடன்வாழ்ந்து மறுமை வெற்றியை - முக்தியை அடையலாம் என்று அது இயம்புகிறது. இறைவன் மனிதகுலத்திற்கு வழிகாட்டிட இறுதியாக அருளிய வேதவெளிப்பாடான திருக்குர்ஆன் பின்வருமாறு பிரார்த்திக்கும்படி நமக்கு அறிவுறுத்துகின்றது.

"எங்கள் இறைவா, இம்மையிலும் எங்களுக்கு நன்மையையே அளிப்பாயாக! மறுமையிலும் எங்களுக்கு நன்மையையே அளிப்பாயாக!" (2:201)

தனது அருட்கொடைகளை ஏற்றுத் துய்த்திட மறுப்பவர்களை அல்லாஹ் வன்மையாகக் கண்டிக்கின்றான்:

"(நபியே!) நீர் (அவர்களிடம்) கேளும். அல்லாஹ், தனது அடியார்களுக்காகப் படைத்திட்ட அழகான பொருள்களை-உலக சாதனங்களை விலக்கப்பட்டவையாய் ஆக்கியது யார்?" (7:32) மேலும், "உண்ணுங்கள்! பருகுங்கள்! ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள்" (7:31) என்று தெளிவாகக் கட்டளையிடுகின்றது. உலகாயத வாழ்வுக்கும் ஒழுக்க வாழ்வுக்கும், சடத்துவ வாழ்விற்கும் ஆன்மீக வாழ்விற்குமிடையே எந்தப் பிரிவினையையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை; அனுமதிப்பதுமில்லை. தனது வாழ்வை ஆரோக்கியமான அடிப்படைகளின் மீது அமைத்துக்கொள்ள தன் ஆற்றல்கள் வலிமைகள் அனைத்தையும் அர்ப்பணித்திட வேண்டும் என்று அது மனிதனுக்கு ஆணையிடுகின்றது. ஒழுக்கச்சக்திகளும் ஆன்மீகச் சக்திகளும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப் பயன்படுத்தி ஆன்மீக வெற்றியை அடைந்திட முடியும்; துறவுவாழ்க்கை நடத்துவதன் வாயிலாக மனிதன் வெற்றியடைந்திட முடியாது என்று அது அறிவுறுத்துகின்றது. மனித வாழ்வின் இரு அம்சங்களான உலகாயதம், ஆன்மிகம் ஆகிய இரண்டுக்குமிடையே ஒரு சமநிலையைத் தோற்றுவிப்பதை இஸ்லாம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உலகில் உள்ளவை அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளன; மனிதனோ தன்னைப் படைத்த இறைவனுக்காக! தன்னுடைய அந்த ஏகனான அதிபதியின்

விருப்பத்தை - கட்டளையை நிறைவு செய்வதே மனிதனின் வாழ்க்கைக் குறிக்கோளாகும். இஸ்லாத்தின் அறிவுரைகள், மனிதனின் ஆன்மீக, உலகியல் தேவைகளை நிறைவு செய்கின்றன. மனிதன் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் தன் உலகியல் வாழ்வை- தன் தனிப்பட்ட வாழ்வு, கூட்டுவாழ்வு இரண்டையுமே- சீர் திருத்திக் கொள்ள வேண்டுமென்றும், அசத்தியத்தின் வலிமையை அடக்கி, நீதியை நிலைநாட்ட வேண்டுமென்றும், தீமைகளை ஒழித்துக்கட்டி நற்பண்புகளை மலரச் செய்ய வேண்டுமென்றும் அவனுக்குக் கட்டளையிடுகின்றது. இவ்விதம் அது எல்லாவித ஒருதலைப்பட்சமான தீவிரப் போக்குகளையும் தவிர்த்து நடுநிலையான பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியுடன் நடைபோடச் செய்கிறது.

## *முழுமையான வாழ்க்கைநெறி:*

மதம் என்பதற்கு பொதுவாகவே இன்று தவறான சிதைந்த கருத்து கொள்ளப்படுகிறது. அத்தகைய குறுகிய பொருளில் இஸ்லாம் ஒரு மதம் அல்ல! மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்புடையது என்பதை அது ஏற்றுக் கொள்வதில்லை. அது முழுமையானதொரு வாழ்க்கைநெறியாகும். மனிதவாழ்வின் எல்லாத் துறைகளையும் அது தழுவி நிற்கிறது. தனிப்பட்ட வாழ்வு, சமூக கூட்டு வாழ்வு, உலகாயத வாழ்வு, ஒழுக்க ஆன்மீக வாழ்வு, அரசியல் வாழ்வு, பொருளாதார வாழ்வு ஆகிய அனைத்தையும் அது தன்னுள் கொண்டுள்ளது. சட்டம், கலாச்சாரம், தேசிய சர்வதேச விவகாரங்கள் அனைத்தையுமே அது தழுவி நிற்கிறது. இஸ்லாத்தை மேற்கொள்ளும் ஒவ்வொருவர் மீதும் பின்வரும் விஷயத்தை குர்ஆன் கடமையாக்குகிறது.

இஸ்லாம் வழங்கும் அறிவுரைகளின் எந்தப்பகுதியையும் கூறுபோட்டு ஒதுக்கிவிடக்கூடாது. மாறாக, அதனுடைய அறிவுரை முழுவதையும் வாழ்வின் அனைத்துத் துறையிலும் ஒரு மனதுடன் பேணி நடக்க வேண்டும். மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு உரியது; சமுதாயப் பண்பாட்டுத்துறைகளில் அதனுடைய ஆதிக்கம் இல்லாதொழிய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டநாள், உலக வரலாற்றிலேயே மிக துரதிர்ஷ்டம் வாய்ந்த நாளாகும். நவீனயுகத்தில் சமயத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த மிகமுக்கிய காரணி, கூட்டுவாழ்க்கையின் மீதான தனது பிடியை அது தானாகவே தளர்த்திவிட்டு தனிப்பட்ட வாழ்க்கையின் குறுகிய வட்டத்திற்குள் முடங்கிச் சென்றுவிட்டதே! தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமே ஆட்சிபுரிகின்ற சமயக் கருத்தோட்டத்தை இஸ்லாம் முழுமையாக நிராகரித்து விடுகின்றது. ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதும், சமூகத்தின் சீர்திருத்தமும் அதன் புத்தமைப்பும் தான் தனது குறிகோள்கள் என்று அது தெளிவாக எடுத்துரைக்கின்றது.

திருக்குர்ஆன் கூறுகின்றது:

''நிச்சயமாக நாம் நம் தூதர்களைத் தெளிவான ஆதாரங்களைக் கொண்டே அனுப்பிவைத்தோம். அத்துடன் அவர்களுக்கு வேதத்தையும் கொடுத்தோம். மனிதர்கள் நேர்மையாக நடந்து கொள்ளும் பொருட்டு (சரியான) அளவுகோலையும் கொடுத்தோம்.

இரும்பையும் நாம் படைத்தோம்; அதில் பெரும் வலிமை இருக்கிறது. மனிதர்களுக்குப் பல நன்மைகளும் இருக்கின்றன. ஆயினும், அல்லாஹ்வைக் (கண்ணால்) காணாமலேயே (அவனை நம்பி) இதன் மூலம் அவனுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி செய்வோர் யார் என்பதை அல்லாஹ் (சோதித்து) அறிந்து கொள்வான்'' (57:25)

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

''உங்களில் ஒவ்வொருவரும் தனக்குக் கீழ்பட்டவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பாளராவீர். அவர்களின் நலன்களைப் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். ஆகவே, நாட்டின் தலைவர் , தன் நாட்டு மக்களின் நலன்களைப் பற்றி விசாரணை செய்யப்படுவார்.

''ஒவ்வொரு மனிதனும் தன் குடும்பத்தாருக்கு மேய்ப்பாளனாவான். எனவே, குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினருடைய நலன் பற்றியும் கேள்வி கேட்கப்படுவான். ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனுடைய குடும்பத்தின் பொறுப்பாளியாவாள். எனவே, அக்குடும்பத்தின் ஒவ்வொருவரின் நலன் பற்றியும் கேள்விக்கணக்குக் கேட்கப்படுவாள். மேலும், ஒவ்வொரு பணியாளனும் தன் எஜமானனுக்குப் பாதுகாப்பாளனாவான். எனவே, அவன் தன் எஜமானனின் சொத்தை (எப்படிப் பாதுகாத்தான் என்பது) பற்றி விசாரணை செய்யப்படுவான்''

இவ்விதம் இஸ்லாத்தின் அறிவுரைகளை ஒருமுறை மேலோட்டமாகப் பார்த்தாலே அது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவிய ஒரு வாழ்க்கை நெறி என்றும், தீயசக்திகள் அடக்கியாண்டிடும் வகையில் மனிதவாழ்வின் எந்த ஒரு துறையையும் அது விட்டுவிடவில்லை என்றும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

## *தனிவாழ்வுக்கும் பொதுவாழ்வுக்குமிடையே சமநிலை உருவாக்குதல்:*

இஸ்லாம் இறைவனால் வழங்கப்பட்ட உண்மையான மார்க்கமாகத் திகழ்வதால், அது தனிநபர் வாழ்வுக்கும் கூட்டு வாழ்வுக்கும் இடையே சமநிலையை மிக ஆக்ககரமான முறையில் - மிகுந்த பயனளிக்கும் விதத்தில் நிலைநாட்டுகின்றது. அது மனித ஆளுமையில் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை வைத்திருக்கின்றது; மனிதர்கள் அனைவரையும் தனிப்பட்ட முறையில் தமது செயல்களுக்குப்

பொறுப்பாளர்களாகவும் இறைவன் முன் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகவும் கருதுகின்றது. இஸ்லாம் தனிமனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது. அவற்றைத் தடை செய்திடவும் பறித்திடவும் எவரையும் அது அனுமதிப்பதில்லை. மனித ஆளுமையின் வளர்ச்சியை அது தனது கல்விக் கொள்கையின் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமூகத்தில் அல்லது அரசில் மனிதன் தனது ஆளுமையை இழந்துவிட வேண்டும் என்கிற கருத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. அதே நேரத்தில் அது மனிதனுள் ஒருவிதப் பொறுப்புணர்வைத் தோற்றுவிக்கின்றது. மனிதர்களை ஒரு சமூகத்தினுள்ளும் அரசினுள்ளும் ஒன்று திரட்டி அமைப்பு ரீதியாக கட்டுப்பாட்டிற்குள் கொணர்கின்றது. சமூக நன்மைக்குத் தனது பங்கை ஆற்றிடும்படி தனிமனிதனுக்குக் கட்டளையிடுகின்றது.

இஸ்லாத்தில் தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படுகின்றது. அது முஸ்லிம்களிடையே சமூக ஒழுங்கையும் கட்டுப்பாட்டு உணர்வையும் வளர்க்கின்றது. ரமளான் நோன்பு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக ஒரே நேரத்தில் வைப்பதற்கென்றே உள்ளதாகும். இந்த அரிய ஏற்பாடு தனிநபர் மற்றும் சமுதாயத்தினுடைய நலன்களை அடைய வழிகோலுகிறது.

ஜகாத் (தன் சொத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தை இறைவழியில் செலவழித்தல்) திட்டமிட்ட முறையில் விநியோகிக்கப்பட வேண்டுமென்பதற்காக அதனைக் கூட்டான முறையில் வழங்கிட முயற்சிகள் மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. ஹஜ் கடமை அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறின், இஸ்லாம் தனிமனிதனையும் அலட்சியப்படுத்தவில்லை; சமூகநலன்களையும் புறக்கணிக்கவில்லை; இரண்டுக்குமிடையே இணக்கமான சமநிலையை ஏற்படுத்துகின்றது.

## அனைத்துலகத் தன்மையும் மனிதாபிமானமும்

இஸ்லாத்தின் செய்தி மனித இனம் முழுவதற்கும் உரியதாகும். இஸ்லாத்தின் பார்வையில் இறைவன் ''உலகங்கள் அனைத்திற்கும் இறைவன் ஆவான்.'' (அல்குர்ஆன் 1:1). இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மனிதகுலம் முழுவதற்கும் இறைத்தூதராவார். திருக் குர்ஆன் இதனைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது."மக்களே! நான் உங்கள் அனைவருக்காகவும் அனுப்பப்பட்டுள்ள இறைத் தூதராவேன்!"(7:158) ''அவர் அகிலத்தார் அனைவரையும் அச்சுறுத்தி எச்சரிப்பவர் ஆவார்'' (25:1) ''மேலும் உம்மை அகிலத்தார் அனைவருக்கும் ஓர் அருட்கொடையாகவே நாம் அனுப்பி வைத்துள்ளோம்''(21:107) இஸ்லாத்தின்

பார்வையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே! அவர்களுடைய நிறம், மொழி, இனம், தேசியம் ஆகியன எதுவாயிருந்தாலும் சரியே! அது மனித சமுதாயத்தின் மனச்சான்றை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றது. இனம், அந்தஸ்து, செல்வம் ஆகிய எல்லாவித தடைக் கற்களையும் தகர்த் தெறிகின்றது. இத்தகைய தடைகள் உலகில் எப்போதும் இருந்து வருகின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது. இஸ்லாம் இந்தக் தடைகளை யெல்லாம் அகற்றி மனித சமுதாயம் முழுவதும் இறைவனின் ஒரே குடும்பம் என்கிற கருத்தோட்டத்தை அளித்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''இறைவனின் படைப்புகள் அனைத்தும் அவனது குடும்பமே! இறைவனிடம் மிகுந்த அன்புக்குரியவன் அவனது படைப்பினங்களை அதிகம் நேசிப்பவனே ஆவான்.''

''என் இறைவா! என் உயிருக்கும் அகிலத்திலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் அதிபதியே! மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களே என்று நான் உறுதிமொழி கூறுகின்றேன்.''

''இறைவனின் வழிமுறைகளுக்கு மதிப்பளியுங்கள்! அவனது குடும்பத்தின் (மனித இனத்தின்) மீது அன்பு செலுத்துங்கள்.''

இஸ்லாம் தனது நோக்கிலும் அணுகுமுறையிலும் சர்வதேசத்தன்மை வாய்ந்ததாகும். எந்தவகையான தடைகளையும் பாகுபாடுகளையும் அனுமதிப்பதில்லை. அது மனித சமுதாயம் முழுவதையும் ஒரே பார்வையின் கீழ், கொள்கை நெறியின் கீழ் ஒன்றுபடுத்த விரும்புகின்றது. இவ்விதம் இஸ்லாம் ஒரு முழுமையான, ஒருங்கிணைந்த அனைத்துத் துறைகளையும் தழுவிய, சமநிலை தவறாத வாழ்க்கை நெறியாக விளங்குகின்றது.

# 2

# குர்ஆன் - ஓர் ஒப்பற்ற நூல்!

மனித குலம் இறை வழிகாட்டுதலை இரண்டு வழியாகத்தான் பெற்றிருக்கிறது. ஒன்று அல்லாஹ்வின் வாக்கின் மூலம்; இரண்டு, அல்லாஹ் தன் நாட்டத்தை மக்களுக்கு எடுத்துரைக்கத் தேர்ந்தெடுத்த இறைத் தூதர்கள் மூலம். இவை இரண்டும் எப்பொழுதுமே பின்னிப் பிணைந்து நிற்பவையாகும். அவற்றைப் பிரித்து இறை நாட்டத்தை அறிய விரும்பும் முயற்சிகள் எப்பொழுதுமே தவறான பாதைக்குத் தான் இட்டுச் செல்கின்றன. ஹிந்துக்கள் இறைத்தூதர்களின் வாழ்வைப் புறக்கணித்து வேதங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தலாயினர். காலப்போக்கில் வேதங்கள் வெறும் வார்த்தைப் புதிர்களாய் மாறின. பிறகு அவற்றின் உண்மை நிலைமையையும் இழக்கச் செய்து விட்டனர். இவ்வாறே கிறிஸ்தவர்கள் இறை வேதங்களைப் புறக்கணித்து தம் கவனம் முழுவதையும் இறைத்தூதரான இயேசுவின் பால் செலுத்தினர். அவருக்கே முக்கியத்துவம் அளித்தனர். இறுதியில் அவரை இறைவனின் அந்தஸ்திற்கே உயர்த்திவிட்டனர். இதனால் ஏற்பட்ட விளைவு, பைபிளில் காணப்பட்ட ஓரிறைக் கொள்கையின் உயிரோட்டத்தையே அவர்கள் இழந்துவிட்டனர்.

உண்மையாதெனில், திருக்குர்ஆனுக்கு முன்பு, மக்களுக்கு அருளப்பட்ட இறைவெளிப்பாடான பழைய ஏற்பாடும், பைபிளும் தாம் அருளப்பட்டதற்கு வெகு காலத்திற்குப் பின்னர்தான் நூல் வடிவில் தொகுக்கப்பட்டன. அதுவும் மொழிபெயர்ப்பாகத்தான் தொகுக்கப்பட்டன. ஏன் இவ்வாறு நடந்தது? மூஸா (அலை) (மோஸஸ்), ஈஸா (அலை) (இயேசு) ஆகியோரைப் பின்பற்றியவர்கள் தம் நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களைப் பாதுகாக்க போதிய கவனம் செலுத்தவில்லை. மாறாக, அத்தூதர்கள் மறைந்து நீண்ட காலம் சென்ற பின்னர் தான் அந்த வேதங்கள் தொகுக்கப்பட்டன. ஆக, இன்று நமக்குக் கிடைக்கும் பைபிள் (புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாடும்) அது அருளப்பட்ட மூல மொழியிலன்றி வெறும் மொழிபெயர்ப்பாகத்தான் இருக்கின்றது. அதிலும் தனிநபர்கள் செய்த ஏராளமான திருத்தங்கள், மாற்றங்கள், இடைச்செருகல்கள் கொண்டதாகவே இன்றைய பைபிள் காணப்படுகின்றது.

இதற்கு நேர்மாறாக, இறைவனால் இறக்கியருளப்பட்ட இறுதி வேதமாக குர்ஆன் திகழ்கிறது. தான் இறங்கிய அசல் நிலையிலேயே - முதன் முதலாக அது எவ்வாறு இறக்கியருளப்பட்டதோ அவ்வாறே - இன்றைக்கும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, இறைவனே அதனைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளான். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே குர்ஆன் முழுவதும் ஓலைகளிலும் இலைகளிலும் எலும்புகளிலும் தோல்களிலும் எழுதி வைக்கப்பட்டது. எழுதப்பட்ட பிரதிகள் சிலரிடம் பகுதி பகுதியாகவும் சிலரிடம் முழுமையாகவும் இருந்தன.

அதுமட்டுமன்றி ஆயிரக்கணக்கான நபித்தோழர்கள் குர்ஆனை முழுமையாகவோ, சில பகுதிகளையோ மனனம் செய்திருந்தார்கள். அண்ணலார் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை முழுக் குர்ஆனையும் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் ஓதிக்காண்பித்தார்கள். நபியவர்களுடைய வாழ்வின் இறுதிக் காலங்களில் ஆண்டுக்கு இருமுறை ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் முழு குர்ஆனையும் ஓதிக் காண்பித்தார்கள். அண்ணலாருக்குப் பிறகு கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் குர்ஆனை நூல்வடிவில் தொகுக்கும் பணியை ஜைத் பின் தாபித் (ரலி) எனும் நபித்தோழரிடம் ஒப்படைத்தார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட குர்ஆன் பிரதி அபூபக்கர் (ரலி) அவர்களிடமும், பிறகு இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) அவர்களிடமும், அவருக்குப் பிறகு அண்ணலாரின் துணைவியார் ஹப்ஸா (ரலி) அவர்களிடமும் இருந்தது. அந்த அசல்பிரதியிலிருந்து மூன்றாம் கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்கள் பல பிரதிகள் எடுத்து அவற்றைத் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள். திருக்குர்ஆன் இறுதி வேதமாக இருப்பதனாலும், மறுமை நாள் வரை மனித குலம் முழுவதற்கும் வழிகாட்டியாக விளங்கக் கூடியதாலும் அதனைப் பாதுகாப்பதில் இத்தனைத் துல்லியமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திருக்குர்ஆன் எல்லாக் காலங்களுக்கும், எல்லா மக்களுக்கும் உரியதாய் இருப்பதால் அது அரேபியர்களை மட்டும் விளித்துப் பேசுவதில்லை. மாறாக, அது மனிதகுலம் முழுவதையும் அழைக்கிறது. ஒவ்வொருவரையும் மனித அந்தஸ்தில் வைத்து அது பின்வருமாறு விளிக்கிறது:

''மனிதனே! கொடையாளனான சங்கைமிக்க உன் இறைவனுக்கு மாறு செய்யும்படி உன்னை மருட்டி விட்டது எது?'' (82:6)

குர்ஆனின் அறிவுரைகள் முற்றிலும் நடைமுறைக்கு இசைவானவையே என்பதை நபி (ஸல்) அவர்கள் வாழ்வும், அனைத்துக் காலங்களிலும் இஸ்லாத்தைப் பேணி வாழ்ந்த வாய்மையான முஸ்லிம்களின் வாழ்க்கையும் நிரூபிக்கின்றன. குர்ஆனுடைய அணுகுமுறையில் பிரதானமாக- எடுப்பாகக் காணப்படும் அம்சம் இதுவே: அதனுடைய அறிவுரைகள் மனித நன்மைக்காகவே அமைந்துள்ளன. மேலும், அவை

மனிதர்கள் கடைபிடிக்கக் கூடியவையாய் விளங்குகின்றன. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, குர்ஆன் புகட்டும் அறிவு முழுமையானதாக - இறுதியானதாக இருக்கிறது. அது உலகியலையும் லோகாய தத்தையும் துன்பப்படுத்துவதுமில்லை. ஆன்மீகத்தைப் புறக்கணிப்பதுமில்லை. அது இறைவனை மனித நிலைக்கு தாழ்த்துவதுமில்லை. மனிதனை இறை அந்தஸ்திற்கு உயர்த்தவுமில்லை. அது அறிவுறுத்தும் வாழ்க்கைத் திட்டத்தில் ஒவ்வொரு விஷயமும் மிகவும் கவனமாகவும் அதற்குரிய பொருத்தமான இடத்தில் துல்லியமாகவும் இடம்பெற்றுள்ளன.

முஹம்மத் (ஸல்) அவர்கள் குர்ஆனின் ஆசிரியர் என்று சில மேற்கத்திய அறிஞர்கள் கூறுகின்றனர். மனித ஆற்றலினால் முடியாத ஒன்றை முடியும் என்று வாதிடுவது போல் இருக்கிறது இவர்களின் உரை. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மனிதர், இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான உலகம் கண்டுபிடித்திருப்பதற்கு இசைவாக எதார்த்த நிலையை (குர்ஆனில் காண்பது போல்) தாமாகவே எடுத்துரைக்க முடியுமா? இன்றைய நவீன விஞ்ஞானம் பெண்ணின் கருப்பையில் கரு எப்படி பரிணாம வளர்ச்சி பெறுகிறது என்று கூறுகிறதோ முற்றிலும் அவ்வாறே அதனை முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அன்று (6ஆம் நூற்றாண்டில்) வர்ணித்திருக்க முடியுமா?

இரண்டாவதாக எழுதப்படிக்கத் தெரியாத வாய்மையான ஒரு மனிதர், நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு தாமாகவே இப்படி ஒரு நூலைப் படைத்திருக்க முடியுமா? இலக்கியத்தின் உச்சகட்டத்தில் இருந்த அரபுலகம் முழுவதும் ஒன்று சேர்ந்து முயன்றாலும் கூட அந்த வேதத்திற்கு இணையானதைக் கொண்டுவர முடியாத அளவுக்கு ஒரு நூலை அவரால் உருவாக்கியிருக்க முடியுமா? 'வாய்மையாளர் - உண்மையாளர்' என்று அன்றைய மக்களால் மதிக்கப்பட்ட ஒருவர் - இன்றைய அறிஞர்களும் மிக்க உண்மையானவர் என்று போற்றுகின்ற தூய ஆளுமை கொண்ட ஒருவர் - தாமாக ஒன்றைப் புனைந்து அதனை 'இறையருளால் பெற்றது' என்று வாதிட்டிருப்பாரா? அதுமட்டுமல்ல. அவ்வாறு பொய்யான வாதம் புரிந்து, இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் வாய்மையையும் தூய்மையையும் வளர்த்திருக்க முடியுமா? வரலாற்றிலேயே வேறு எங்கும் காண முடியாத அளவுக்கு ஒழுக்கசீலர்களாய் அந்த மக்களை மாற்றியிருக்க முடியுமா? விருப்பு, வெறுப்பின்றி இந்த அடிப்படைகளைக் கவனிக்கும் எவரும் இதனை சரி என்று ஏற்றுக் கொள்ளமாட்டார். மாறாக குர்ஆன் இறைவனால் இறக்கியருளப்பட்ட வேதம் என்றே ஏற்றுக்கொள்வார்.

சில மேற்கத்திய அறிஞர்களின் கருத்துக்களை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளத் தேவையில்லாத போதிலும், குர்ஆனைக் குறித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றை நாம் இங்கு தருகின்றோம். இதனைப் படிக்கும் வாசகர்கள் நவீன உலகம்

குர்ஆனின் கருத்துக்கள் எத்தனை நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து எளிதில் புரிந்து கொள்ளலாம். மேற்சொன்ன அம்சங்களைக் கருத்தில் கொண்டு விருப்பு, வெறுப்பின்றி குர்ஆனை ஆய்ந்து படிக்கும்படி நாம் அனைவரையும் அழைக்கின்றோம். இத்தகைய முயற்சி திருக்குர்ஆன் மனிதனால் இயற்றப்பட்டதல்ல; மாறாக இறைவனால் அருளப்பட்டது என்கிற தெளிவான கருத்தைத்தான் உருவாக்கும்.

**அறிஞர் கொய்தே (Goethe) கூறுகிறார்:**

குர்ஆனை எத்தனை முறை பார்த்தாலும் அது முதலில் அந்நியமாகத் தெரிகிறது; பிறகு புதுமையாகத் தெரிகிறது; அடுத்து ஒரு தென்றல் போல் மனதைக் கவர்ந்து செல்கிறது; மதிப்பச்சத்தை ஏற்படுத்துகிறது-அதனுடைய நடையழகு அதனுடைய கருத்துக்கு ஏற்ப கம்பீரமாகவும், வலுவானதாகவும், அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், அதன் மீது மதிப்பு கொள்ளச் செய்வதாகவும் அமைந்துள்ளது - இந்த நூல் இவ்வாறு காலங்காலமாக மக்கள் மீது தன் ஆதிக்கத்தை செலுத்தக் கூடியதாக இருக்கிறது.

**Quoted in T.P. Hughes Dictionery of Islam, P.526.**

**G.மார்கோலத் (Margolouth) கூறுகிறார்:**

உலகத்திலுள்ள பெரும் மதகிரந்தங்களில் குர்ஆன் திண்ணமாக முக்கிய இடத்தை வகிக்கிறது. உலகில் புரட்சி சகாப்தத்தைத் தோற்றுவித்த இந்த கிரந்தங்களில் அது இளைய வயது கொண்டதாக இருந்தபோதிலும் மக்களின் உள்ளங்களை மாற்றுவதிலும், பெரும்பெரும் மக்கள் கூட்டத்தையே வியக்கத்தக்க முறையில் மாற்றி அமைப்பதிலும் அதற்கு இணையான வேறு கிரந்தம் இல்லை. அது முற்றிலும் புதிய சிந்தனையை மக்கள் உள்ளத்தில் தோற்று விக்கிறது. நவீன பண்பாட்டை உருவாக்குகிறது. அது முதலில் அரேபிய பாலைவனத்தில் சிதறிக்கிடந்த மக்களை இலட்சியத்தைப் பேணும் குழுவாக ஒன்றிணைத்தது. அவர்களை மக்களில் சிறந்தவர்களாய் (Heroes)மாற்றியது. ஐரோப்பிய மக்களும் கிழக்கத்திய மக்களும் இன்றைக்கும் மதிக்கும் அளவுக்கு சமய, அரசியல் அமைப்புகளை அது தோற்றுவித்துள்ளது.

**Introduction to J.M.Rodwell's The Koran,New York: Every man's library 1977,p.VII**

**மாரீஸ் புகைல் (Maurice Bucaille) கூறுகிறார்:**

நாம் மேலே கூறிவந்த விபரங்கள், முஹம்மத்(ஸல்) குர்ஆனைப் புனைந்தார் என்று சொல்லப்படும் கூற்று அடிப்படையற்றது என்று தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கல்வி அறிவில்லாத ஒருவர், திடீரென சிறந்த இலக்கிய நயம் வாய்ந்த ஒரு கிரந்தத்தின் - இன்றைக்கும் அரபி இலக்கியத்தில் இணையற்று விளங்கும் ஒரு கிரந்தத்தின் ஆசிரியராய் ஆக முடியுமா? அதுமட்டுமல்ல, அந்த நூற்றாண்டில் வாழ்ந்த மனிதன் கற்பனை செய்தும் பார்த்திராத - இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் மகத்தான கண்டுபிடிப்புகளின் எதார்த்த நிலையை அன்றைக்கே அவரால் எப்படித் துல்லியமாகத் தெரிவிக்க முடிந்தது?

**-The Bible, The Qur'an and Science 1978,P.125**

டாக்டர் ஸ்டெயின் காஸ் (Steingass) கூறுகிறார்:

அதனுடைய வலிமையை இலக்கிய நயம் மற்றும் முன்கூட்டியே வைத்த சில துலாக்கோல்களைக் கொண்டு பார்க்கக் கூடாது. மாறாக, அன்று முஹம்மத் (ஸல்) அவர்களுடன் வாழ்ந்த தோழர்கள் மீது அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது, அந்த நாட்டு மக்களிடையே எத்தகைய மாற்றங்களை உருவாக்கியது என்பவற்றைக் கொண்டு அதன் வலிமையை நாம் கணிக்க வேண்டும். கருத்துகளில் முற்றிலும் மாறுபட்ட பரஸ்பர பகைமை கொண்ட மக்களின் உள்ளங்களை அது தொட்டு அவர்களின் உணர்ச்சிகளை மாற்றி, ஓர் இணக்கமான சமூகமாக பிணைத்தது என்பது வரலாற்று உண்மையாகும். இந்த உண்மையே அது அளவற்ற இலக்கிய நயம் கொண்ட வேதம் என்பதைத் தெளிவாக்குகிறது. பண்பாடற்ற மக்களை மிகவும் நாகரிகம் வாய்ந்த சமூகமாக மாற்றி வரலாற்றின் வெற்றிச் சிகரத்திற்கு அவர்களை இட்டுச் சென்றிருப்பதில் இருந்தே அந்த வேதத்தின் மகிமையை நாம் உணரலாம்.

**quoted in Hughe's Dictionary of Islam P.528**

ஆர்தர் ஜே.ஆர்பெர்ரி (Arthur J.Arberry) கூறுகிறார்:

குர்ஆனுடைய கருத்துக்களை வெளிக்கொணர்வதில் முன்னோர்கள் செய்த முயற்சிகளைவிட இன்னும் சிறப்பாகச்செய்ய நாடினேன். ஆனால் அரபி மொழியில் குர்ஆனில் இருக்கும் அழகையும் ஆழத்தையும் நேர்த்தியையும் மிகக் குறைவாகவே என்னால் கொண்டுவர முடிந்தது. மிகத் துல்லியமாக பின்னிப் பிணைந்து நிற்கும் ஓசைகளை நான் ஆழமாக கவனித்தேன். குர்ஆனில் இருக்கும் கருத்தழகுக்கு சற்றும் குறைந்ததல்ல அதன் இசைநயம் என்பதை உணர்ந்தேன். உலக இலக்கியங்களிலேயே குர்ஆனை இவை இணையற்ற ஒன்றாக விளங்கச் செய்கின்றன. குர்ஆனின் இந்த விநோதமான அம்சம் அதற்கேயுரிய தனிப்பாணியாகும். பிறரால் முற்றிலும் கையாள முடியாத பாணியாக அது இருக்கிறது.

அதனுடைய சொற்களின் ஓசைநயமே மக்களின் கண்களை கசியச் செய்கிறது. உள்ளங்களைப் பரவசமடையச் செய்கிறது' என்று பிக்தால் தம் மொழி பெயர்ப்பில் சொன்ன கருத்து எந்த வகையிலும் மிகையானதல்ல.

**-The Koran Interpreted, london: Oxford University Press, 1964, P.X.**

**ஸர்.வில்லியம் மூர் (Sir William Muir) கூறுகிறார்:**

குர்ஆன் இஸ்லாத்தின் மாபெரும் சாதனையாகும். அதன் ஆதிக்கம் சமயம், ஒழுக்கம், விஞ்ஞானம் போன்ற அனைத்து துறைகளிலும் படர்ந்து நிற்கிறது - குர்ஆன் அனைத்துக்கும் மேலானது என்று ஏற்றுக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லை.

**The life of Mohammed, London 1903, Ch. The Coran P.VII.**

**வில்லியம் மூர் கூறுகிறார்:**

12 நூற்றாண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும் தான் அருளப்பட்ட காலத்தில் இருந்தது போலவே இன்றளவும் தூய்மையுடன் விளங்கும் நூல் (குர்ஆனைத்தவிர) வேறு எதுவும் இல்லை.

# 3

# இஸ்லாம் - ஓர் இணையற்ற மார்க்கம்!

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இஸ்லாமிய அறநெறி முன்னர் அருளப்பட்ட சமயங்களின் தொடர்ச்சியும், இறுதியும், முழுமையும் ஆகும். ஆகையால் இது எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக அமைந்துள்ளது. பகிரங்கமான பல ஆதாரங்கள் இஸ்லாத்தின் இந்த அந்தஸ்தை உறுதி செய்கின்றன. இறக்கியருளப்பட்ட நிலையிலேயே இன்றும் தூய்மையாக இருக்கும் ஒரு வேதம் - (குர்ஆனைத் தவிர) உலகில் வேறு எந்த வேதமும் இல்லை. இரண்டாவதாக, எல்லாக் காலத்திலும் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் பொருத்தமான வழிகாட்டுதல் தருவதாக வேறெந்த அருள் நெறியும் வாதிடவில்லை. ஆனால் இஸ்லாமோ முழு மனிதகுலத்தையும் நோக்கிப் பேசுகிறது. மனித வாழ்வின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் அடிப்படை வழிகாட்டுதலை வழங்குவதாக வாதிடுகிறது. அது மட்டுமல்ல 14 நூற்றாண்டுகளாக இதனை நிரூபித்தும் வருகிறது. இக்கால கட்டத்தில் ஏற்பட்ட சோதனைகளில் அது வெற்றி பெற்றுள்ளது. அத்துடன் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் தலைமையின் கீழ் நிறுவப்பட்டதைப் போன்று ஒரு முன்மாதிரியான சமுதாய அமைப்பை உருவாக்கும் எல்லா ஆற்றல்களையும் அது இன்றும் பெற்று நிற்கிறது.

போதிய உலகாதாய வசதியின்றியே முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் தம் கடும் பகைவர்களை வென்று இஸ்லாமியப் பாதையில் அவர்களைக் கொண்டு வந்தது மாபெரும் அதிசயமாகும். சிலை வணக்கவாதிகள், மூதாதையரின் பாதையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியவர்கள், இனச் சண்டைகளுக்குத் தூபமிட்டவர்கள், மனித கண்ணியத்திற்கு குழிதோண்டியவர்கள், வீணாக இரத்தம் சிந்தியவர்கள் - ஆகிய அனைவரும் இஸ்லாம் மற்றும் முஹம்மத் நபியின் தலைமையில் மிகச் சிறந்த ஒழுக்க சீலர்களாய் - ஒன்றுபட்ட மக்களாய் இணைந்தனர். ஆன்மீக, ஒழுக்க நிலையின் உச்சகட்ட பரிமாணத்தை இஸ்லாம் அவர்கள் முன் திறந்து காட்டியது. சிறப்பு மற்றும் பெருமைக்கு அடிப்படையாக ஒழுக்கத்தை மட்டுமே கொள்ள வேண்டும் என அறிவித்ததன் வாயிலாக மனித மாண்பின் எல்லையை இஸ்லாம்

தொட்டுக்காட்டியது. மனித இயல்பு எந்தக் காலத்திலும் மாறாத தன்மையுடையது. மனித இயல்புக்கேற்ற அடிப்படை விதிகளையும் தத்துவங்களையும் கூறி சமூக, கலாச்சார, ஆன்மீக, வணிக துறைகளை செழுமைப்படுத்துவதால் இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் அறநெறியாய் விளங்குகிறது.

நவீன கால முஸ்லிமல்லாத அறிஞர்கள் சிலர் இஸ்லாத்தைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஒதுங்கிச் செல்லும் துறவு மனப்பான்மைக்குப் பதிலா பிரச்னைகளைத் துணிச்சலுடன் சந்திக்கும் மனோபாவத்தை இஸ்லாம் உருவாக்கியது. அடிமைகளுக்கு நம்பிக்கையும் மனித குலத்திற்கு சகோதரத்துவத்தையும் அளித்து மனித இயல்பின் அடிப்படைத் தன்மையை அங்கீகரித்தது.

**Canon Taylor, Paper read before the Church Congress at Walver hamton, Oct. 7, 1887, Quoted by Arnod in The preaching of Islam. P.P. 71-72.**

இஸ்லாம் தோற்றுவித்த உன்னத மரபுகளில் ஒன்று நீதி மற்றும் நியாய உணர்வாகும். குர்ஆனை நான் ஆய்ந்து படித்தபோது அது அறிவுறுத்திய புரட்சிகரமான கொள்கைகள், வெற்று ஞானமாக அல்லாமல் வாழ்வின் நடைமுறை போதனையாக - நடைமுறை வாழ்வுக்கு இசைவானதாக, முழு உலகிற்கும் பொருந்தக் கூடியதாக இருப்பதைக் கண்டேன்.

**Sarojini Naidu, Lectures on ""The Ideals of Islam" see Speeches and Writings of Sarojini Naidu, Madras 1918, p. 167**

'வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் மீது வாள்முனையில் இஸ்லாத்தை முஸ்லிம் வெறியர்கள் திணித்தனர்' என்பது சில சரித்திர ஆசிரியர்கள் மிகச் சாதுர்யமாக மீண்டும் மீண்டும் சொல்லிவந்த செய்தியாகும். ஆனால் இந்தக் கருத்தோ-கற்பனையே ஆகும்; அதுவும் அபத்தக் கற்பனையே ஆகும்.

**De Lacy O'Leary,**

**Islam at the Crossroads, London**

**1923, P.8**

ஆனால் இஸ்லாம் மனிதகுலத்துக்கு இன்னும்மோர் சேவையினை ஆற்றவேண்டியுள்ளது. ஐரோப்பாவை விட கிழக்கு நாடுகளுக்கு மிக அருகில் இஸ்லாம் நிற்கிறது. இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் இஸ்லாம் ஓர் அழுத்தமான பின்னணியைக் கொண்டுள்ளது. பல்வேறுபட்ட இனங்களைச் சார்ந்த மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு சம அந்தஸ்து, சமவாய்ப்பு, முயற்சிகளுக்கான சம உரிமை வழங்குவதில் இஸ்லாமியச் சமூகம்

கண்டுள்ள வெற்றிக்கு இணையான சாதனையை வேறு எந்தச் சமூகமும் பெற்றிருக்கவில்லை. மரபுகளுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்தும் வலிமை இன்றும் இஸ்லாத்திடம் இருக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் இன்று மோதிக் கொண்டிருக்கும் பெரும் சமூகங்கள் ஒற்றுமை-ஒத்துழைப்புக்கான சூழ்நிலையை ஏற்படுத்த விரும்பினால் அதற்கு இஸ்லாம் மிகச் சிறந்த கருவியாக- தவிர்க்க முடியாத வழிமுறையாக இருப்பதை அவர்கள் காண்பார்கள். ஐரோப்பாவுக்கும் கிழக்கு நாடுகளுக்கு மிடையிலான உறவில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்னைகளுக்கும் இஸ்லாத்தின் கரங்களில் தீர்வுகள் உண்டு. அந்த இருபெரும் சமூகங்களும் ஒன்றுபட்டால் அமைதியான சூழ்நிலை உருவாகும் வாய்ப்புக்கள் பன்மடங்கு பெருகிவிடும். இந்தச் சாதனை புரிய இஸ்லாத்தின் உதவியைப் புறக்கணித்து, அதற்கு விரோதமான போக்கினை மேற்கொண்டால் இருவருக்குமே அழிவுதான் நிச்சயம்.

**H.A.R. Gibb, Whither Islam,**
**London, 1932, P.379**

நான் முஹம்மதின் சமயத்தை மிக உயர்ந்த நிலையில் மதிக்கின்றேன். ஏனெனில் இஸ்லாத்தில் வியக்கத்தக்க ஆற்றல்கள் இருக்கின்றன. கால மாற்றங்களைத் தன்னுள் இணைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ள, மேலும் ஒவ்வொரு யுகத்தின் மக்களையும் ஈர்க்கும் தன்மையைக் கொண்டுள்ள ஒரே மார்க்கம் இது ஒன்றுதான் என எனக்குத் தோன்றுகிறது. நான் இந்த அதிசய மனிதர் பற்றி படித்திருக்கிறேன். இவர் கிறிஸ்துவுக்கு விரோதமானவரல்லர் என்பதே என் கருத்து. முஹம்மதை மனிதகுல மீட்பாளர் என்றே கண்டிப்பாக அழைக்க வேண்டும். அவரைப் போன்ற மனிதர்கள் நவீன உலகின் சர்வாதிகாரியாக அமருவாரேயானால் இன்று தேவைப்படும் அமைதி மற்றும் மகிழ்வை அளித்திடும் வகையில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் வெற்றி பெறுவார். இன்றைய ஐரோப்பாஇதனை ஒப்புக் கொள்ளத் துவங்கியிருப்பதைப் போன்றே நாளைய ஐரோப்பாவும் முஹம்மதின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளும் என நான் முன்னறிவிப்புச் செய்கிறேன்.

**G.B. Shaw, the Genuine Islam,**
**Vol.1, No.81936**

முஸ்லிம்களுக்கிடையில் இன உணர்வுகள் இல்லாமல் செய்திருப்பது இஸ்லாத்தின் மாபெரும் சாதனையாகும். எனவே இஸ்லாத்தின் இந்தச் சிறப்புகளைப் பரவலாக்குவது இன்றைய உலகின் அவசியத் தேவையாகும்.

**A.J. Toynbee, Civilization of**
**Trail, New York, 1948, P.205.**

இஸ்லாத்தின் எழுச்சி மனிதகுல வரலாற்றில் மிக வியக்கத்தக்க நிகழ்ச்சியாக விளங்கிறது. மிகவும் பின்தங்கிய - அவல நிலையிலிருந்த ஒரு நாட்டைச் சேர்ந்த மக்களிடமிருந்து புறப்பட்ட இந்த எழுச்சி ஒரு நூற்றாண்டிற்குள்ளேயே பூமியின் பாதி நிலபரப்பிற்கும் அதிகமாகப் பரவிவிட்டது.

எந்த அளவு நுணுக்கமாக இதன் வளர்ச்சியை நாம் ஆராய்கின்றோமோ அந்த அளவுக்கு அசாதாரணமாய் அது நமக்குத் தோன்றுகின்றது. இதர பெரும் மதங்களின் நிலை என்ன? அவை மிக மெதுவாகவே பரவின. அதற்கும் கடும் போராட்டம் தேவைப்பட்டது. இறுதியில் வலிமை வாய்ந்த மன்னர்களின் துணை கொண்டே அவை வெற்றி பெற்றன. கான்ஸ்டான்டைன் துணை கொண்டு தான் கிறிஸ்தவமதம் தழைத்தது. அசோகரின் துணை புத்தமதம் மேலோங்கியது. சைரஸுக்குப் பிறகுதான் ஜொராஸ்ட்ரியனிஸம் பெருகியது. ஒவ்வொருவரும் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட மத ஈடுபாட்டுக்காக ஆட்சியதிகாரத்தை அளித்தனர். ஆனால் இஸ்லாத்தின் நிலை அவ்வாறல்ல. வரலாற்றில் இதற்கு முன் எந்தச் சிறப்பும் பெற்றிராத நாடோடிகளாய் பாலைவனங்களில் சிதறிவாழ்ந்த மக்களிடையே அது தோன்றியது. மிகக் குறைவான ஆள்பலத்தைக் கொண்டிருந்த போதிலும் வலிமைமிகுந்த உலகாயத சக்திகளின் எதிர்ப்புகள் இருந்தபோதிலும் அது மின்னல் வேகத்தில் பரவத் தொடங்கியது. வியக்கத்தக்க முறையில் அது வெற்றிகளை நிலைநாட்டியது. இரண்டு தலைமுறைக்குள்ளாகவே மத்திய ஆசிய பாலைவனத்திலிருந்து ஆப்பிரிக்க பாலைவனம் வரையிலும், இமயத்திலிருந்து பயர்நீஸ் வரையிலும் அது பரவிவிட்டது.

**A.M.L. Stoddard, Quoted in.**
**Islam- The Religion of All Prophets,**
**Begum Bawani Waqf, Karachi.**
**Pakistan P.56**

வரலாறு மற்றும் சொல்லகராதி ரீதியில் பரந்துபட்ட விளக்கத்தில் பார்த்தால் இஸ்லாம் அடிப்படையில் ஒரு பகுத்தறிவு மார்க்கம் என்பது விளங்கும். சமய நம்பிக்கைகளை காரணகாரிய அடிப்படையில் வரையறுக்கும் அமைப்பாக பகுத்தறிவு வாதத்தைக் கொள்வோமேயானால் அது இஸ்லாத்திற்குப் பொருந்தி வருவதைப் பார்க்கலாம். இன்றைய முஸ்லிம் சமுதாய வாழ்வில் பலவிதமான மூடநம்பிக்கைகள் ஊடுருவியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. மகான்களை பூஜிப்பதிலிருந்து ஜெபமாலை, தாயத்துக்கள் அணிவது வரை பலவிதமான மூடநம்பிக்கைகள் இன்று முஸ்லிம்களிடம் காணப்படுகின்றன. அவை அனைத்தும் முஸ்லிம் சமய நம்பிக்கையில் வெளியிலிருந்து புகுந்தவையே! அவை எவ்வளவு ஊடுருவியிருந்தாலும் அண்ணலாரின் அறிவுரைகளிலும், குர்ஆனின் ஒவ்வொரு வாக்கிலும் அதன் அடிப்படைத் துவக்கமான ஓரிறைக் கொள்கையே மிகவும் அழுத்தமாகவும் தெளிவாகவும் தூய்மையாகவும் தனித் தன்மையுடனும்

காணப்படுகின்றது. மேலும் இக் கொள்கை மனித உள்ளத்தில் ஆழமாகப் பதிக்கும் அளவுக்கு குர்ஆனும் நபிமொழிகளும் வலிமை வாய்ந்தவையாக விளங்குகின்றன. இத்தகைய உறுதியையும் தெளிவையும் இஸ்லாமிய வட்டத்திற்கு வெளியே காண்பது அரிது. மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கை மீது கொண்டுள்ள இத்தகையப் பற்றும் தெளிவும், பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அது அமைந்திருக்கும் பாங்கும், அதனைப் பேணுபவர்கள் தளரா ஆர்வத்துடன் செய்யும் பிரச்சாரத்தினால் ஏற்படும் தாக்கமும் முஹம்மதிய மார்க்கத்தின் வெற்றிக்கு வழிவகை செய்யும் சில மூல காரணங்களாகும். கொள்கையை மிகத் துல்லியமாக தெளிவாக இஸ்லாம் எடுத்துரைக்கிறது. எளிதற்ற- கடுமையான சமயக் கருத்தோட்டங்கள் எதையும் அது கொண்டிருக்கவில்லை. இதனால் பாமரமனிதனுக்கு புரியக்கூடியதாயும் அது இருக்கிறது.

நடைமுறையில் அது கோடிக்கணக்கான மனிதர்களின் மனசாட்சியை ஈர்த்துக் கொண்டும் இருக்கிறது.

**-Edward Monetel. ""Lapropagande"**
**Cretienne et ses Adversaries**
**Mussulmans" Paris 1890 Quoted**
**by T.W. Arnold The Preaching of**
**Islam, London 1913 PP413-414**

இறைவனுக்கு அடிபணிபவன் எனும் வகையில் என்னை நான் முஸ்லிமாகக் கருதினாலும் வழக்கமான பொருள்மரபில் நான் முஸ்லிமல்ல. ஆனாலும் குர்ஆனிலும் இஸ்லாமியக் கண்ணோட்டத்திலும் காணக்கிடைக்கும் இறையுணர்வுச் செய்திகளிலிருந்து நானும் ஏனைய மேற்குலக அறிஞர்களும் ஏராளமான படிப்பினைகளைப் பெற வேண்டியுள்ளதாகவே நான் நம்புகிறேன். உலகமக்கள் எதிர்காலத்தில் ஒரே சமயத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் அதற்கு இஸ்லாம் போதிய வலுவான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என உறுதியாகச் சொல்லலாம்.

**W.Montgomery Watt, Islam and**
**Christianity Today, London**
**1983, PIX**

இஸ்லாத்தையும் வாளையும் இணைத்துச் சொல்லப்படுவதை இப்போது எந்தப் பகுதியிலும் அடிக்கடி கேட்க முடிவதில்லை. மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது எனும் இஸ்லாமியக் கொள்கை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். உலகப் புகழ் பெற்ற சரித்திர ஆசிரியர் கிப்பன் கூறுகிறார்: மற்ற மதங்களை வாள்

வலிமையால் அழித்துவிடுவது தங்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாக முஹம்மதியர்கள் கருதினர் என்று கூறுவ து பொல்லாத கூ ற்றமாகும்.

அந்தப் புகழ்பெற்ற சரித்திர ஆசிரியர் மேலும் கூறுகிறார்: கற்பனையால், அறியாமையால் எழும் இந்தக் கூற்றை திருக்குர்ஆன் வலிமையாக மறுக்கிறது. கிறிஸ்துவ வழிபாடுகளுக்கு சட்டரீதியான, பகிரங்கமாக அனுமதி வழங்கி சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்ட முஸ்லிம் ஆட்சியாளர்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். முஹம்மதின் வாழ்க்கையில் கிடைத்த வெற்றி வாள் வலிமையால் பெறப்பட்டதல்ல; ஒழுக்க வலிமையால் பெறப்பட்டதே!

**Prof. Ramakrishna Rao, Muhammad the Prophet of Islam, Page 4.**

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த புகழ்பெற்ற இந்துமத அறிஞர் சுவாமி விவேகானந்தர் இஸ்லாத்தைக் குறித்து தம் கருத்தை இவ்வாறு எழுதுகிறார்:

மற்ற அனைத்து மக்களையும் விட அத்வைதக் கொள்கை தங்களுக்கு முன்னரே அறிமுகமாகியிருப்பதற்கு இந்துக்கள் பெருமை அடையலாம். ஆயினும் நடைமுறை அத்வைதம்-அதாவது மாந்தர்கள் அனைவரையும் தம்மைப் போல் சமமானவர் என்று பாவிப்பதும், அவ்வாறே நடந்துகொள்ளும் தன்மையும் இந்துக்கள் மத்தியில் அறவே மலரவில்லை. ஆனால் இத்தகைய சமத்துவத்தை ஒரு மதம் பாராட்டத்தக்க அளவில் அணுகியிருக்கிறதென்றால் அது இஸ்லாம் மட்டுமே என்று நான் அனுபவப்பூர்வமாய்க் கூறுகிறேன்.

நான் அழுத்தமாய்ச் சொல்கிறேன். நடைமுறைக்கு இசைவான இந்த இஸ்லாமியச் செயல்பாடின்றி வேதாந்த கருத்துக்கள் - அது எவ்வளவுதான் சிறப்பானதாக, பெருமைக்குரியதாக இருந்தாலும் - பரந்து கிடக்கும் மனிதகுலத்துக்கு அது பயனற்றதாகவே அமையும்.

**Letters of Swami Vivckananda P. 463**

இஸ்லாம் என்றால் என்ன? இன்றைக்கு உலகில் செயல்படும் ஒரே ஜனநாயக நெறி என்றே இஸ்லாத்தை நானும் மற்ற சிந்தனையாளர்களும் கருதுகிறோம். நான் ஓர் இந்து. இந்து சமய நம்பிக்கையில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்தாலும் நான் இதனை தைரியமாகவே கூறுகிறேன். மனிதகுலம் ஒன்றே என்பது இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமாக இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் எனது சொந்தமதம் வெற்றி பெறவில்லை. இறைவன் முன் மனிதர்கள் அனைவரும் சமமே எனும் அடிப்படைச் சிந்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இஸ்லாத்தின்

செய்முறையைப் போன்று வேறெந்த மதமும்-அவற்றின் மதக்கருத்தோட்டம் எதுவாயினும் சரியே- கடைப்பிடிக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவின் போயர் இனமக்கள் பிரச்னை, ஆஸ்திரேலியா அல்லது தென் அமெரிக்க நாடுகள் அல்லது இங்கிலாந்தின் பல்வேறுதரப்பட்ட இனமக்களின் பிரச்னைகள் போன்று இஸ்லாத்தில் எத்தகைய இனப் பிரச்னைகளும் இருக்கவில்லை.

**Sir C.P. Ramaswamy Iyer,**

**Eastern Times, 22nd December, 1944**

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஐரோப்பியர்கள் இஸ்லாம் பரவிவிடும் என்று பயப்படுவதாக சிலர் கூறினார்கள். இஸ்லாம் ஸ்பெயினுக்கு நாகரிகத்தைக் கற்றுத் தந்தது; மொராக்கோவுக்கு ஒளியை கொண்டு வந்தது: உலகுக்குச் சகோதரத்துவம் எனும் கொள்கையை போதித்தது. தென் ஆபிரிக்காவில் உள்ளவர்கள் வெள்ளை இனத்தாருடன் சமஉரிமை கோரக் கூடும் என்பதால் தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஐரோப்பியர்கள் இஸ்லாமின் வருகைக்காக அஞ்சுகிறார்கள். அவர்கள் நன்றாகப் பயப்படலாம். சகோதரத்துவம் என்பது பாவம் என்றால், கறுப்பு நிறத்தவர்களுடன் சமத்துவத்திற்காக அவர்கள் அஞ்சினால் அந்த அச்சத்துக்குக் காரணம் உண்டுதான்.

**Mahatma Gandhi Quoted in**

**Muhammed The Prophet of the Islam:**

**by Ramakrishna Rao. Page 8.**

# 4

# முஹம்மத் (ஸல்) அவர்கள்: ஓர் அழகிய முன்மாதிரி!

சிலுவைப்போர்கள் நடைபெற்று வந்த நூற்றாண்டுகளில் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு எதிராக எல்லாவகையான அவதூறுகளும் பழிச் சொற்களும் புனையப்பட்டு பரப்பப்பட்டு வந்தன. ஆனால் மதசகிப்புத் தன்மை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைத் தனது தனித் தன்மையாகக் கொண்ட நவீனயுகம் பிறந்தது! அத்துடன் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வையும் பண்புகளையும் விவரிப்பதில் மேலை நாட்டு அறிஞர்களின் அணுகுமுறை பெருமளவிற்கு மாறிவிட்டிருக்கின்றது. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி பிற சமய அறிஞர்களின் கருத்துக்கள் இந்தச் சிற்றேட்டில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அந்த அறிஞர்களைப் பற்றி மேலே நாம் தெரிவித்த கருத்து நியாயமானதே என்பதை அவை காட்டுகின்றன. ஆனால் மேற்குலகம் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றிய மாபெரும் உண்மையொன்றைக் கண்டுபிடிக்க இன்னும் ஒரு படி மேலே செல்ல வேண்டியுள்ளது. முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான இறுதித்தூதர், மனிதகுலம் முழுமைக்கும் வழிகாட்டிட வந்த இறைத்தூதர் என்பதே அந்தப் பேருண்மையாகும்.

உணர்ச்சி கலவாத ஆய்வுநோக்கு, ஆழமான சிந்தனை ஆகியவற்றை மேற்குலகம் பெற்றிருந்தும் முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைத்தூதுத்துவ அந்தஸ்தைப் புரிந்துகொள்ள ஆய்வுரீதியான, நேர்மையான முயற்சி எதனையும் இதுவரை அதுமேற்கொள்ளவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாணயம், நேர்மை மற்றும் சாதனைகளுக்காக மேற்கத்திய அறிஞர்கள் அண்ணலாரைப் போற்றிப் புகழ்கின்றார்கள். ஆனால் தாம் இறைவனின் தூதர் என்று அண்ணலார் சமர்ப்பித்த வாதம் - அழைப்பு இவர்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில்தான் இவர்கள் தங்களின் நிலையை மறுபரிசீலனை செய்து, வாய்மையான உளப்பூர்வமான ஆய்வை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து தெள்ளத்தெளிவான சில உண்மைகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவர்களின் தூதுத்துவம் குறித்து

ஆய்வுரீதியான, பாரபட்சமற்ற, தர்க்கரீதியான முடிவை மேற்கொள்ள அவை உதவும். முஹம்மத் (ஸல்) அவர்களை அவர்களுடைய நாற்பதாவது வயது வரை - ஓர் அரசியல் வித்தகராகவோ, போதகராகவோ, பேச்சாளராகவோ எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் இயற்பியலுக்கு அப்பாற்பட்ட (ஆன்மீக இறையியல்) விஷயங்களைக் குறித்தோ, ஒழுக்கவியல், சட்டம், அரசியல் பொருளாதாரம் அல்லது சமூகவியல் போன்ற துறைகளைக் குறித்தோ, அவற்றின் அடிப்படைக் கொள்கைகள் குறித்தோ விவாதித்துக் கொண்டிருந்ததை அதுவரை எவருமே கண்டதில்லை. அவர்கள் நிச்சயம் மிக உயர்ந்த ஒழுக்கப்பண்புகளும் வசீகரமான பழக்கவழக்கங்களும் உயர்ந்த பண்பாடும் கொண்டவர்களாகவே திகழ்ந்தார்கள். எனினும் வருங்காலத்தில் மாபெரும் புரட்சியாளராய் -மனித வரலாற்றையே மாற்றி அமைக்கக்கூடியவராய் அவர்கள் திகழக்கூடும் என்று மற்றவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அசாதாரணமான விஷயம் எதுவும் அவர்களிடம் தென்படவில்லை. ஆனால் அவர்கள் மகத்தான ஒரு புதிய செய்தியை ஏந்திக்கொண்டு அந்த மலைக்குகையில் இருந்து (ஹிரா) வெளியே வந்த போது முற்றிலும் மாற்றப்பட்டுத்தான் இருந்தார்கள்.

மேற்கண்ட உயர்ந்த பண்புகளுடைய ஒருவர், தம்மை இறைத்தூதர் என பொய்யாக வாதித்து, திடீரென மக்களை ''ஏமாற்றக்கூடியவராய்'' ஆக முடியுமா? இதன் மூலம் தம் சமுதாய மக்களின் கோபத்திற்கும் எதிர்ப்பிற்கும் தம்மை உட்படுத்திக் கொள்ளவும் முன்வருவாரா? இந்தத் துன்பங்களையெல்லாம் அண்ணல் நபிகள் எதற்காகச் சகித்தார்கள் என்கிற கேள்வி ஒருவருடைய உள்ளத்தில் எழலாம். அவர்களுடைய சமுதாய மக்கள் அவர்களைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்கள்.' தமது நாட்டின் செல்வவளங்களையெல்லாம் அவர்களின் காலடியில் கொண்டு வந்து குவிப்பதாய்க் கூறினார்கள். ஆனால் இவற்றுக்குப் பகரமாக அவர்கள் தமது மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்வதை மட்டும் விட்டு விட வேண்டும் என்று கோரினார்கள். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களின் கவர்ச்சிகரமான வெகுமதிகளையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டு தன்னந்தனியாக நின்று தமது சொந்த சமூகத்தார் தமக்கிழைத்த கொடுமைகள், அவமதிப்புகள், தமக்கெதிரான பகிஷ்காரம் மற்றும் தமது உடல் மீதான தாக்குதல்கள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு, தமது மார்க்கத்தையும் பிரச்சாரம் செய்து கொண்டேயிருந்தார்கள். இஸ்லாம் தான் மனித குலத்திற்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒரே நெறியாகும்; இறுதியில் அதுவே வெற்றி பெறும் எனும் நம்பிக்கை அவர்களிடம் ஆழமாகப் பதிந்திருந்தது. அத்துடன் வல்ல இறைவனின் பெருந்துணையும் அவர்களுக்கு இருந்தது. அதனால்தான் தம்மை அழிப்பதற்காகச் செய்யப்பட்ட எல்லா சதித் திட்டங்களுக்கும், தமக்கு நேரிட்ட எல்லா எதிர்ப்புகளுக்கும் அசைந்து கொடுக்காத கொள்கைக்குன்றாக அவர்கள் நிமிர்ந்து நின்றார்கள். மேலும், அவர்கள் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் போட்டி சக்தியாக - அவர்களுக்கு எதிரானவர்களாக வருகைதந்திருப்பார்களாயின்

இயேசுவின் மீதும் மோசஸின் மீதும் மற்ற இறைத் தூதர் மீதும் நம்பிக்கை கொள்வது அவசியம் என்று கூறியிருப்பாரா? இவ்வாறு மற்ற நபிமார்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் எவரும் முஸ்லிமாக இருக்க முடியாது என்கிற அளவிற்கு அதனை இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாக வலியுறுத்தியிருப்பாரா?

எழுதப் படிக்கத் தெரியாதவராகவும் நாற்பதாண்டு காலம் வரை அமைதியான சாதாரணமான ஒரு வாழ்க்கையை நடத்தி வந்தவராகவும் இருந்தும் அவர்கள் தாம் கொண்டு வந்த இறைச் செய்தியை மக்களிடையே பிரச்சாரம் செய்யத் தொடங்கிய போது அரபுலகம் முழுவதும் மதிப்பச்சத்துடனும் வியப்புடனும் அவர்களை ஊன்றி கவனித்தது. அவர்களுடைய வசீகரமான நாவன்மையாலும் உயர் ஆற்றல்களாலும் ஈர்க்கப்பட்டது. அரபுக் கலைஞர்கள், போதகர்கள், சொல்லேருழவர்களின் பெரும் படைகளெல்லாம் ஒன்று சேர்ந்தும்கூட அவர்களுடைய சொற்பொழிவுக்கு நிகரான ஒரு சொற்பொழிவைச் சமர்ப்பிக்க முடியவில்லை. அந்த அளவிற்கு அவர்களின் சொல்வன்மை நிகரற்றதாய் இருந்தது. இவையனைத்தும் அவர்களின் தூதுத்துவம் உண்மையானதே என்பதற்கான மறுக்க முடியாத சான்றுகள் அல்லவா?

இறுதியாக அவர்கள் ஆட்சியதிகாரத்தை அடைந்துவிட்ட பின்னரும் கூட எளிமையான கடினமான வாழ்க்கையை ஏன் வாழ வேண்டும்? அவர்கள் மரணமடைந்த போது சொன்ன இறுதி நேரச் சொற்களை சற்றுச்சிந்தித்துப் பாருங்கள்; ''நபிமார்களுக்கு (சொத்துக்கான) வாரிஸ்கள் எவருமில்லை. நாங்கள் விட்டுச் செல்லும் செல்வம் எதுவாயினும் அவை அறப்பணிகளுக்காக செலவிடப்பட வேண்டியவையே!''

## *நபிகள் நாயகம் பற்றி நல்லறிஞர் கருத்துக்கள்.*

உயர்ந்த குறிக்கோள், குறைவான சிறிய அளவிலான வசதி வாய்ப்புக்கள், பிரமிக்க வைக்கும் பலன்கள் ஆகிய இம்மூன்றும் தான் மனித நுண்ணறிவை, மனித ஆற்றலை அளந்திடும் அளவுகோல்கள் என்றால் நவீன வரலாற்றின் எந்த மாமனிதரையும் முஹம்மத் (ஸல்) அவர்களுடன் ஒப்பிட எவருக்குத்தான் துணிச்சல் வரும்? புகழ் மிக்க மனிதர்களெல்லாம் ஆயுதங்களை உருவாக்கினார்கள்; சட்டங்களை இயற்றினார்கள்; பேரரசுகளை நிறுவினார்கள். அவர்கள் செய்ததெல்லாம் இவைதாம்! பெரும்பாலும் நமது கண்களின் முன்பே சிதைந்து விழுந்துவிட்ட உலகாயதக் கோட்டைகளைத் தான் அவர்களால் நிறுவ முடிந்தது. ஆனால் முஹம்மத் (ஸல்)அவர்களோ போர்ப்படைகள், சட்டமியற்றும் சபைகள், பேரரசுகள், மக்கள் சமுதாயங்கள், அரச வம்சங்கள் ஆகியவற்றை மட்டும் பாதித்து அவற்றை மட்டுமே வெற்றி கொள்ளவில்லை. அன்றைய உலகின் மூன்றிலொரு நிலப்பரப்பில் வசித்து வந்த கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை ஈர்த்தார்கள். வழிபாட்டுத் தளங்களையும் சமய நெறிகளையும் பல்வேறு கருத்துக்களையும், கொள்கைகளையும்,

நம்பிக்கைகளையும் ஆன்மாக்களையும் ஈர்த்து அவற்றில் தமது தாக்கங்களைப் பதித்தார்கள். வெற்றியின் போது அவர்கள் காட்டிய பொறுமை, பணிவு, சகிப்புத்தன்மை தாம் ஏற்றுக் கொண்ட ஒரு கருத்துக்காக தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அவரது உயர்நோக்கம், ஆழ்ந்த விருப்பம், அரசாட்சியை அடைந்திட வேண்டும் என்ற குறுகிய எண்ணம் கொள்ளாமல் உலகப்பற்றற்று வாழ்ந்து வந்த நிலை, அவர்களின் முடிவேயில்லாத தொழுகைகள், பிரார்த்தனைகள், இறைவனுடன் அவர்கள் நடத்தி வந்த மெஞ்ஞான உரையாடல்கள், அவர்களின் மரணம், மரணத்திற்குப் பின்னரும் அவர்கள் அடைந்த வெற்றி இவையனைத்துமே அவர்கள் ஒரு ஏமாற்றுக்காரர் என்றோ 'மோசடிகுணம்' உடையவர் என்றோ பறைசாற்றிடவில்லை; மாறாக சமயக் கொள்கை ஒன்றை நிலைநாட்டிட அவர்களுக்கிருந்த மனோ உறுதியைத்தான் பறைசாற்றுகின்றன.

இந்த சமயக் கொள்கை இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, இறைவனின் ஒருமை; மற்றொன்று இறைவனின் ஸ்தூலப் பொருளற்ற தன்மை. முந்தியது இறைவன் என்றால் என்னவென்று எடுத்துரைக்கின்றது. பிந்தியது இறைவன் என்னவாக இல்லை என்பதைத் தெரிவிக்கின்றது. ஒன்று தவறான கடவுள்களைத் தனது பலத்தால் தூக்கியெறிகின்றது. மற்றொன்று பிரச்சார துணையால்ஒரு புதிய கருத்தை உருவாக்க விழைகின்றது. தத்துவப் போதகர், சொற்பொழிவாளர், இறைத் தூதர், சட்ட நிபுணர், மாபெரும் போர்வீரர், கருத்துக்களை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுப்பூர்வமான கொள்கைகள், நம்பிக்கைகளை நிலைநாட்டியவர், மாயைகள் கவர்ச்சிகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கை வழி நாகரிகத்தை உருவாக்கியளித்த மாமேதை, ஒரே ஆன்மீக தலைமையில் இருப்பது பூவுலகப் பேரரசுகளின் நிறுவனர் தான் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

**Lamartine, Historie de la Turquie, paris 1854, vol II, PP, 276-77**

''அவர் ஒரே நேரத்தில் சீசரும் போப்பும் ஆவார்; ஆனால் அவர் போப்பின் பகட்டுகள், ஆடம்பரங்கள் எதுவுமில்லாத போப் ஆவார். சீசரின் பாதுகாப்புப்படைகள் எதுவுமில்லாத சீசர் ஆவார். தயார் நிலையிலுள்ள இராணுவமோ, நிலையான நிர்ணயமான வருமானமோ இல்லாமல் (மக்களின் உள்ளங்களையும் பெரும் நிலப்பரப்பையும்) வெறும் இறைவனின் இசைவாணையை, தெய்வீக அனுமதியை மட்டுமே துணையாகக் கொண்டு ஆட்சி புரிந்ததாகக் கூறிக் கொள்ளும் உரிமை, மனித வரலாற்றில் எவராவது ஒருவருக்கு இருக்குமானால், அவர் முஹம்மத் (ஸல்) அவர்களேயாவர்; ஏனெனில் ஆட்சி அதிகாரம் செலுத்திடத் தேவையான கருவிகள், துணைச்சாதனங்கள் எதுவுமில்லாமலேயே (ஆன்மீக மற்றும் உலக) அதிகாரங்கள் அனைத்தையும் அவர் பெற்றிருந்தார்.''

**Bosworth Smith, Mohammad and Mohammadanism, London 1874, P-92**

உலகின் மிகச் செல்வாக்கு வாய்ந்த மனிதர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பவராக நான் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது வாசகர்கள் சிலருக்கு வியப்பை அளிக்கலாம். சிலர் இதனைக் கேள்விக்குரியதாகவும் கருதலாம். ஆனால் (ஸல்) அவர்கள் தான் உலக வரலாற்றிலேயே சமயத்துறை, உலகியல் துறை இரண்டிலும் மிகவும் வெற்றிகரமானவராகத் திகழ்ந்த மாமனிதர்''

**Michael H. Hart, the 100: A Ranking of the Most influential persons in History, New York: Hart publishing company, Inc. 1978, P.33.**

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது கொள்கைகளுக்காக எல்லாவித சித்திரவதைகளையும், கொடுமைகளையும் சகித்துக் கொண்டு அவர்களைத் தமது தலைவராகக் கருதிய அவர்களின் தோழர்களுடைய உயர்ந்த ஒழுக்கப் பண்புகளும் அவர்கள் இறுதியில் நிகழ்த்திய சாதனையின் மகத்துவமும் இவையனைத்தும் அவர்களின் அடிப்படையான நேர்மையை நம்பகமான தன்மையை நன்கு எடுத்துரைக்கின்றன. முஹம்மத் (ஸல்) அவர்களை ஏமாற்றுக்காரராகவும் மோசடிக்காரராகவும் கருதுவது பல பிரச்சினைகளையும் கேள்விகளையும் தான் எழுப்புகின்றதே தவிர பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியதாயில்லை; மேலும் உலக வரலாற்றின் மகத்தான மனிதர்களில் முஹம்மதைப் போல் மேற்குலகில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர்கள் வேறெவருமில்லை.''

**Mohammed at Mecca, Oxford 1932, P.52.**

தமக்கு முன்னால் வாழ்ந்த பெரும் இறைத்தூதர்கள் அனைவரையும் போலவே முஹம்மதும் தமது இயலாமையை உணர்ந்து, இறைச் செய்தியை ஏந்திச் சென்று மக்களிடையே எடுத்துரைப்பவராகப் பணியாற்றிட முதலில் தயங்கவே செய்தார். ஆனால் வானவர், 'ஓதுவீராக! என்று கட்டளையிட்டார். நாம் அறிந்தவரை முஹம்மத் எழுதவோ, படிக்கவோ இயலாதவராகவேயிருந்தார். பூமியின் ஒரு பெரும் பகுதியில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தயிருந்த இறைஉதிப்பான ''பேரண்டத்தின் இறைவன் ஒருவனே!'என்கிற சொற்களை அவர் அப்படியே எடுத்துக் கூறலானார்.

எல்லா விஷயங்களிலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மிகவும் செயல்பூர்வமானவர்களாய் - நடைமுறைப்படுத்திட உகந்த முறைகளில் செயல்படக் கூடியவர்களாய்த் திகழ்ந்தார்கள். அவர்களின் அன்பு மகனார் இப்ராஹீம் மரணமடைந்தபொழுது கிரகணம் ஒன்று நிகழ்ந்தது. உடனே இப்ராஹீமின் மரணத்திற்காக இறைவனே தனிப்பட்ட முறையில் துக்கம் தெரிவிக்கின்றான் என்ற வதந்திகள் எழுந்தன. ஆனால் முஹம்மதோ, ''கிரகணம் பிடிப்பது ஓர் இயற்கை நிகழ்வாகும்; இத்தகைய விஷயங்களை ஒரு மனிதரின் மரணத்துடனோ பிறப்புடனோ தொடர்புபடுத்திப் பார்ப்பது மூடநம்பிக்கையாகும்'' என்று அறிவித்தார். முஹம்மத்தின் மரணத்தின்போது கூட அவரைக் கடவுளாக்க முயற்சியொன்று

மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவருக்குப் பின் அவரின் நிர்வாக வாரிஸாக வரவிருந்த ஆபூபக்ரு சித்தீக் (ரலி) அவர்கள் சமய வரலாற்றிலேயே தலைசிறந்த சொற்பொழிவு ஒன்றின் வாயிலாக இந்த மனவியாதியை முளையிலேயே கிள்ளியெறிந்து விட்டார். அந்தச் சொற்பொழிவின் முக்கிய பகுதி இது: 'உங்களில் எவரேனும் இதுவரை முஹம்மத் (ஸல்) அவர்களை வணங்கிக் கொண்டிருப்பாராயின் அவர்கள், முஹம்மத் (ஸல்) இறந்துவிட்டார்கள் என்பதைத் தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள்! நீங்கள் இறைவனைத்தான் வணங்கிக் கொண்டிருந்தீர்கள் என்றால் அவன் என்றும் வாழ்பவன்; நிலைத்தவன் என்பதை அழுத்தமாக அறிந்து கொள்ளுங்கள்!''

**James A Michener, "Islam: The Misunderstood Religion' in the Reader's Digest (American Edition) in May, 1955, pp.68-70.**

அவர் தமது மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்தது வியப்புக்குரியதல்ல; மாறாக அது என்றும் நீடித்து நிலைத்திருக்கும் பாங்குதான் வியப்புக்குரிய ஒன்றாகும். மக்கா நகரிலும், மதீனா நகரிலும் அவர் வடித்தளித்த இஸ்லாத்தின் அதே அசல்வடிவம் தூய்மை கெடாமல், மாற்றப்படாமல், திரிக்கப்படாமல் பன்னிரண்டு நூற்றாண்டுகளில் நடந்தேறிய புரட்சிகள் பலவற்றிக்குப் பின்னரும் இன்றுவரை இந்திய, ஆப்ரிக்க, துருக்கியப் பகுதிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றது. சமயத்தைக் குறித்து, கற்பனை மற்றும் ஊகத்தின் அடிப்படையிலான கருத்தோட்டங்களிலிருந்து முஹம்மதியர்கள் ஒதுங்கியே நின்றனர். அவற்றை அடியோடு கிள்ளி எறிந்தும் விட்டார்கள்.

''நான் ஒரே இறைவன் மீது நம்பிக்கை கொள்கிறேன்; முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் திருத்தூதராவார்." என்பது தான் இஸ்லாத்தின் முன்மாதிரியான மாறுபாடற்ற ஒரேவிதமான பறைசாற்றலாகும். ஒருபுறம், கடவுள் பற்றிய அறிவார்ந்த கருத்தோட்டத்தின் மதிப்பு, கண்ணுக்குப் புலப்படும் உயிரினங்கள் சிலைகள் மற்றும் பொருள்களின் அளவுக்குக் குறைக்கப்பட்டதில்லை. இறைத்தூதருக்கு அளிக்கப்பட்ட உயர்மதிப்புக்கள் மனிதர் என்கிற அந்தஸ்தை தாண்டி (கடவுள் என்கிற அளவுக்கு) உயர்த்தியதில்லை. அவர் அளித்துவிட்டுச் சென்ற சிரஞ்சீவியான கட்டளைகள் அவரைப் பின்பற்றுவோர் அவருக்குக் காட்டும் நன்றியுணர்வை பகுத்தறிவு மற்றும் சமயத்தின் எல்லைக்குள் கட்டுப்படுத்தி (மிகைப்படுத்த விடாமல் தடுத்து) வைத்திருக்கின்றன.

**Edward Gibbon and Simon Ocklay, History of the Saracen Empire, London, 1870, P.54.**

மனித சமுதாயத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களின் மீது சர்ச்சைக்கிடமின்றி இன்று ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஒருவரின் மிகச்

சிறந்த வாழ்க்கையை அறிந்திட நான் ஆவல் கொண்டேன். (அவ்விதம் அதனை நான் படித்தறிய முற்பட்டபோது) இஸ்லாத்திற்கு அக்காலத்திய வாழ்க்கையமைப்பில் உயர்ந்த ஓர் இடத்தைப் பெற்றுத்தந்தது வாள் பலமல்ல, என்று முன் எப்போதையும் விட அதிகமாக நான் உணர்ந்தேன். நபிகள் நாயகத்தின் மாறாத எளிமை, தம்மைப் பெரிதாகக் கருதாமல் சாதாரணமானவராக நடந்து கொள்ளும் உயர்பண்பு, எந்நிலையிலும் வாக்குறுதியைப் பேணிக் காத்த தன்மை, தம் தோழர்கள் மீது அவர் கொண்டிருந்த அழியா அன்பு , அவரது அஞ்சாமை, இறைவன் மீதும் தமது பிரச்சாரப் பணியிலும் அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை ஆகியவைதாம் அவரது வெற்றிக்குக் காரணங்கள்; இவையே உலகச்சக்திகள் அனைத்தையும் நபிகள் நாயகத்தின் முன்பும் அவர்களின் தோழர்கள் முன்பும் கொண்டு வந்து குவித்தன. எல்லாத்தடைகளையும் வெற்றி கொண்டன. அவரது மகத்தான வெற்றிக்கு இவைதாம் காரணமே தவிர வாள்பலம் அல்ல.

**Young India, quoted in The light, Lahore, for 16th September 1924, Mahatma Gandhi.**

அனைத்துலக சகோதரத்துவம், மனித இன சமத்துவம் முஹம்மத் பறைசாற்றிய கொள்கைகள் மனித சமுதாயத்தின் சமூக முன்னேற்றத்திற்கு மாபெரும் சேவைகளை ஆற்றியிருப்பதை எடுத்துரைக்கின்றன. பெரும் சமய நெறிகள் அனைத்தும் இதே கொள்கையை போதிக்கின்றன. ஆனால் இஸ்லாத்தின் தூதர் இந்தக் கொள்கையை நடைமுறை வாழ்வில் செயல்படுத்திக் காட்டினார். அதன் மதிப்பு முழுமையாக உணரப்பட வேண்டும். அதன் சாதனை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். உலக மக்களின் மனசாட்சி விழித்தெழுந்து விட்டால் இனமச்சாரியங்கள் மறைந்து விடும்; மனித இன சகோதரத்துவக் கொள்கை நடைமுறைக்கு வந்துவிடும்.

**Prof. Ramakrishna Rao, Muhammad the prophet of Islam, Page 7.**

அரேபியாவின் இந்தத் தூதருடைய வாழ்க்கையையும், ஒழுக்கப் பண்புகளையும் தூய நடத்தையையும் படிப்பவர்கள் அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அறிந்தவர்களுக்கு அந்த வல்லமை மிக்க மாபெரும் இறைத்தூதர்களில் ஒருவரான இறுதித்தூதரைக் குறித்து உயர்வான எண்ணமே ஏற்படும். எனது இந்த நூலில் நான் பலருக்கும் தெரிந்த பல விஷயங்களையே சொல்லியிருக்கிறேன் என்றாலும் நானே அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் திரும்பத் திரும்பப் படிக்கும் ஒவ்வொரு முறையும் ஆற்றல் மிக்க அரபு போதகரின் மீது புதிய ஒரு மதிப்பும் புதிய ஒரு மரியாதை உணர்வும் ஏற்படுவதை நான் உணர்கிறேன்.

**Annie Besant, The life and Teachings of Muhammed 1932, P.4.**

# 5

# மறுமை வாழ்வு - ஒரு தெளிவு!

ஆராய்ச்சி மற்றும் பகுத்தாய்வு அடிப்படையில் கிடைக்கப்பெறும் விவரங்களை வகைப்படுத்துவதை மட்டுமே விஞ்ஞானம் கவனத்தில் கொள்கிறது. ஆகவே, இறப்பிற்குப் பின் ஒரு வாழ்வு உண்டு எனும் கேள்விக்கு அறிவியல் ஆய்வெல்லையில் இடமேயில்லை. அறிவியல் ஆராய்ச்சியிலும், பகுப்பாய்விலும் மனிதன் சில நூற்றாண்டுகளாகவே ஈடுபட்டுள்ளான். ஆனால், இறப்பிற்குப் பின்னரும் வாழ்வு உண்டு எனும் கோட்பாடோ நீண்ட நெடுங்காலமாக மனிதனுக்கு அறிமுகமானதொன்று. உலகில் தோன்றிய அனைத்து இறைத்தூதர்களும் மனிதர்களை இறைவனை வணங்குமாறும் இறப்பிற்குப் பின் உள்ள வாழ்வில் நம்பிக்கை கொள்ளும்படியும் போதித்து வந்துள்ளனர். மறுமைவாழ்வின் மீது கொள்ளும் எள்ளளவு சந்தேகமும் இறைமறுப்புக்கு வழிவகுப்பதோடு ஏனைய நம்பிக்கைகளையும் பொருளற்றதாக்கி விடும் எனும் அளவுக்கு அவர்கள் மறுமை வாழ்வைப் பற்றி வலியுறுத்தியுள்ளார்கள். பல நூற்றாண்டுகால இடைவெளியில் தோன்றிய இறைத்தூதர்களும் மறுமைவாழ்வை அத்தனை நம்பிக்கையோடு ஆணித்தரமாக ஒரே தோரணையில் வலியுறுத்திய பாங்கு, ஒன்றை உறுதிப் படுத்துகிறது. மறுமை வாழ்வின் அடிப்படை அறிவை அவர்கள் இறைவெளிப் பாட்டிலிருந்தே பெற்றிருக்க வேண்டும். அனைத்து இறைத்தூதர்களும் பெரும்பாலும் மக்களின் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளார்கள். இதற்கு முக்கிய காரணம் இறப்பிற்குப் பின் உள்ள வாழ்வை மக்கள் மறந்ததுதான். மறுமைவாழ்வு கிடையாது என்றே மக்கள் கருதினர். ஆனால், அத்தனை எதிர்ப்பு இன்னல்களுக்கிடையிலும் ஏராளமான நல்லறத் தோழர்களை இறைத்தூதர்கள் பெற்று வந்தனர். ஆண்டாண்டு காலமாக நம்பி வந்த மூடக்கொள்கைகள், குலப் பழக்கவழக்கங்கள், பண்டைய மரபுகள், மூதாதையர் வழி இவைகளிலிருந்து மாறுபட்ட தோடல்லாமல் ஒட்டுமொத்த சமுதாயத்தின் எதிர்ப்பையும் கண்டு அஞ்சாது துணிந்து எழுந்து நிற்கும் ஆற்றலை அந்த நல்லடியார்களுக்கு அளித்தது எது எனும் கேள்வி இங்கு எழுகிறது. தமது சொந்த சமுதாயத்திலிருந்தே அவர்களை தனிமைப்பத்தியது எது? பதில் மிக எளிது. அவர்கள், தமது இதயத்தையும், அறிவையும் கொண்டு ஆய்ந்து சத்தியத்தை உணர்ந்தார்கள். அவர்கள் சத்தியத்தைப் புலனறிவின் மூலமாகவா உணர்ந்தார்கள்? இல்லை! நிச்சயமாக இல்லை. ஏனெனில், இறப்பிற்குப் பின் உள்ள வாழ்வை மனிதன்

உயிருடனிருக்கும்போது அனுபவிக்கவே முடியாது. இறைவன் மனிதனுக்கு புலனுணர்வை மட்டும் வழங்கவில்லை. பகுத்தறிவு, அழகுணர்ச்சி, மனவிழிப்பு, கலையுணர்வு, ஒழுக்க உணர்வுகளையும் அருளியுள்ளான். புலன்களால் உணரமுடியாத விஷயங்களை, நிலைமைகளை புரிந்துகொள்ளும் வழிகாட்டுதலை இத்தகைய உணர்வே தரும்.

இதனால்தான், இறைவனையும், மறுமை வாழ்வையும் நம்பும்படி மக்களை அழைத்த அனைத்து இறைத்தூதர்களும் மனிதனின் பகுத்தறிவு, ஒழுக்கவுணர்வு மற்றும் விழிப்புணர்வுக்கும் வேண்டுகோள் விடுத்தனர். உதாரணமாக மக்காவின் சிலைவணக்கவாதிகள் மறுமை வாழ்வுக் கோட்பாட்டை மறுத்தபோது குர்ஆன் தர்க்கரீதியாக பகுத்தறிவு வாதத்தை முன் வைத்தது:

''நம் மீது அவன் உவமைகளைப் பொருத்துகின்றான். தன் பிறப்பைப் பற்றியே அவன் மறந்து விடுகிறான். இந்த எலும்புகள் மக்கிப் போன பிறகு இவற்றை உயிர்ப்பிப்பவர் யார் என்று அவன் கேட்கிறான். எவன் முதலில் அவற்றைப் படைத்தானோ (அவனே மறுபடியும்) அவற்றை உயிர்ப்பிப்பான் என்றும் படைப்புக்கலையின் வித்தைகள் ஒவ்வொன்றையும் நன்கறிந்தவன் அவனே என்றும் அவனிடம் கூறுங்கள். அவனே உங்களுக்காக பசுமையான மரங்களிலிருந்து நெருப்பைப் படைத்தான். அதனைக்கொண்டு நீங்கள் நெருப்பை மூட்டிக் கொள்கின்றீர்கள். விண்ணையும் மண்ணையும் படைத்த அவனுக்கு அவர்களைப் போன்றவற்றைப் படைக்கும் ஆற்றல் இல்லையா? ஏன் இல்லை, படைப்பதில் வல்லவனும் யாவற்றையும் அறிந்தவனும் அவனே!''

(36:78-81)

இன்னொரு இடத்தில், மறுமைவாழ்வு மறுப்பிற்கு சரியான அடிப்படையை இறைமறுப்பாளர்கள் பெற்றிருக்கவில்லை என்று குர்ஆன் கூறுகிறது:

அவர்கள் கூறுகின்றனர்: ''இப்பொழுதுள்ள உலகைத் தவிர வேறு எதுவும் இல்லை; நாம் வாழ்கிறோம். பின்னர் இறந்துவிடுகிறோம் காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை.'' இதைப்பற்றி அவர்களுக்கு யாதொரு அறிவுமில்லை. அவர்கள் வீண் கற்பனாவாதிகள். அவர்கள் முன் நமது வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால், ''நீங்கள் உண்மை சொல்பவர்களாயிருந்தால், எங்களுடைய மூதாதையர்களைக் கொண்டு வாருங்கள்'' என்ற வாதத்தைத் தவிர, வேறு எதுவும் சொல்வதில்லை.

(45:24-25)

இறந்தோர் அனைவரையும் எழுப்ப இறைவனால் நிச்சயம் முடியும். ஆனால், இறைவனுக்கு சுயமான திட்டங்கள் உண்டு. ஒரு நாள் வரும். அன்று

உலகமனைத்தையும் இறைவன் அழித்துவிடுவான். இறந்தவர்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு இறைவன் முன் நிறுத்தப்படுவர். அந்த நாள் நீண்ட நெடிய வாழ்வின் துவக்க நாளாகும். அந்த வாழ்வுக்கு முடிவே இல்லை. ஆண் பெண் ஒவ்வொருவரும் செய்த நன்மை அல்லது தீமைகளுக்கேற்ப வெகுமதி அல்லது தண்டனையை இறைவனால் அன்று அளிக்கப்படுவர். மனிதனின் ஆத்மீக தேட்டங்களை நிறைவு செய்யும் வகையில் குர்ஆன், மறுமைவாழ்வின் அவசியத்தை விளக்குகிறது. இறப்பிற்குப் பின் வாழ்வு இல்லையென்றால் இறைநம்பிக்கை என்பதும் அர்த்தமற்றதாகிவிடும். அப்படியே ஒருவர் இறைவனை நம்பினாலும் நீதி நியாயமற்ற இறைவனைத்தான் நம்ப வேண்டியிருக்கும். படைத்ததோடு தனது பணிமுடிந்தது; மனிதனின் நடவடிக்கைகளைப் பற்றி சிறிதும் அக்கறையற்ற இறைவனையே நம்ப வேண்டியிருக்கும். ஆனால் உண்மை அதுவல்ல. நிச்சயமாக, இறைவன் நீதமிக்கவன். வரை முறையின்றி கொடுமை புரிந்தவர்கள், அப்பாவி உயிர்களைப் பறித்தவர்கள், சமுதாயத்தில் லஞ்ச உழல்களைத் தோற்றுவித்தவர்கள், தமது மன இச்சைக்கேற்ப ஆடும்படி மக்களை அடிமைப்படுத்தி, ஆதிக்கம் செலுத்தியவர்கள் ஆகியோரை இறைவன் நிச்சயமாகத் தண்டிப்பான். மனிதன் இவ்வுலகில் மிக அற்பகாலமே வாழ்கிறான். சொற்பகால இச்சடவுலகில் மனிதனின் தவறுகள் அல்லது நற்பண்புகளுக்கேற்ப சரிசமமாக தண்டனை அல்லது வெகுமதி வழங்குவது இயலாத காரியம். நியாயத் தீர்ப்பு நாள் வந்தே தீரும் என்று குர்ஆன் உறுதியாகக் கூறுகிறது. செய்த நன்மை அல்லது பாவங்களுக்கேற்ப ஆண், பெண் இருபாலருக்குமே இறைவன் தீர்ப்பளிக்கிறான்.

இறைமறுப்பாளர்கள் கூறுகின்றனர்; 'அந்த நாள் எமக்கு வரவே வராது'. கூறும்: 'எனதிறைவன் மீது ஆணையாக, நிச்சயமாக அது வந்தே தீரும். மறைவானவைகளைப் பற்றி இறைவனே மிக அறிந்தவன். அணுவின் எடையைவிட குறைந்ததாயினும் அல்லது அதிகமாயினும் சரி, வானத்திலிருந்தாலும் பூமியிலிருந்தாலும் இறைவனிடத்திலிருந்து தப்பவே முடியாது; அனைத்தும் தெளிவாகப் பதிவேட்டில் இருக்கும். எவர்கள் இறைவனை நம்பி நல்லவைகளைச் செய்தார்களோ அத்தகையோருக்கு வெகுமதியுண்டு. அத்தகையோருக்கு மன்னிப்பும் உண்டு. யார் நமது வசனங்களைப் புறக்கணித்தாரோ, எதிராக வாதிட்டாரோ அத்தகையோருக்கு நோவினை தரும் வேதனை யுண்டு.

(34:3-5)

இறைவனின் கருணையும் நீதியும் முழுஅளவில் மறுமைநாளில் வெளிப்படும். இறைவனுக்காகவே இவ்வுலகில் தொல்லைகளைச் சகித்துக் கொண்டவர்களுக்கு குறைவிலா பேரின்பம் காத்திருக்கிறது. ஆனால் மறுமைநாளைப் புறக்கணித்து இறையருளை மதிக்காமல் வாழ்ந்தவர்கள் அந்நாளில் பேரிழிவுக்குள்ளாகி

நிற்பார்கள். இறையடியார்கள் மற்றும் பாவிகளின் மாறுபட்ட நிலைமை குறித்து குர்ஆன் இப்படிச் சுட்டுகிறது.

"எவனுக்கு நாம் நல்வாக்கை அளித்து, அதை அவனும் அடைய இருக்கிறானோ அவனும், இவ்வுலக வாழ்வின் சுகங்களை அளித்துப் பின்னர் மறுமை நாளில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவனும் சமம் ஆவார்களா?"

(28:61)

எல்லையற்ற மறுமைவாழ்வின் தயாரிப்பினை இவ்வுலகில் செய்துகொள்ள வேண்டும் என்று குர்ஆன் மேலும் கூறுகிறது. ஆனால், இதனை மறுப்பவர்கள் தமது மனஇச்சைக்கும் ஆசைக்கும் அடிமையாகி இறைநம்பிக்கையாளர்களையும் நேர்மையாளர்களையும் பரிகசிக்கின்றனர். அத்தகையோர் மரணத் தருவாயில் தமது தவறுகளை உணர்ந்து கொள்வர். தமக்கு இவ்வுலகில் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குமாறு அப்பொழுது அவர்கள் புலம்புவார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்படும். மரணத் தருவாயில் பாவிகள் அல்லல்படும் நிலைமை, இறுதித் தீர்ப்புநாளின் பயங்கரம், சத்தியவாதிகளுக்கு வாக்களிக்கப்பட்ட நற்பேறு இவையணைத்தும் மிக அழகாக குர்ஆனில் விளக்கப்பட்டுள்ளது:

''அவர்களில் யாருக்கேனும் மரணம் வந்தாலோ அவன் கூறுகிறான்; ''என் இறைவா! என்னை திரும்ப அனுப்பிவிடு. இனி நல்ல காரியங்களையே செய்து கொண்டிருப்பேன். ஆனால் அது நடக்காது. அவன் ஒரு வார்த்தைதான் பேசுவான். அவர்களுக்கு முன் (உயிர்கொடுத்து) எழுப்பப்படும் நாள் வரையிலும் ஓர் அரண் ஏற்பட்டுவிடும். சூர்-எக்காளம் ஊதப்பட்டு விட்டால், அந்நாளில் அவர்களுக்கிடையே எந்த உறவும் இருக்காது. ஒருவர் மற்றவரைப் பற்றி விசாரிக்கமாட்டார். எவர்களுடைய எடை கனக்கிறதோ அவர்களே வெற்றியடைவர். யாருடைய எடை குறைகிறதோ அத்தகையோர் நட்டத்திற்குள்ளாகி நரகத்தில் வீழ்ந்துகிடப்பர். அங்கு நெருப்பு அவர்களின் முகங்களைப் பொசுக்கும். அங்கு விகாரமாகிப் போவார்கள்''.

(23:99-104)

மறுமை நம்பிக்கை மனிதனுக்கு தீர்ப்புநாளின் வெற்றியை மட்டும் அருளவில்லை. இவ்வுலகில் மனிதன் தனது பொறுப்பையுணர்ந்து தனக்குரிய பணியினைச் செம்மையாக, முறையாக ஆக்ககரமாகச் செய்து உலகை அமைதியும் இன்பமும் நிரம்பியதாகச் சமைக்கவும் வழி கோலுகிறது.

அன்றைய அரேபிய மக்களை ஒருகணம் எண்ணிப் பாருங்கள். மறுமைநாள் மீதான நம்பிக்கை இல்லாதிருந்த அந்தக் காலத்தில் அவர்கள் கொலை, கொள்ளை, சூதாட்டம், மது, இனச்சண்டை போன்றவைகளில் தீவிரமாக மூழ்கிக்கிடந்தனர்.

ஓரிறைக்கொள்கை மற்றும் மறுமை மீதான நம்பிக்கை கொண்ட நாள் முதலாய் அவர்கள் உலகின் மிக ஒழுக்கமான சமுதாயமாக, பண்பட்டு நின்றனர். பாவங்களை விட்டொழித்தனர். ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவி புரிந்தனர். வறியோர்க்கு ஈந்தனர். சமத்துவம் மற்றும் நீதியின் அடிப்படையில் தமது பிணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர். மறுமை நம்பிக்கை அடுத்த உலகில் தொடர்வினைகளை ஏற்படுத்த வல்லதைப் போன்றே இவ்வுலகிலும் உண்டாக்கவல்லது. ஒரு தேசம் ஒட்டு மொத்தமாக மறுமை நம்பிக்கையைப் புறக்கணித்தால் அங்கு அனைத்து பாவங்களும் தீமைகளும் தலைவிரித்தாடும்; இலஞ்ச ஊழல்கள் பெருகும்; இறுதியில் அச்சமுதாயமே அழிவுக்குள்ளாகும். ஆத், ஸமூத், ஃபிர்அவ்ன் கூட்டத்தாரின் அழிவைப்பற்றி குர்ஆன் விபரமாகக் கூறுகிறது.

''ஆத், ஸமூத் கூட்டத்தார் தீர்ப்புநாளை நம்பவில்லை. ஸமூத் கூட்டத்தார் மின்னலைக் கொண்டு அழிக்கப்பட்டனர்; ஆத் சமூகத்தினர் விரைந்து தாக்கும் சூறைக்காற்றால் அழிக்கப்பட்டனர். ஏழு இரவுகளும் எட்டுப் பகல்களும் தொடர்ச்சியாக அவர்கள் மீது அவன் அதை வீசச் செய்தான். வேரற்று சாய்ந்த ஈச்சமரங்களைப் போன்று அந்தக் கூட்டத்தார் பூமியில் விழுந்து கிடந்ததை நீர் கண்டிருப்பீர். அவர்களில் எவரும் தப்பியிருப்பதை நீர் காண்கிறீரா? ஃபிர்அவ்னும் அவனுக்கு முன்னிருந்தவர்களும், தலைகீழாகப் புரட்டப்பட்ட ஊர்களில் இருந்தவர்களும் அதேபோன்றுதான். அவர்கள் தவறு செய்தனர். இறைத்தூதருக்கு எதிராக மாறு செய்தனர். அவன் அவர்களை மிக்க பலமாகப் பிடித்துக் கொண்டான். நீர் பொங்கிய பொழுது நிச்சயமாக நாம் உங்களை ஓடும் கப்பலில் ஏற்றினோம் - அதனை உங்களுக்கு ஒரு படிப்பினையாகவும், செவிமடுப்பவருக்கு சிந்தையில் வைப்பதற்கும்! ஒருமுறை சூர்-எக்காளம் ஊதப்பட்டு, பூமியும் மலையும் ஒன்றோடொன்று மோதிப் பலமாக அடிபட்டால், அந்தநாளில் தான் யுகமுடிவு நிகழும், வானம் வெடிக்கும். பயங்கரம், பீதி ஆட்கொள்ளும். யாருடைய பதிவேடு வலதுகரத்தில் கொடுக்கப்பட்டதோ அவர் கூறுவார்: ''இதோ, எனது புத்தகத்தை எடுத்துப் பாருங்கள்! நிச்சயமாக நான் கேள்வி கணக்கை எதிர்பார்த்திருந்தேன் என்று கூறுவார். ஆகவே. அவர் மேலான சுவனத்தில் மகிழ்வோடிருப்பார். அங்கு கனிகள் கைக்கெட்டும் நிலையில் இருக்கும். 'கடந்த நாட்களில் நீங்கள் சேகரித்தவை காரணமாக நன்கு இவைகளைப் புசியுங்கள்; பருகுங்கள்! யாருக்கு பதிவேடு இடக்கையில் கொடுக்கப்பட்டதோ அவன் கூறுவான்: 'எனக்கு பதிவேடு கொடுக்கப்படாமல், கணக்கையே அறியாமல் இருந்திருக்கக்கூடாதா? இறந்தபோதே (என் கதையும்) முடிந்திருக்கக் கூடாதா? என்னுடைய செல்வம் பயனளிக்கவில்லையே! எனது ஆதிக்கமும் என்னைவிட்டு நீங்கிவிட்டதே''

(69:4.39)

இதனால் மறுமைநாள் பற்றி சிந்தனைக்கு ஆதாரம் உள்ளதை இவ்வாறாக உணரலாம்.

**முதலாவதாக,**

எல்லா இறைத்தூதர்களும் மக்களை அதனை நம்புமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்.

**இரண்டாவதாக,**

ஒரு சமுதாயம் மறுமையின் நம்பிக்கையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டால் அது அமைதி நிரம்பிய தலைசிறந்த சமுதாயமாக விளங்கும். அங்கு சமூக இழிவும், ஒழுக்கக்கேடும் இருக்காது.

**மூன்றாவதாக,**

இறைத்தூதர்கள் மீண்டும் மீண்டும் எச்சரித்ததை மதிக்காமல், மறுமை நம்பிக்கையை ஒட்டு மொத்தமாக ஒரு சமூகம் புறக்கணிக்குமாயின் அச்சமூகம் முழுவதுமே இறைவனால் இவ்வுலகிலேயே தண்டிக்கப்பட்டதை வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

**நான்காவதாக,**

மனிதனின் ஆத்மீக, பகுத்தறிவு, ஒழுக்கவுணர்வு தேட்டங்கள் மறுமைவாழ்வை உறுதிப்படுத்தி அங்கீகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

**ஐந்தாவதாக,**

இறப்பிற்குப் பின் ஒரு வாழ்வு இல்லையென்றால் இறைவனின் கருணைக்கும் நீதிக்கும் எவ்வித அர்த்தமும் இல்லாமல் போகிறது.

# 6

# இறைவழிபாடு- இஸ்லாத்தின் பார்வையில்

இஸ்லாத்தின் இறைவழிபாடு பலராலும் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஏன், முஸ்லிம்களும் அதனைச் சரியாக உணரவில்லை என்றே சொல்லலாம். தொழுகை, நோன்பு, தர்மம் செய்தல் போன்ற சடங்கு ரீதியான வழிபாடுகளை நிறைவேற்றுவதையே இறைவணக்கம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இவையனைத்தும் இறைவழிபாட்டில் ஒரு சிறு பகுதியே என்று இஸ்லாம் கருதுகிறது. வழிபாடு என்னும் மரபுச் சொல்லுக்கு இஸ்லாம் வரையறுக்கும் விளக்கம் மாறுபாடானது. வழிபாடு பற்றிய இஸ்லாமியக் கருத்தோட்டம் பொருள் செறிந்ததாகவும், வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவியதாகவும் விளங்குகின்றது. அதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

''இறைவனின் விருப்பத்திற்கொப்ப அமையும் மனிதனின் சொல், செயல் அனைத்தும் இறைவழிபாடே!'' அதாவது, இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக, ஒரு மனிதன் கூறும் ஒவ்வொரு சொல்லும், ஆற்றும் ஒவ்வொரு செயலும் இறைவழிபாடே ஆகும். இந்த வட்டத்திற்குள் சட்டரீதியான வழிபாடுகளும் அடங்கும். அத்துடன் கோட்பாடுகள், சமூக நலப் பணிகள், மனித இனத்தின் நன்மைக்காக ஆற்றப்படும் சேவைகள் அனைத்துமே வழிபாட்டின் கருத்தோட்டத்தில் அடங்கும்.

இஸ்லாம் மனிதனை முழுமையான கண்ணோட்டத்தில் பார்க்கின்றது. ஆம்! அவன் முழுமையாக அல்லாஹ்வுக்குப் பணிந்து வாழ வேண்டுமென அது கூறுகின்றது. முஹம்மத் (ஸல்) அவர்களை நோக்கி குர்ஆன் இவ்வாறு ஆணையிட்டது:

''நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய வழிபாடுகளும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவனுக்கோ யாரும் இணையில்லை. இவ்வாறே எனக்குக்

கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் நான் இறைவனுக்குக் கீழ்ப்படிவோரில் (முஸ்லிம்களில்) முதன்மையானவனாக உள்ளேன்.''

(6:162-163)

இந்த சரணாகதியின் இயல்பான விளைவு என்னவென்றால், மனிதனின் ஒவ்வொரு செயலும், ஈடுபாடும் இறைவன் விரும்பியவாறே இருக்க வேண்டும். வல்ல இறைவனின் கட்டளைகளை ஏவுரைகளை மையமாகக் கொண்டே மனிதனின் செயல்கள் சுற்றிச் சுழல வேண்டும். இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கைத் திட்டமாக விளங்குவதால், மத சம்பந்தமான விஷயங்களாகட்டும் பொதுவான பணிகளாகட்டும் இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்பவர்கள் அதன் வழிகாட்டுதலுக்கு ஏற்பவே தமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். ''மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட பிரச்சினை. அது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவாகும். சடங்கு ரீதியான சில வழிபாடுகளுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் மதம் குறுக்கிடலாகாது'' என்று எண்ணிக் கொள்பவர்களுக்கு அது வியப்பை அளிக்கலாம். உண்மை என்னவெனில், அகவாழ்வில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் இயந்திரத்தனமாகப் புரியப்படும் சடங்குகளுக்கு இஸ்லாம் எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை. கிப்லா (தொழுகைதிசை) மாற்றத்தின் போது, குர்ஆன் இறை நம்பிக்கையாளர்களையும் அவர்களுக்கு அண்டையில் வாழ்ந்த யூத, கிறிஸ்தவர்களையும் நோக்கி இந்தக் கருத்தை மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது.

''நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக, அல்லாஹ்வையும், இறுதிநாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், மேலும் ( அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும், தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைகுலையாமல் இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர்! இவர்களே உண்மையாளர்கள்! மேலும், இவர்களே இறையச்சமுடையவர்கள்!

(2:177)

மேற்கூறப்பட்ட வசனங்களில் சுட்டிக்காட்டப்பட்ட நல்லறக் காரியங்களனைத்தும் இறைவழிபாட்டின் ஒரு பகுதியேயாகும்.

சடங்குகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சடங்கு ரீதியான இறைவணக்கங்களை உளப் பூர்வமாக நிறைவேற்றினால் மனிதன் ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் உயர்வடைய முடியும். இறைவழிகாட்டுதலுக்கேற்ப வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உதவியாயிருக்கும்.

வழிபாட்டுச் சடங்குகளில் தொழுகை முதன்மையானது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1. இறை நம்பிக்கையாளனின் அடையாளமே தொழுகைதான். 2. இது பாவங்களிலிருந்து மனிதனை தடுக்கிறது. நாளொன்றுக்கு ஐந்து வேளை இறைவனுடன் தொடர்பு கொண்டு அவனது கட்டளைகளுக்குப் பணிந்து வாழ்வேன் என்று வாக்களித்து அவனின் வழிகாட்டுதலை விரும்பி வேண்டிப் பெறுவதால் மனிதன் பரிசுத்தமாகி விட வாய்ப்பேற்படுகிறது.

குர்ஆன் கூறுகிறது:

''உனக்கே நாங்கள் அடிபணிகிறோம். (இபாதத் செய்கிறோம்).மேலும், உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம். எங்களுக்கு நீ நேரான வழியைக் காண்பித்தருள்வாயாக!''

(1:4-5)

இறைநம்பிக்கை பிரகடனச் செயல்பாட்டில் முதல்படி தொழுகையாகும். இறைநம்பிக்கையாளனின் வெற்றிக்கு அடிப்படை நிபந்தனை தொழுகையாகும்.

''நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள் தமது தொழுகையை மிக உள்ளச்சத்தோடு பணிவுடன் தொழுவார்கள்''

(23:1-2)

முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கூற்றும் இதனையே மெய்ப்பிக்கின்றது. ''யார் தொழுகையை அதற்குரிய சரியான நேரத்தில் மிகுதியான கவனத்துடன் நிறைவேற்றுகின்றார்களோ அத்தகையோர் அதனை வழிகாட்டியாகவும், தாங்கள் கொண்டுள்ள இறை நம்பிக்கைக்கு சான்றாகவும் காண்பார்கள். இறுதித் தீர்ப்பு நாளில் ஈடேற்றம் பெறுவதற்கும் தொழுகை காரணமாக அமையும்''.

தொழுகையையடுத்து ஜகாத் இஸ்லாத்தின் மற்றொரு முக்கிய தூண். நமது செல்வத்தில் ஏழைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பாகத்தையளிப்பதே ஜகாத். குர்ஆனில்

பல இடங்களில் தொழுகையும், ஜகாத்தும் இணைத்தே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொழுகையைப்போன்றே ஜகாத்தும் இறைநம்பிக்கையின் செயல் வடிவம் ஆகும். இப்பிரபஞ்சத்தின் ஒரே அதிபதி இறைவனே ஆவான். மனிதனுடைய கையில் வழங்கப்பட்டதெல்லாம் இறைவனின் அருட்கொடைகளேயாகும். அவனுடைய பிரதிநிதி என்ற அந்தஸ்தில் அந்த ஏக இறைவனின் நோக்கத்திற்கேற்ப செலவழிக்க வேண்டும் என்பதற்காகவே அவையெல்லாம் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

''இறைவனையும், இறுதித் தூதரையும் நம்புங்கள். எந்த அருட்கொடைகளுக்கு நீங்கள் பொறுப்பாளியாய் இருக்கிறீர்களோ அதிலிருந்து இறைப்பிரதிநிதி எனும் அந்தஸ்தில் செலவழியுங்கள்''

(57:7)

ஜகாத், சொத்தை சீராக பகிர்ந்தளித்து விநியோகிப்பதற்கான உபாயம். பல்வேறு இனங்களுக்கு, வர்க்கங்களுக்கிடையிலான வேறுபாட்டை இது குறைக்கும். இதனால் சமூக ஸ்திரத்தன்மை உருவாகும். செல்வர்களை சுயநலனிலிருந்தும், ஏழைகளை சமூக விரோதம், எரிச்சல் மனப்பாங்கிலிருந்தும் ஜகாத் காப்பாற்றுகிறது. வர்க்கப்போராட்ட வெறுப்புக்குண்டான வழிகளை இது அடைத்துவிடுகிறது. சகோதரத்துவம் வளர்ந்து ஒருமைப்பாடு பெருகும். இத்தகைய சமூக நிலைப்பாடு, செல்வர்களின் தனிப்பட்ட விருப்பின் அடிப்படையில் மட்டும் விட்டுவிடவில்லை. உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமையாகவும் அது இருக்கிறது. இதனை நிறைவேற்ற செல்வந்தர்கள் மறுத்தால் இஸ்லாமிய ஆட்சி தன் அதிகாரத்தைப் பிரயோகித்தேனும் இதனை அவர்களின் சொத்திலிருந்து வசூலிக்கும்.

இஸ்லாத்தின் இன்னொரு முக்கிய தூண் நோன்பு. ரமளான் மாதத்தின் பகலில் நோன்பு மேற்கொள்ளப்படுகிறது. ஷரீயத்தின் ஏனைய அம்சங்கள் மனிதனின் வெளி அவயங்களைச் சுத்திகரிக்க, நோன்பின் முக்கிய நோக்கம் மனிதனின் அகத்தைப் பரிசுத்தமாக்குவதாகும். இத்தகைய பரிசுத்த நிலையில் அவன் நல்லவற்றையும் நேர்மையினையும் கடைபிடிக்கிறான். தீயனவற்றையும் பொய்மையையும் உதறித்தள்ளுகிறான்.

குர்ஆன் கூறுகிறது:

''இறைநம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்த (நபிமார்களைப் பின்பற்றிய)வர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக் கூடும்''.

(2:183)

இறைவன் கூறுவதாக முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ''எனக்காக மனிதன் உண்ணவில்லை; பருகவில்லை; உடலுறவு கொள்ளவில்லை''.

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறைநம்பிக்கையை வலியுறுத்திக் கூறினார்கள்:

''அதற்கு 60 கிளைகள் உண்டு. ஒரே இறைவனை அல்லாஹ்வை நம்புவது அதன் உச்சகட்ட பண்பாகும். அதில் மிகச்சிறியது, பாதையில் கிடக்கும் முட்களையும், தடைகளையும் அகற்றுவது.''

நேர்மையான உழைப்பு இஸ்லாத்தில் இறைவழி பாடாகக் கருதப்படுகின்றது. முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள்: ''பகலில் உழைத்துக் களைத்து இரவில் உறங்கச் செல்பவனின் பாவங்களை இறைவன் மன்னித்துவிடுகிறான்''. அறிவைத் தேடுதலும் இஸ்லாத்தில் மாபெரும் இறைவழிபாடாகும். ''அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் சமயக்கடமையாகும்'', ''70ஆண்டுகள் வணக்கம் புரிவதைவிட ஒரு மணி நேரம் அறிவைப் பெறுவது மேலானது'' என்றெல்லாம் அறிவின் சிறப்பைக் குறித்துத் தம் தோழர்களிடம் முஹம்மத் நபி (ஸல்) வலியுறுத்தினார்கள்.

இறைவனுக்காக சமூகத்தில் கலந்துறவாடல், ஒற்றுமை உண்டாக்கல், இணக்கமாக நடந்து கொள்ளுதல் ஆகியவையும் இறைவழிபாட்டின் வட்டத்திற்குள் வந்துவிடுகின்றன. நண்பனை புன்முறுவலுடன் எதிர் கொள்வதும் தர்மமே; வாகனத்தில் ஒரு மனிதரை ஏற்றிவிட உதவுவதும் தர்மமே! பக்கத்திலிருப்பவரின் பாத்திரத்தில், நீர் நிரப்பித் தருவதும் தர்மமே!

ஒருவன் தனது கடமைகளை ஒழுங்காக செவ்வனே நிறைவேற்றுவதும் இறைவழிபாட்டின் ஓர் அம்சமே என்று இங்கு கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''சட்டத்திற்குட்பட்ட வகையில் - நேர்மையான முறையில் பொருளீட்டி, தன் குடும்பத்தாருக்காகச் செலவழிப்பாரேயானால் அதுவும் தர்மமே! அதற்கான நற்கூலி அவருக்கு வழங்கப்படும். குடும்ப உறுப்பினர்களுடன் அன்புடன் நடந்து கொள்வதும் இறைவழிபாடே! தன் கையால் தன்மனைவியர்க்கு ஒரு கவளம் உணவு ஊட்டுவதும் இறைவழிபாடே!''

அதுமட்டுமல்ல! நாம் உற்சாகத்திற்காக - மன இன்பத்திற்காகச் செய்யும் சில செயல்களும் இறைவழி காட்டுதலுக்கேற்ப அமைந்துவிட்டால் அவையும் வழிபாடாகக் கருதப்படுகின்றன.

''மனைவியுடன் உடலுறவு கொள்வதற்கும் வெகுமதி வழங்கப்படுகிறது'' என்று முஹம்மத் நபி (ஸல்) கூறியபோது அவர்களின் தோழர்கள் வியப்புடன் கேட்டார்கள்;

''நாங்கள் மனமகிழ்ச்சிக்காக விரும்பும் செயலுக்கு எப்படி இறைவனிடமிருந்து வெகுமதி கிடைக்கும்?'' என்று கேட்டார்கள். முஹம்மத் நபி (ஸல்) வினவினார்கள்: ''நீங்கள் மன இச்சைக்காக சட்ட விரோதமாக, தவறாக உடலுறவு கொண்டால் தண்டனை உண்டல்லவா?'' நபித்தோழர்கள் ''ஆம்!'' என்றனர். ''அதனால் தான் ஆகுமான வழியில் உங்கள் மனைவியுடன் உடலுறவில் ஈடுபட்டால் அதற்கு நற்கூலி உண்டு'' என்று நபிகளார் (ஸல்) பதிலளித்தார்கள். இதிலிருந்து உடலுறவும் இறைவழிபாடே என்பது தெளிவாகும். உடலுறவு இஸ்லாத்தில் அருவெருக்கத்தக்க, தவிர்க்க வேண்டிய செயலல்ல. ஆனால், மண உறவுக்கு விரோதமாக, தவறான வழியில் உடலுறவு கொண்டால் அது பாவம்; வெறுக்கத்தக்கதுதான்.

இஸ்லாம், மனிதனின் ஆக்ககரமான செயல்களனைத்தையும் உள்ளடக்கிய முழு வாழ்க்கைக் கோட்பாடு என்பது இதுவரை கூறிய ஆதாரங்களின் வாயிலாக புலனாகும். இக்கூற்று இஸ்லாம் ஓர் இயற்கையான வாழ்க்கைத் திட்டம் என்னும் கண்ணோட்டத்தோடு ஒத்துப்போவதை புரிந்து கொள்ளலாம்.

தனிநபர் வாழ்வு மற்றும் கூட்டுவாழ்வு, பொருளாதாரம், அரசியல், ஆன்மீகம் ஆக அனைத்துத் துறைகளையும் இஸ்லாம் ஒழுங்குபடுத்துகிறது; சீரமைக்கிறது. அதனால் தான் மனிதவாழ்வின் சின்னஞ்சிறு விவகாரத்திலும் இஸ்லாம் உயரிய, சரியான வழிகாட்டுதலை வழங்குகிறது. இந்த வழிகாட்டுதல்களை அந்தந்த துறைகளில் இஸ்லாமியக் கடமைகளைப் பின்பற்றுவதற்காகவே கொள்ளப்படும். மனிதனின் ஒவ்வொரு ஆக்கபூர்வ நடவடிக்கையும் இறைவணக்கமாகக் கருதப்படுகிறது. என ஒருவன் நினைக்கும் போது அது அவனுக்குப் பெரும் உந்து சக்தியாகத் திகழ்கிறது. இந்த வாழ்க்கைத் திட்டத்தில் இறைதிருப்தி ஒன்றே மேலோங்கியிருப்பதால் இதனை மேற்கொள்ளும் மனிதன் தனது பணிகளை இயன்றவரை சிறப்பாகச் செய்து முடிக்கத் துணிகிறான். யாரும் அவனை கண் காணித்தாலும் சரி, கண்டுகொள்ளாமல் இருந்தாலும் சரி அவன் ஏமாற்றத் துணிவதில்லை. ஏனெனில், அல்லாஹ் தன்னை எங்கும் எப்பொழுதும் நிரந்தரக் கண்காணிப்பாளனாக இருக்கிறான் என்று மனிதன் உணர்ந்து விடுகிறான்.

இஸ்லாத்தில் உள்ள வணக்க வழிபாடுகள் சடங்கு சம்பிரதாயங்களற்றவை என்று பார்த்தோம். இதனால் இறைவனின் வெகுமதி அளவிடற்கரிய முறையில் வாரி வழங்கப்படும் என்று இதன் வாயிலாக உணர்த்தப்படுகிறது. நோன்பு மனிதனின் மனச் சான்றை தட்டி எழுப்புகிறது. ஒட்டு மொத்த சமுதாய நோக்கில் கூட்டாக இணைந்து பணியாற்ற பயிற்சியளிக்கிறது. அதுமட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதனையும் அது மேலும், வலிமையுடையவனாக்கிறது. அளவுக்கதிகமாக உழைத்த ஜீரண உறுப்புகளுக்கு நோன்பு ஒரு மாதகால கட்டாய ஓய்வளிக்கிறது. தேவை கள் நிறைவேறாமல் வாழ்நாள் முழுவதும் பஞ்சத்தில் உழலும் வறியோரின்

நிலைமையினை நோன்பு நமக்கு உணரச் செய்கிறது. பொருளாதாரத்தில் நலிந்திருக்கும் ஏனைய முஸ்லிம் சகோதர்களின் துயர நிலையினை நோன்பு உணர வைக்கிறது. வறியவர்களுக்காக பச்சாதாபப்பட்டு மனமிரங்கும் பண்பை நோன்பு தோற்றுவிக்கிறது.

இறுதியாக, இஸ்லாத்தின் இன்னும் ஒரு கடமையான 'ஹஜ்'ஜைப் பார்போம். மக்காவில் இருக்கும் இறையில்லத்திற்கு புனிதப்பயணம் மேற்கொள்ளுவதே ஹஜ்! இஸ்லாத்தின் இந்த அடிப்படை, மக்களிடையேயுள்ள அனைத்துவிதமான வேற்றுமைகளையும் களைந்து மனிதகுலத்தின் ஒற்றுமையை மலர வைக்கிறது. உலகின் அனைத்து மூளைகளிலிருந்தும் முஸ்லிம்கள் ஒரே ஆடையணிந்து ஒரே மொழியில் ஒரே குரலில் ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்றார்கள். லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்- என் அதிபதியே! நான் உனக்கு சரணம்! சுயக்கட்டுப்பாடு, சுய ஒழுங்கிற்கான பயிற்சியே ஹஜ். மத சடங்குகள் மட்டும் இங்கு பேணப்படவில்லை. பறவை, தாவர இனங்களுக்கும் இங்கு அமைதியும், பாதுகாப்பும் தரும் சூழல் நிலவுகிறது. ஒவ்வொரு உயிரினத்திற்கும் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

''அல்லாஹ் ஏற்படுத்திய புனித சடங்குகளை யார் மகிமைப்படுத்துகின்றாரோ, அது அவனுடைய இறைவனிடத்தில் மிக நன்மையாகவே முடியும்.''

(22:30)

''எவர் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட சடங்குகளைக் கண்ணியப்படுத்து கிறாரோ அது அவரின் உள்ளத்தின் பரிசுத்த தன்மையை அறிவிக்கிறது''.

(22:32)

ஹஜ் ஒரு மாபெரும் மாநாடு. ஆம்! உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு இனங்கள், நாடுகள், அமைப்புகளிலிருந்து முஸ்லிம்கள் இங்கே ஆண்டுதோறும் சங்கமிக்கிறார்கள். அவர்களின் ஒரே இறைவன் நேரத்தையும் இடத்தையும் தேர்ந்தெடுத்துள்ளான். மாநாட்டில் கலந்து கொள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் அழைப்பு உண்டு. யாரையும் தடுத்து நிறுத்த ஒருவருக்குமே அதிகாரம் இல்லை.

# 7

# இஸ்லாத்தில் மனித உரிமைகள்

இறைவன் இப்பேரண்டத்தின் நிகரற்ற தனித் தலைவனாக, பேரதிபதியாக இருக்கின்றபடியால், அவனே அரசாண்மை மிக்கவன்; பாதுகாவலன்; புரவலன்; கருணையாளன். அவனே அனைவரையும் படைத்துள்ளான். அவனின் கருணையைக் கொண்டே அனைத்து உயிர்களும் ஜீவிக்கின்றன. மேலும், அவனே அனைத்து உயிருக்கும் கண்ணியத்தையும் மரியாதையையும் வழங்கியுள்ளான். இந்த எதார்த்த உண்மைகள் என்ன உணர்த்துகின்றன? மனிதர்கள் தம்முடைய தன்மைகளில் எவ்வளவு வேறுபட்டிருந்தாலும் ஒன்றிணையலாம். அவனைக் கொண்டே தங்களிடையே சமத்துவத்தையும் சமஉரிமையையும் நிலைநாட்டலாம். அவர்களிடம் மேலோட்டமாக பல வேற்றுமைகள் தென்பட்டாலும், இன-நிற-மொழி அடிப்படையில், பிரதேச அடிப்படையில் பல வேறுபாடுகள் இருந்தாலும் அவை அடிப்படையானவை இல்லை. மனிதர்கள் அனைவரும் ஏக இறைவனின் படைப்பினங்கள் எனும் வகையில் அவற்றைக் களையலாம். இவ்வாறு கருணைமிக்க ஒரே இறைவனுக்கு அஞ்சிப் பணிகின்ற காரணத்தால் மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே! இது ஒரு பாரபட்சமற்ற, சாந்தி மிகுந்த சூழலாகும். இத்தகு சூழலில் இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையான ஏகத்துவம்-ஓரிறைக் கொள்கை மேலோங்கி மைய அச்சாக விளங்குவதால் மனிதகுலம் முழுவதும் சகோதரத்துவ அடிப்படையில் ஒன்றாக இருப்பதும் அவசியமாகிவிடுகின்றது.

இறைவன் ஒருவனே என்னும்போது மனிதர்கள் அனைவரும் அவனது படைப்புக்களே என்பதும் தெளிவாகிறது. உலகில் ஏதாவதொரு பாகத்தில் இஸ்லாமிய ஆட்சி அமைகிற வாய்ப்பு இருந்தாலும் பூகோள அடிப்படையில் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டுமே மனித உரிமைகள், மாண்புகள் பேணப்பட வேண்டும் என்று இஸ்லாம் வரையறுக்கவில்லை. இஸ்லாம் அளித்திருக்கும் மானிட உரிமைகள் உலகளாவியவை; மனிதகுலம் முழுவதற்கும் பொருந்தக் கூடியவை. அந்த உரிமைகள்-ஒரு மனிதன் இஸ்லாமிய அரசுக்குட்பட்ட எல்லையில் வாழ்ந்தாலும் சரி, அதற்கு வெளியே வாழ்ந்தாலும் சரி, போரிட்டாலும்சரி, எந்த நிலைமையானாலும் கடைபிடிக்கப்பட வேண்டியவையே!

**குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது.**

''இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப்பொருத்தமானது''.

(5:8)

மனித இரத்தம் புனிதமானது; எந்நிலையிலும் அதனை அநியாயமாக சிந்தக் கூடாது. இந்தச் சட்டத்தை மீறி ஒரு மனித உயிரை அநியாயமாக கொலை செய்பவர் மனிகுலம் முழுவதையும் கொலை செய்தவரைப் போன்றவராவார்.

**குர்ஆன் கூறுகிறது:**

''பூமியில் குழப்பம் ஏதுமற்ற நிலையில் அநியாயமாக'ஒருவரை கொலை செய்பவர் (இறந்தவர் மீது கொலைப் பழி இல்லாத நிலையில்) மனித இனம் முழுவதையுமே கொன்றவர் போலாவார்''.

(5:32)

பெண்கள், மழலைகள், வயது முதிர்ந்தோர், நோயாளிகள், காயமடைந்தோர் ஆகியோரை கொடுமைப்படுத்துவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. எல்லா சூழலிலும் பெண்களின் கற்பும், கண்ணியமும் மதிக்கப்பட்டாக வேண்டும். எதிரிகளாய் இருந்தாலும் சரி, இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் வறியவர்கள், காயமடைந்தோர், பாதிக்கப்பட்டோர்களுக்கு உரிய பரிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

இஸ்லாத்தில் பேசப்படுகிற மனித உரிமைகள் இறைவனால் வழங்கப்பட்ட உரிமைகளாகும். அவை ஏதோ ஒரு அரசாலோ, சட்டமன்றத்தினாலோ வழங்கப்பட்டவையல்ல. மன்னர்கள் அல்லது சட்டமன்றங்கள் வழங்கும் உரிமைகள் ஒரு காலத்தில் ரத்து செய்யப்பட்டுவிடலாம். சர்வாதிகாரிகளின் அரசாணையும் இவ்வாறு மாற்றப்படக்கூடியதே! அவர்களுக்கு ஒத்துவரக் கூடிய சூழலில் அதை நிறைவேற்றுவார்கள். இல்லையென்றால் விலக்கிவிடுவார்கள். ஆனால் இஸ்லாத்தில் அடிப்படை மனித உரிமைகளை மாற்றவோ திருத்தவோ உலகின் எந்த சட்டமன்றத்திற்கும், அரசுக்கும் அறவே உரிமையில்லை. ஏனெனில், அவையனைத்தும் இறைவனால் வழங்கப்பட்டவை. யாருக்கும் அவற்றைத் திரும்பப் பெறவோ, மீறவோ, மாற்றவோ அதிகாரமில்லை.

வெற்றுத்தாளில் எழுதி வீண் விளம்பரத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படும் உதவாக்கரை ஆவணங்களல்ல அவை. வெளிச்சம் போட்டுக்காட்டிய பின் நடைமுறை வாழ்வில் அமல்படுத்தாமல் பதுக்கும் சட்டங்கள் அல்ல அவை. உருப்படாத் தத்துவங்கள் அல்ல அவை: அமல் படுத்துவதற்கு இசைவாணை **(Sanction)** இல்லாத வறட்டுக்கொள்கைகள் அல்ல அவை.

ஐக்கிய நாட்டுப் பேரவை அதனுடைய பிரகடனம், அது எடுத்த தீர்மானம், வழங்கிய மனித உரிமைகள் இறைவன் அருளிய மனித உரிமைகளோடு ஒப்பிடக் கூடியவை அல்ல. ஏனெனில் இறைவன் வழங்கிய மனித உரிமைகள் இஸ்லாமிய நம்பிக்கையின் பிரிக்கமுடியா அங்கமாகும். ஒவ்வொரு முஸ்லிமும், தன்னை முஸ்லிம் என வாதிடும் ஆட்சியாளனும் இவற்றைக் கண்டிப்பாக ஒப்புக்கொண்டு, அங்கீகரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இறைவன் வழங்கிய இவ்வுரிமைகளை மாற்றினாலோ, திருத்தினாலோ, மறுத்தாலோ, வெறும் வாய்வேதாந்தம் பேசினாலோ, அமல்படுத்தத் தவறினாலோ குர்ஆன் எச்சரிப்பதைப் பாருங்கள்:

''எவர்கள் அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள்தாம் நிராகரிப்பாளர்கள்.''

(5:44)

## *இஸ்லாமிய அரசில் மனித உரிமைகள்*

### *1. உயிர் மற்றும் உடைமைப் பாதுகாப்பு:*

இறுதி ஹஜ்ஜின்போது முஹம்மத் நபி (ஸல்) கூறினார்கள்: ''(இறைவனை நீங்கள் சந்திக்கும் இறுதித் தீர்ப்பு நாள் வரை) ஒருவர் மற்றவரின் உடைமையை, உயிரை பறிக்கக் கூடாது.''

முஸ்லிம் நாட்டில் வாழும் முஸ்லிமல்லாத குடிமக்களின் உரிமைகளைக் குறித்து முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''ஒரு திம்மியை (முஸ்லிமல்லாத குடிமகனை) கொலை செய்பவன் சுவனத்தின் வாடையைக்கூட நுகர முடியாது.''

### *2. மனித மாண்பின் பாதுகாப்பு:*

**குர்ஆன் கூறுகிறது:**

1) ஒருவரையொருவர் பரிகாசம் புரியாதீர்
2) அவதூறு கற்பிக்காதீர்

3) பட்டப்பெயர் சூட்டி இழிவுபடுத்தாதீர்.
4) புறங்கூறாதீர்; தரக்குறைவாக பேசாதீர்.

(49:11-12)

### *3. தனிநபர் வாழ்வும் புனிதமும்:*

1) உளவு பார்க்காதீர்
2) உரியவரின் அனுமதியின்றி ஒருவரின் வீட்டுக்குள் நுழையாதீர்

### *4. தனிநபர் சுதந்திரம்:*

எந்தவொரு மனிதனின் குற்றமும் பகிரங்கமாக நீதிமன்றத்தில் நிரூபணமாகாத வரை, அவரை சிறையிலடைக்கக் கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் ஒருவரை சிறையிலடைக்கக் கூடாது. நீதிமன்றத்தில் ஒருவரைப் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்பளிக்காமல் சிறையிலடைக்க இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

### *5. கொடுங்கோன்மைக்கு எதிரான பாதுகாப்பு:*

இஸ்லாம் வழங்கிய மனித உரிமைகளில் ஒன்று அரசுக் கொடுங்கோன்மைக் கெதிரான பாதுகாப்பாகும்.

**குர்ஆன் கூறுகிறது:**

''தீங்கான சொற்களை வெளிப்படையாகப் பேசுவதை இறைவன் விரும்புவதில்லை. ஆனால் பாதிக்கப்பட்டவர் பேசலாம்.''

(4:148)

இஸ்லாத்தில் அனைத்து அதிகாரங்களும் இறைவனுக்கே உரியவை. மனிதனுக்கு வழங்கப்பட்டதெல்லாம் பிரதிநிதிக்குரிய அதிகாரமே! அடைக்கலமாக அளிக்கப் பட்ட அதிகாரமே ஆகும்.

இத்தகைய அதிகாரங்களைப் பெற்றவர், மக்களின் முன் தூய்மையானவராக அப்பழுக்கற்றவராக காட்சியளிக்க வேண்டும். அந்த மக்களின் நன்மையை ஒட்டியே அதிகாரம் பயன்பட வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தி அபூபக்ர்(ரலி) அவர்கள் பதவியேற்ற பின் தம்முடைய முதல் உரையில் கூறுகிறார்:

"நான் நல்லது செய்தால் என்னோடு ஒத்துழையுங்கள்; நான் தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள். இறைவனின் - இறைத்தூதரின் ஆணைகளை நான் நிறைவேற்றும் வரை எனக்குக் கீழ்ப்படியுங்கள். நான் வழிதவறி நடந்தால் எனக்கு கீழ்ப்படிய வேண்டாம்."

### *6. கருத்துச் சுதந்தரம்:*

குடிமக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்தரத்திற்கு இஸ்லாம் முழு உத்தரவாதமளிக்கிறது. ஆனால், ஒரு நிபந்தனை. ஒழுக்க மேம்பாட்டிற்கும், வாய்மைப் பரவுதலுக்கும் துணையாக அது அமைய வேண்டும். கொடுங்கோன்மை மற்றும் தீங்கு அதிகரிக்கலாகாது.

கருத்துச் சுதந்தரம் பற்றி மேலைநாட்டினர் கொண்டுள்ள கருத்தோட்டத்தைவிட இஸ்லாம் அளித்துள்ள கருத்துச் சுதந்தரம் சிறப்பானது. எந்தக் காரணத்தாலும் தீமைகள், அநியாயங்கள் பெருகுவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. விமர்சனம் என்ற பெயரில் பழி, தாக்குதல், அத்துமீறல்களை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இறையாணை ஏதேனும் உள்ளதா என்று முஸ்லிம்கள் முஹம்மத் நபி(ஸல்) அவர்களை விசாரிப்பது வழக்கம். அப்படி இறைக்கட்டளை எதுவும் வெளியாகவில்லை என்று நபிகளார் கூறினால், முஸ்லிம்கள் வெளிப்படையாக, மனம்விட்டு தத்தமது கருத்துக்களைக் கூறுவார்கள்.

### *7. கூடிவாழும் உரிமை:*

கட்சி, மன்றங்கள் அமைத்து மனிதர்கள் கூடி வாழும் உரிமை மதிக்கப்பட வேண்டும். இந்த உரிமையும் ஒருசில பொதுநல விதிகளுக்குட்பட்டே இருக்கவேண்டும்.

### *8. தீர்மானிக்கும் உரிமை:*

இஸ்லாம் கூறுகிறது:

''இறைமார்க்கத்தில் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை''

(2.256)

சர்வாதிகார சமூக அமைப்பில் தனிநபர் உரிமை என்பதே எதுவும் இல்லை.அரசிற்கு அளிக்கப்படும் வரையற்ற அதிகாரங்கள், மனித அடிமைத்தனத்தையும், கீழ்மையையும் உண்டாக்கும். ஒரு காலத்தில் மனிதன் மீது முழு அதிகாரம் செலுத்தும் அடிமை முறை உலகில் அமலில் இருந்தது. இப்பொழுது அத்தகைய அடிமை முறை சட்டபூர்வமாக ஒடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அடிமைத்துவத்திற்குச் சமமான தனிநபர் கட்டுப்பாடுகளை சர்வாதிகார சமூக அமைப்பு விதித்துள்ளதை நாம் கண் கூடாகவே பார்க்கலாம்.

***9. சமய உணர்வுகளுக்குப் பாதுகாப்பு:***

சுயதீர்மான உரிமை மற்றும் கருத்துச் சுதந்தரத்தை இஸ்லாம் வலியுறுத்துகிற அதே நேரத்தில் தனிநபரின் சமய உணர்ச்சிகளுக்கு உரிய மதிப்பளிக்கவும் தவற வில்லை. சமய விவகாரத்தில் ஒருவரின் உரிமையை ஆக்கிரமிக்கும் வகையில் எந்தச் செயலும் கூடாது; எந்தப் பேச்சும் கூடாது என இஸ்லாம் அறிவுறுத்துகிறது.

***10. தவறான தண்டனையிலிருந்து பாதுகாப்பு:***

வேறொருவர் செய்த குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்படுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

**குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.**

''ஒருவரின் சுமையை மற்றவர்கள் சுமக்கமாட்டார்கள் ''

(6:164)

***11. வாழ்வாதார அடிப்படைக்கான உரிமை:***

தேவையுள்ளோருக்கும் வறியோருக்கும், உரிய உரிமைகளை இஸ்லாம் ஒப்புக்கொள்கிறது. அவர்களுக்கு உரிய,நியாயமான தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

இறைவன் கட்டளையிடுகிறான்:

''அவர்களின் சொத்தில் வறியவர்களுக்கும், தேவையுள்ளோருக்கும் உரிமையுண்டு.''

(70:15)

***12. சட்டத்தின் முன் அனைவரும் சமம்:***

சட்டத்தின் பார்வையில் அனைத்து குடிமக்களுக்கும் பரிபூரண, முழுமையான உரிமையை இஸ்லாம் வழங்குகிறது.

***13. ஆட்சியாளர் விதிவிலக்கல்ல:***

ஓர் உயர்ந்த வம்சத்து பெண் திருட்டுக்குற்றத்திற்காக கைது செய்யப்பட்டாள். அந்த வழக்கு முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் முன் கொண்டுவரப்பட்டது. 'திருட்டுக் குற்றத்திலிருந்து அவளை விடுவிக்க வேண்டும்; தண்டிக்கக் கூடாது' என்று சிலர் பரிந்துரை செய்தனர். அப்பொழுது முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''இதற்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர், சாமானியர்கள் தவறு செய்தால் தண்டிப்பார்கள். மேட்டுக்குடிமக்கள் அதே தவறைச் செய்தால் தப்பிக்கவிடுவார்கள். என் ஆத்மா யார் கைவசம் இருக்கிறதோ, அந்த அல்லாஹ் வின் மீது ஆணையாக, முஹம்மதின் மகள் ஃபாத்திமா இதே தவறை செய்தாலும் நான் அவர் கையை துண்டிக்காமல் விடமாட்டேன்.''

### *14.அரசின் விவகாரங்களில் கலந்து கொள்ளும் உரிமை:*

''அவர்கள் பணிகள் அவர்களுக்குள் கலந்தாலோசனை மூலமாகவே (நடைபெறும்)''

(42.38)

ஆலோசனை சபை அல்லது சட்டமன்றம் என்பதன் கருத்து இதுதான்:

அரசின் தலைவர், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்தரமாக, சுயேட்சையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

சட்டபூர்வ பாதுகாப்பினை நல்கி மேற்கூறிய மனித உரிமைகளைச் சாதிப்பதில் இஸ்லாம் நாட்டம் கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல, மிருக இயல் புகளைவிட்டு வெளியேறி, மனிதமாண்புகளை மேற்கொள்ளவேண்டும்; இரத்தபந்தம், இனமேன்மை, மொழி வெறி, பொருளாதார மேலுரிமை போன்ற குறுகிய வட்டங்களை விட்டு பரந்த நோக்கின்பால் வரவேண்டும்; அந்தரங்க சுத்தியோடு சர்வதேச சகோதரத்துவத்தை நிறுவி வாழ வேண்டும் என இஸ்லாம் மனிதகுலத்திற்கு அறைகூவல் விடுத்து அழைக்கிறது!

# 8

# இஸ்லாமிய ஒழுக்கவியல்

மனிதகுலம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய சர்வதேச அடிப்படை உரிமைகளை இஸ்லாம் விதித்துள்ளது. இவை எல்லாக் காலத்திலும் எல்லாச் சூழ்நிலையிலும் மதிக்கப்பட்டு பேணப்பட வேண்டியவை. இந்த உரிமைகளைச் சாதிப்பதற்கு சட்ட பாதுகாப்பை மட்டும் இஸ்லாம் அளிக்கவில்லை. வலுவான ஒழுக்க வாழ்வமைப்பையும் வழங்கியுள்ளது. தனிநபர் வாழ்வுக்கும் சமுதாய நலத்திற்கும் வழிகோலும் அனைத்துச் செயல்களும் இஸ்லாத்தில் அறமாக கருதப்படுகிறது. தனிநபர் மற்றும் சமூகநலத்திற்கு ஊறுவிளைவிப்பவை ஒழுக்கக்கேடாக கொள்ளப்படுகிறது. இஸ்லாத்தில் இறையன்பும், மனித நேயமும் மிக முக்கியமாகக் கருதப்படுவதால், வெற்றுச் சடங்குகளுக்கு இங்கு வேலையேயில்லை.

**குர்ஆன் கூறுகிறது:**

''நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக, அல்லாஹ்வையும், இறுதிநாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், மேலும், (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், மேலும் தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் நம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும், சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின்போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர்! இவர்களே உண்மையாளர்கள்! மேலும், இவர்களே இறையச்சமுடையவர்கள்.''

(2:177)

இந்த வசனங்களில் நேர்மை, இறையச்சம் ஆகியவற்றிற்கு அழகான விளக்கம் அளிக்கப்படுகிறது. வணக்க வழிபாட்டு விதிகளை மனிதன் கடைபிடிக்க வேண்டும்.

இறையன்பு, மனித அன்பு கருத்தூன்றி கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டுள்ளது. நான்கு விஷயங்கள் இங்கு கூறப்பட்டுள்ளன:

(1) நமது நம்பிக்கை வாய்மையானதாகவும், உளமார்ந்ததாகவும் இருக்க வேண்டும்.

(2) பிற மனிதர்களுக்கு உதவிபுரிதல் மூலமாக நமது நம்பிக்கை வெளிப்பட வேண்டும்.

(3) சமூகநல மன்றங்களை ஆதரிக்கும் நல்ல குடிமகனாக விளங்க வேண்டும்.

(4) எந்தச் சூழலிலும் நேரியபாதையிலிருந்து அசைக்க முடியாத, திடமான உள்ளத்தை நாம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த அளவுகோலை வைத்துக்கொண்டு நன்மையான வற்றையும் தீமையானவற்றையும் அறிந்து கொள்ள முயல வேண்டும். முழு ஒழுக்கமாண்புகளும் இந்த மைய அச்சினூடே சுழல வேண்டும். ஒழுக்க விதிகளை வலியுறுத்தும் முன்னர் இஸ்லாம் ஒன்றை தெளிவாக மனித உள்ளத்தில் விதைக்க விரும்புகிறது. இறைவன் எப்பொழுதும் எல்லா இடத்திலும் மனிதனை பார்க்கக்கூடியவனாக இருக்கிறான்; உலகத்தாரின் பார்வையை மனிதன் ஏமாற்றலாம்; ஆனால் இறைவனை ஏமாற்ற இயலாது. உலகத்தாரின் - அரசின் தண்டனையிலிருந்து தப்பலாம்; ஆனால் இறைவனின் பிடியிலிருந்து தப்பமுடியாது. இறைதிருப்தியை - இறை மகிழ்ச்சியை பெறுவதே மனிதனின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என இஸ்லாம் அறிவுறுத்துகிறது. இவ்வாறு அறச் செயலுக்கான மிக உயர்ந்த ஒரு நிலையை - துலாக்கோலை வழங்கியுள்ளது. மானிட ஒழுக்கப் பரிணாம வளர்ச்சிக்கு இது எண்ணற்ற வாயில்களைத் திறக்கவைக்கிறது. ஞானத்திற்கு அடிப்படை ஆதாரமாக இறைவாக்கு (வேதவெளிப்பாடு) கொள்ளப்படுகிறது. இதனால் ஒழுக்கத்துக்கான நீடித்த- நிலைத்த அளவுகோல் நிர்ணயிக்கப்படுகிறது.

இங்கே நியாயமான விட்டுக் கொடுத்தல்களும் ஒருவரையொருவர் சார்ந்திருத்தலும், சமூகப் புதுமை மாற்றங்களும் அனுமதிக்கப்படும். தான் தோன்றித்தனம், ஏற்றத்தாழ்வுகள், மூர்க்கத்தனமான போக்குகள் இங்கு இருக்காது. இறையச்சம் இறையன்பு இவையே ஒழுக்க மாண்புகளைச் செயல்படுத்தும் உந்து சக்திகளாய் விளங்குமே தவிர உலகாயதக் கட்டுப்பாடோ, கட்டுக்காவலோ நிர்பந்தங்களோ அல்ல.

இறைநம்பிக்கை மற்றும் தீர்ப்புநாளைப் பற்றிய நம்பிக்கையை வலியுறுத்துவதன் வாயிலாக ஒழுக்க நடவடிக்கைகளை உளப்பூர்வமாக மனிதன் மேற்கொள்ளும் ஆற்றலை இஸ்லாம் வழங்கிவிடுகிறது. இதனால் உள்ளமும் ஆத்மாவும் ஐக்கியப்பட்டு, நல்ல பண்புகளுக்கு அர்ப்பணமாகிறது. நன்கு அறியப்பட்ட ஒழுக்க நியதிகளின் முக்கியத்துவத்தை இஸ்லாம் குறைத்து மதிப்பிடவில்லை; நவீன அறப்போதனையும் கூறிடவில்லை; தவறான மூலத்தையும் தந்திடவில்லை; புது

மாறுதலையும் அளிக்கவில்லை; காரணமின்றி ஒரு சிலவற்றை அளவுக்கதிகமாக கவனத்தில் கொள்வதும் வேறு பலவற்றை அறவே நிராகரிக்கும் போக்கும் இஸ்லாத்தில் இல்லை. நடுநிலையோடு, சம நிலையோடு பொதுவாக உலகில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒழுக்கப் பண்புகளை கூடுதல் குறைவின்றி இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது. முழுஅளவிலான வாழ்க்கைத் திட்டத்தில் ஒவ்வொரு ஒழுக்கப் பண்பிற்கும், சமச்சீரான அளவில் அதற்குரிய தகுந்த இடத்தை இஸ்லாம் அளிக்கிறது. தனிநபரின் ஆளுமையை விரிவாக்கி குடும்பம், சட்டம், கல்வி, சமூக எல்லைகளில் சமுதாயத்துடன் உறவுகளை வலுவடையச் செய்கிறது. கருவறையிலிருந்து மண்ணறை வரை இத்தொடர்பும் சம்பந்தமும் நீடிக்கிறது. சமையற் கட்டிலிருந்து ஆட்சிக்கட்டில் வரையிலும், உணவறையிலிருந்து போர்க்களம் வரையிலும் ஆக, வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இஸ்லாம் ஒழுக்க மாண்பினை வலியுறுத்துகிறது. தனிவாழ்வு, பொதுவாழ்வு எதுவுமே இதிலிருந்து தப்புவதில்லை. வாழ்க்கையை ஒரே கூறாக இஸ்லாம் பார்ப்பதால் அனைத்து நிலையிலும் அறப் போதனைகள் ஏற்கப்பட வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. தனிநபர் தேவைகள், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு குறுகிய தன்னல எல்லைகளையெல்லாம் கடந்து ஒழுக்க மாண்புகள் வாழ்வியல் பற்றுக்கோடாக - ஆதிக்கச் சக்தியாக மலர்ந்து நிற்க இஸ்லாம் நாட்டம் கொள்கிறது.

அனைத்து விதமான தீமைகளிலிருந்து பாதுகாப்பளித்து, ஒட்டு மொத்தமான நல்லவைகளின் தொகுப்பை வாழ்வியல் திட்டமாக இஸ்லாம் மனிதர்கள் முன் சமர்ப்பிக்கிறது. அறவுரைகளைப் பரப்புவதோடு நின்றுவிடாமல் தீமைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. நன்மைகள் பரவ வேண்டும். அதே நேரத்தில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். நன்மையை ஏவுதலும் தீமையைத் தடுத்தலும் ஏககாலத்தில் செய்தாக வேண்டும். மனச்சான்று உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். நற்பண்புகள் இரண்டாவது இடத்திலும் தீய குணங்கள் முதலாவது இடத்தில் அரசோச்சுவதையும் இஸ்லாம் ஒப்பவில்லை. இந்த அறைகூவலை யார்யாரெல்லாம் செவிமடுக்கிறார்களோ, ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களெல்லாம் ஒரே இலட்சியக்குழுவாகச் சங்கமிக்கிறார்கள். அவர்களுக்குத்தான் `முஸ்லிம்´ என்று பெயர். இந்தச் சமுதாய உருவாக்கத்திற்கு மூலநோக்கம் இதுதான்:

''நல்லவைகளை வலியுறுத்தி தீமைகளை அடக்கியாள அமைப்பு ரீதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.''

ஒரு முஸ்லிமுடைய வாழ்வின் பல்வேறு கோணங்களை எடுத்துரைக்கும் இஸ்லாமிய அடிப்படை ஒழுக்க அறிவுரைகளைப் பார்ப்போம். ஒரு முஸ்லிமின் ஒழுக்கமான தனிவாழ்வு மற்றும் சமூகப்பொறுப்புகளை பரந்த அளவில் உள்ளடக்கியதாக அவை அமைந்துள்ளன என்பது தெளிவாகும்.

## இறையுணர்வு:

ஒரு முஸ்லிமின் மிக உச்சக்கட்ட பண்பு இறை நம்பிக்கையே என்று குர்ஆன் கூறுகிறது.

''உங்களில் யார் மிகவும் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியவான்!''

(49:13)

இரக்க சிந்தை, அடக்கம், ஆசைகளையும், உணர்வுகளையும் கட்டுப்படுத்துதல், வாய்மை, ஒழுங்கு, பொறுமை, நிலைகுலையாமை, நேர்மை, ஒப்பந்தத்தை நிறைவேற்றல் ஆகிய நற்குணங்களை ஒழுக்கப் பண்புகளாக மீண்டும் மீண்டும் குர்ஆன் வலியுறுத்துகிறது.

''நிலைகுலையாத பொறுமையாளர்களையே இறைவன் நேசிக்கின்றான்.''

(3:146)

''அவர்கள் வசதியுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள்; சினத்தை அடக்கிக் கொள்வார்கள்; மேலும் மக்களை மன்னிப்பார்கள், இத்தகைய உயர்பண்பினரை இறைவன் நேசிக்கிறான்.''

(3:133-134).

''தொழுகையை நிலைநிறுத்துங்கள். நல்லவற்றை ஏவுங்கள், தீமைகளை விலக்குங்கள். சிரமங்களை சகித்துக் கொள்ளுங்கள். செயல்களில் இது சத்திய நிலைப்பாடாகும். மனிதர்களை விட்டு முகத்தை (பெருமை கொண்டு) திருப்பிக் கொள்ளளாதீர்கள். பூமியில் பெருமையுடன் நடக்காதீர்கள். கர்வம், பெருமை கொள்வோரை இறைவன் நேசிப்பதில்லை. நடத்தையில் நடுநிலையை விரும்புங்கள். குரலையும் தாழ்த்திக் கொள்ளுங்கள். நிச்சயமாக குரல்களிலெல்லாம் மிக அருவெருக்கத்தக்கது கழுதையின் குரலே''

(31:18-19)

ஒழுக்க நியதிகளின் தொகுப்பாக நபி(ஸல்) கூறுகிறார்கள்:

"என்னுடைய இறைவன் எனக்கு ஒன்பது கட்டளைகள் பிறப்பித்துள்ளான். நான் தனிமையிலும் (மற்றவர்களுடன்) சேர்ந்திருக்கும் போதும் இறைவனை நினைக்க வேண்டும்; கோபத்திலும் மகிழ்ச்சியிலும் நீதமாகப் பேசவேண்டும்; வறுமையிலும் வளத்திலும் நடு நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்; என்னுடன் யார் நட்புறவைத் துண்டித்தார்களோ அவர்களுடன் நான் நட்புறவு கொள்ள வேண்டும். எனக்குத் தந்துதவ மறுத்தவர்களுக்கு நான் கொடுத்து உதவ வேண்டும். எவற்றை பற்றி நான்

உங்களிடம் ஏவாமல் விட்டு விட்டேனோ அவை பழிப்புக்குரியவை; மேலும் எவற்றை நான் உங்களுக்கு ஏவினேனோ அவை மிக்க நல்லவை!

## சமூக பொறுப்புகள்:

இஸ்லாம் கற்பிக்கும் சமூகக் கடமைகள் கழிவிரக்கம், பிறர்நலம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. சில குறிப்பிட்ட நேரங்களில் பரந்த மனப் பாங்குடன் கூடிய இந்த இறையாணைகள் சில நேரங்களில் விதிவிலக்காகவும் அமைவதுண்டு. பல்வேறு உறவுகளுக்கிடையே இருக்க வேண்டிய உரிமைகள், பொறுப்புகளை இஸ்லாம் வலியுறுத்தும் அதே நேரத்தில், குறிப்பிட்ட அன்பார்ந்த நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துகிறது. பரந்து பட்ட மனிதத் தொடர்புகளில் முதலாவது நமது குடும்ப உறுப்பினர்களிடையே அமைய வேண்டியதாகும் - தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தைகள் - பிறகு ஏனைய உறவினர்கள், அண்டை வீட்டார், நண்பர்கள், அறிமுகமானோர், அநாதைகள், விதவைகள், வறியோர், ஏனைய முஸ்லிம்கள், ஏனைய மனிதர்கள், மிருகங்கள் என்று மனித உறவின் வட்டம் விரிவடைந்து செல்வதைப் பார்க்கிறோம்.

## பெற்றோர்:

பெற்றோருக்கு பணிவிடை செய்வது, மதிப்பளிப்பது குறித்து இஸ்லாம் மிக அதிகமாகவே எடுத்துக் கூறுகிறது. இறைநம்பிக்கையில் ஒரு பகுதியாகவும் இது கொள்ளப்படுகிறது.

''உமதிறைவன் தன்னைத்தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்றும், தாய் தந்தைக்கு நன்றி செலுத்தும்படியும் கட்டளையிட்டிருக்கிறான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்டபோதிலும் உம்மிடமிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம்; அவர்களை நிந்திக்கவும் வேண்டாம். அவர்களிடம் பணிந்து நடப்பீராக! அன்றி, 'இறைவா! நான் குழந்தையாயிருந்தபோது என்னை அவர்கள் வளர்த்து ஆதரித்த வண்ணமே நீயும் அவ்விருவர் மீதும், அன்பும் அருளும் புரிவாயாக!' என்றும் நீர் பிரார்த்திப்பீராக!

(17:23-24)

## பிற உறவினர் தொடர்பு:

''உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுடைய உரிமைகளை கொடுத்து விடவும். அளவு கடந்து உங்கள் செல்வத்தை வீண் செலவு செய்ய வேண்டாம்.''

(17:26)

## அண்டைவீட்டார் உரிமை:

முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''அண்டை வீட்டுக்காரர் பசியோடிருக்கும்போது தான் மட்டும் வயிறார உண்பவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்.''

''எவருடைய தீய நடத்தையிலிருந்து அண்டைவீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ, அவர் இறைநம்பிக்கை கொண்டவராகமாட்டார்.''

திருக்குர்ஆன் மற்றும் முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் அறிவுரைகளிலிருந்து தெரியவரும் கருத்து யாதெனில், ஒரு முஸ்லிம் தனது பெற்றோர், உறவினர்கள், அண்டை வீட்டார் ஆகியோரின் உரிமைகளை மட்டும் பேணி நடந்தால் போதாது. மாறாக முழு மனிதகுலம், மிருகங்கள், பயன்தரு மரங்கள், தாவரங்கள் ஆகிய அனைத்துக்கும் உரிய சமூகப் பொறுப்புகளை நிறை வேற்றியே தீர வேண்டும். உதாரணமாக, விளையாட்டாக மிருகங்களையும் பறவையினங்களையும் வேட்டையாடுவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

தகுந்த அத்தியாவசிய காரணமின்றி பயன்தரும்மரங்களையும் கனிதரும் தாவரங்களையும் வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்று தெளிவாகிறது. ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் இஸ்லாம் நிர்மாணிக்கும் உயர்ந்தபட்ச குணவொழுக்க அமைப்பில் மனிதகுலம் அதன் வலிமையை உணரும். தன்னார்வ மாயைகளிலிருந்து ஆத்மாவை இது விடுவிக்கும்; கொடுங்கோன்மை, கொடூர, தாறுமாறான, சுயநலப் போக்கை இது தவிர்க்கும். இது இறையச்சமுள்ள மனித இனத்தை உருவாக்கும். பொய்மையுடன் ஒத்துப்போகாத கொள்கைக் குன்றுகளை இது உருவாக்கும். இச்சமூகத்தில் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல், சுயக்கட்டுப்பாட்டுடன் திகழும் சமூக நல விரும்பிகளை தோற்றுவிக்கும். அனைத்து உயிர்களின் மீதும் அனைத்து காலகட்டத்திலும் இரக்கம், அன்பு, ஈதல், தொண்டுள்ளம், அமைதி, வாய்மை கொண்டு பழகும் தன்மையை இஸ்லாம் வளர்க்கிறது. சிறந்த தூய பண்புகள் செழித்தோங்குவதால் நல்லவைகளையே இச்சமூக அமைப்பில் எங்கும் நீக்கமற எதிர்பார்க்கலாம்.

# 9

# இறைவனைப் பற்றி இஸ்லாத்தின் கருத்தோட்டம்

கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்கிற கேள்வி மனிதனின் உள்ளத்தைப் பல நூற்றாண்டுகளாகவே ஆக்கிரமித்து வந்துள்ளது. வரையறைக்குட்பட்ட மனிதனின் சிற்றறிவால், முடிவேயில்லாத வரையறைக்குட்படாத இறைவனின் உண்மையை - 'அவன் இருக்கிறான்' என்பதை நிரூபித்திட இயலாது என்றும், ஆவல் பொங்கும் மனித உள்ளத்தைத் திருப்தியடையச் செய்வதற்காக அவனது உள்ளமையை உதாரணங்களால் விளக்கிக் காட்டிடத்தான் மனித அறிவால் முடியும் என்றும் இறைவன் இருப்பதாக நம்புவோர் கருதுகின்றார்கள்.

இறைவனை நிராகரிப்பவர்கள் அறிவியலை, தத்துவத்தை அல்லது அறிவியலின் சிறப்புக் கொள்கைகள் சிலவற்றைத்தாம் சார்ந்திருப்பதாகக் கூறுகின்றார்கள். இவர்களுடைய வாதங்கள் சில நேரங்களில் நடமுறைக்கு ஒவ்வாதவையாகவும் சில நேரங்களில் தத்துவ உலகில் பொருத்தமற்றவையாகவும் உள்ளன; அதே நேரத்தில் எப்போதும் சிக்கல் மிகுந்தவை யாகவும் பொரும்பாலும் அறிவுக்கொவ்வா தவையாகவும் உள்ளன. எனினும், வளர்ச்சியடைந்த உள்ளம், இறைவனைச் சென்றடையும் பாதையைக் கண்டறிந்திட முடியும். இறைவனை அடைவதற்கான வழியை அறிந்துகொள்ள முடியாமல் தோற்றுப் போவதால் அதற்கான வழியே இல்லை என்று அர்த்தமாகிவிடாது. ஓர் உண்மையை - எதார்த்தத்தை ஏற்க மறுத்து விடுவதால் அந்த உண்மை பொய்யானது; கற்பனையானது என்றாகிவிடாது.

நம்மைச் சுற்றிலும் நாம் சற்று கூர்ந்து நோட்டமிடுவோமாயின் நமக்குப் பின்வரும் விஷயங்கள் புலப்படும்: ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தலைவர் இருக்கின்றார்; ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் ஒரு முதல்வர் இருக்கின்றார்; ஒவ்வொரு நகரத்திற்கும் ஊருக்கும் நகரத்தந்தை ஒருவர் இருக்கின்றார். ஒவ்வொரு மாநிலமும் முதலமைச்சர் ஒருவரையும், ஆளுநர் ஒருவரையும் பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு உற்பத்திப் பொருளும் உற்பத்தியாளர் ஒருவரின் உழைப்பே என்பதையும், ஒவ்வோர் அழகிய ஓவியமும் திறன் வாய்ந்த ஓவியர் ஒருவரின் படைப்பே என்பதையும் நாம்

சந்தேகத்துக்கிடமின்றி அறிவோம். இவையனைத்தும் தெளிவான உண்மைகளே என்றாலும் இந்த உலகிலுள்ள பிரம்மாண்டமான அரிய படைப்புக்களைப் பற்றி, மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆவல் தொனிக்கும் ஐயங்களைப் போக்கக் கூடியனவாகவும் அவற்றைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்கிற அறிவுத் தாகத்தை தணிக்கக் கூடியனவாயும் அவை இல்லை.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்து கிடக்கும் வானப்பெருவெளியும், நீண்ட அடிவானப்பரப்பும், இரவும் பகலும் ஓர் ஒழுங்குமுறையுடன் மாறிமாறி வந்து கொண்டிருப்பதையும் சூரியன், சந்திரன், பெரும் பெரும் விண்மீன்கள் ஆகியன தத்தம் பாதையில், தத்தம் திசைகளில் நியமம் தவறாமல் சுழன்று வருவதையும், உயிருள்ள மற்றும் உயிரற்றபொருள்களின் உலகம் இயங்கி வருவதையும், மனிதன் தலைமுறை தலைமுறையாக நாகரிகத்தில் வளர்ச்சியடைந்து தொடர்ந்து முன்னேறி வருவதையும் கண்டு சிந்திக்கும் மனிதன் அடிக்கடி வியப்படைகின்றான். ஆகவே நாம் எந்தப் பொருள்களுடன் வாழ்ந்து வருகின்றோமோ எவற்றைப் பெரிதும் அனுபவித்து வருகின்றோமோ அந்தப் பொருள்களைப்படைத்துக் காப்பவனைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்று அவன் விரும்புகின்றான்.

இந்த மாபெரும் அண்டத்திற்கான விளக்கத்தைக் கண்டுபிடித்திட நம்மால் முடியுமா? பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி எடுத்தியம்பிடும் மெய்விளக்கமுறை ஏதும் இருக்கின்றதா? இருக்கின்றது. வாருங்கள், இனி அதனைப் பார்ப்போம். எந்தக் குடும்பமும் பொறுப்புணர்வுள்ள ஒரு தலைவன் இல்லாமல் இயங்கிட முடியாது என்பதையும் ஆரோக்கியமான, மனவலிமை வாய்ந்த நிர்வாகம் இல்லாமல் எந்த நகரமும் முன்னேறி வாழ்ந்திட இயலாது என்பதையும், நிர்வாகத்திறனுள்ள ஆட்சியாளர் இல்லாத எந்த நாடும் உலகில் நீடித்து வாழ்ந்திட முடியாது என்பதையும் நாம் அறிந்துள்ளோம். எதுவும் தானாகவே தோன்றிவிடுவதில்லை என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம். மேலும், இந்தப் பேரண்டம் மிகுந்த ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் இயங்கி நிலைத்து வருவதையும் பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்வாறு நிலைத்திருப்பதையும் பார்க்கின்றோம். இவ்வாறிருக்க, இவையனைத்தும் தற்செயலான, எதேச்சையான நிகழ்வுகள் என்று நம்மால் சொல்ல முடியாது. மனிதனும் உலகம் முழுவதும் தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பது அதிர்ஷ்டவசமாக அல்லது திடீரென்று சந்தர்ப்பவசமாக நடந்துவரும் ஒரு நிகழ்ச்சி என்று வர்ணித்திட முடியுமா?

மனிதன் தற்செயலாகவோ திடீரென்று எதேச்சையாகவோ தோன்றி இருப்பானாயின் அவனது வாழ்க்கை முழுவதுமே எதேச்சையானதாய், அதிர்ஷ்டத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். அவனது வாழ்க்கை முழுவதுமே அர்த்தமற்றதாயிருந்திருக்கும். எந்த அறிவார்ந்த மனிதனும் தன் வாழ்வை நிலைமாறிக் கொண்டேயிருக்கும் அதிர்ஷ்டத்தின், சந்தர்ப்பவசத்தின்

அடிப்படையில் அமைந்திட அனுமதிக்க மாட்டான். அறிவார்ந்த மனிதன் ஒவ்வொருவனும் தனது வாழ்வை முடிந்தவரை அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ளவும் ஒரு முன்மாதிரியின் அடிப்படையில் ஓர் ஒழுக்க நியதியைத் தனக்கென அமைத்துக்கொள்ளவுமே முயற்சி செய்வான். தனி மனிதர்களும் குழுக்களும் நாடுகளும் கூட தமக்கென ஒரு செயல்பாட்டு முறையை திட்டமிட்டு வகுத்துக் கொள்கின்றன. முன்னெச்சரிக்கையுடன் சிரத்தையெடுத்து வகுக்கப்படுகிற திட்டம் ஒவ்வொன்றும் விரும்பத்தக்க சில பலன்களைத் தரவே செய்கின்றன. உண்மை என்னவெனில் மனிதன் ஏதேனுமொரு வகையில் திட்டமிடுவதில் ஈடுபடவே செய்கின்றான். ஆகவே நல்லவிதமாக திட்டமிடுவதின் நற்பலன்களையும் மதிப்பையும் அவனால் நன்குணர முடியும்.

மனிதன் இந்த மாபெரும் பிரபஞ்சத்தின் சின்னஞ்சிறு அங்கமாகத் திகழ்கின்றான். அவனால் திட்டங்களைத் தீட்டிட முடிகின்றது. திட்டமிடுவதில் உள்ள நற்பலன்களைப் புரிந்து கொள்ள முடிகின்றது என்னும் போது அவனது வாழ்வும் இந்தப் பேரண்டத்தின் வாழ்வும் கூட ஒரு திட்டமிட்ட கொள்கையின் அடிப்படையில் தான் அமைந்திருக்க வேண்டும். அதாவது நமது உலகியல் அல்லது இயற்பியல் வாழ்க்கைக்குப்பின் நம்மை வடிவமைக்கின்ற இறைநாட்டமொன்று கட்டாயம் இயங்கிக் கொண்டிருக்கத்தான் வேண்டும். பொருள்களைத் தோற்றுவித்து அவற்றை ஒழுங்கமைப்புடன் இயங்கிடச் செய்கின்ற தன்னிகரற்ற ஆற்றல் கொண்ட மூளையொன்று செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். நாம் வசிக்கும் உலகின் வியப்பூட்டும் அம்சங்களும் வாழ்க்கையின் இரகசியங்களும் வெறும் அதிர்ஷ்டத்தினால்-சந்தர்ப்பவசத்தால் உற்பத்தியானவையாகவும் தற்செயல் நிகழ்வுகளாகவும் திடீர் விபத்தாகவும் இருக்கவே முடியாது.

ஆகவே ஒவ்வொரு பொருளையும் ஒழுங்கமைப்புடன் இந்த உலகில் கட்டுப்பாடுடன் வைத்திருப்பதற்காக பேராற்றல் ஒன்று இயங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

எழில் கொஞ்சும் இயற்கை அழகில் நமக்குப் புலப்படும் உண்மை இதுதான்! மாபெரும் படைப்பாற்றலும் ஆக்கத் திறனும் கொண்ட கலைஞன் ஒருவன்தான் இந்த இயற்கை ஓவியத்தைத் தீட்டியுள்ளான். அவன் தான் அழகுமிளிரும் இந்த கலைப்படைப்புகளை உருவாக்குகின்றான். இவையனைத்தையும் மனித வாழ்வின் பிரத்யேகமான ஒரு நோக்கிற்காகவே படைக்கின்றான்- அவனது இந்த ஆற்றல்தான் அனைத்து ஆற்றல்களிலும் வலிமைமிக்க ஆற்றலாகும். இந்தக் கலைஞன்தான் கலைஞர்களிலெல்லாம் மிகப்பெரும் கலைஞன் ஆவான். உண்மையான இறைநம்பிக்கையாளர்களும் ஆழ்ந்த சிந்தனைத் திறனுடையவர்களும் இந்தக் கலைஞனை அடையாளம் கண்டு கொள்கிறார்கள். அவனை அல்லாஹ் அல்லது இறைவன் என்று அழைக்கிறார்கள். அவன் மனிதனல்லன். ஏனெனில் எந்த மனிதனும் இன்னொரு மனிதனை உருவாக்கிடவோ படைத்திடவோ முடியாது. அவன்

விலங்குமல்லன்; தாவரமும் அல்லன். அவன் பக்தியுடன் வணங்கப்படும் சிலையுமல்லன்; ஒருவகைச் சிற்பமும் அல்லன். ஏனெனில் இவற்றுள் எதுவுமே தம்மைத்தாமே உருவாக்கிக் கொள்ளவோ பிறவற்றைப் படைத்திடவோ முடியாது. அவன் ஓர் எந்திரமும் அல்லன்; அவன் சூரியனும் அல்லன்; சந்திரனும் அல்லன்; நட்சத்திரமும் அல்லன். ஏனெனில் இவையனைத்துமே பெரியதொரு நிர்வாக அமைப்பினால் கட்டுப்படுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. அவையெல்லாமே ஒருவனால் படைக்கப்பட்டவையாய் இருக்கின்றன. அவன் இவையனைத்தையும் விட வேறுபட்டவன் ஆவான். ஏனெனில் அவன் தான் இவையனைத்தையும் படைத்தவனும் பாதுகாத்து வருபவனும் ஆவான். ஒரு பொருளைப் படைப்பவன் அந்தப் பொருளைவிட உயர்ந்தவனாகவும் அதனைவிட்டு வேறுபட்டவனாகவும் தான் இருக்க வேண்டும். எந்த ஒரு பொருளும் தானாகவே தோன்றிட முடியாது என்பதையும் இந்த அதிசயமான உலகம் தன்னைத்தானே படைத்துக் கொள்ளவுமில்லை; திடீரென்று சுயமாகத் தோன்றிடவுமில்லை என்பதையும் நாம் அறிவோம். இந்த உலகில் தொடர்ந்து நடைபெற்று வரும் மாற்றங்களே அது படைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் படைக்கப்படுகின்ற பொருள் ஒவ்வொன்றுக்கும் ஒருவகைப் படைப்பாளன் இருந்தேயாக வேண்டும் என்பதையும் நிரூபிக்கின்றன.

இந்த உலகைப் படைத்தவன், பாதுகாத்துக் கொண்டிருப்பவன் என்பனவும் ஒருவனையே குறிக்கின்றன. இப்பங்கிடும் ஆற்றல், இயற்கையில் மிளிரும் ஆக்ககரமான சக்தி ஆகிய அனைத்துமே அவன் ஒருவனைத்தான் குறிக்கின்றன அவன்தான் 'அல்லாஹ்' அல்லது 'இறைவன்' என்று அழைக்கப்படுகின்றான். அந்த சக்திதான் எல்லா இரகசியங்களுக்கும் தலையான இரகசியமாகும். அவன் தான் பிரபஞ்சத்தில் இருப்பவை அனைத்தையும் விட உயர்ந்தவன் ஆவான். இறைவனின் உண்மை வேதமான திருக்குர்ஆன் பின்வரும் கருத்துக்களை அறிவுறுத்துகின்றன;

இறைவன் மீதும் அவனது வல்லமையின் மீதும் நம்பிக்கை கொள்வதே மனித சமுதாயத்திற்கு வாழ்வின் பல புதிரான விஷயங்களுக்கு மிகச்சிறந்த சாத்தியமான விளக்கத்தை அளித்திடமுடியும். அது ஒன்றே உண்மை அறிவைப் பெற்றிடவும் ஆன்மீக ஞானத்தை அடைந்திடவும் பாதுகாப்பான வழியாகும். இதுவே நன்னடத்தைக்கும் ஆரோக்கியமான உறுதிவாய்ந்த ஒழுக்கத்திற்கும் இட்டுச் செல்லும் பாதையாகும். மகிழ்ச்சிக்கும் செல்வச் செழிப்புக்கும் நிச்சயமான முறையில் வழிகாட்டக் கூடியதாகும்.

இறைவன் இருப்பதாக மனிதன் ஏற்றுக் கொண்ட பின் அவன் இறைவனின் பண்புகளையும் பெயர்களையும் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாகக் கூறினால் ஒவ்வொரு முழுமையான குணமும், ஒவ்வொரு நிறையும், முழுக்க முழுக்க நன்மையாக விளங்கிடும் ஒவ்வொரு விஷயமும் அவனுக்கே உரியதாகும். அவன்

எந்தக் குறைப்பாடும் களங்கமும் மாசும் இல்லாதவன் ஆவான். குறிப்பாக ஒரு மனிதன் பின்வரும் விஷயங்களை அறிந்து அதனை நம்பிட வேண்டும்.

1. இறைவன் ஒருவனே! அவனுக்கு இணை, துணை யாருமில்லை. அவனுக்குக் குழந்தைகளுமில்லை; அவன் எவரையும் பெற்றெடுப்பதுமில்லை; அவன் எவருக்கும் பிறக்கவுமில்லை; அனைவரும் தமது தேவைகளுக்காக அவனை எப்போதும் அணுகிய வண்ணமிருப்பார்கள். அவனுக்கு ஆதியோ அந்தமோ இல்லை. அவனுக்கு நிகரானவர் எவருமில்லை.

(112;1-5)

2. அவன் கருணையாளன்; பரிவிரக்கமுடையவன்; பாதுகாவலன்; பொறுப்பாளன்; உண்மையான வழிகாட்டி; நீதவான்; மிக உயர்ந்த அதிபதி; படைப்பாளன்; கண்காணிப்பவன்; முதலும் முடிவுமானவன்; அனைத்தும் அறிந்தவன்; நுண்ணறிவாளன்; அனைத்தையும் செவிமடுப்பவன்; அனைத்தையும் அறிபவன்; அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பவன்; புகழ்உடையவன்; சர்வ வல்லமை படைத்தவன்; ஆற்றலாளன்; வலிமையுடையவன்.

(திருக்குர்ஆன் 57:1-6, 59:22-24)

3. அவனே நேசிப்பவன்; உணவளிப்பவன்; தயாள குணமுடையவன்; பரந்த உள்ளமுடையவன்; வற்றாத செல்வமுடையவன்; தன்னிறைவுடையவன்; எவரையும் சார்ந்திராதவன்; சுதந்திரமானவன்; மன்னிப்பவன்; சாந்தமும் இரக்கமும் உடையவன்; பொறுமையானவன்; மதிப்புணர்ந்தவன்; தன்னைப்போன்று எவருமில்லாதவன்; தனித்தன்மையுடையவன்; பாதுகாப்பளிப்பவன்; காப்பாற்றுபவன்; நீதிபதி; அமைதியேவடிவானவன்.

(திருக்குர்ஆன்: 3:31, 11:6, 35:15, 65:2-3)

இறைவனின் இந்தப் பெயர்கள பண்புகள் ஒவ்வொன்றும் திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இறைவனின் கண்காணிப்பையும் பாதுகாவலையும் அவனது கருணையையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறோம் . அவன் தன் படைப்புகள் மீது மிகவும் அன்பும் நேசமும் உடையவன் ஆவான். அவன் நம் மீது பொழிந்துள்ள உபகாரங்களை நாம் எண்ணிட முயன்றால் நம்மால் அவற்றை எண்ணிமுடிக்க முடியாது; ஏனெனில் அவை ஏராளமானவை; எண்ணிறந்தவை.

(திருக்குர்ஆன் 14:32-34, 16:10-18).

இறைவன் மிக உயர்ந்தவன்; மேம்பாடுடையவன்; மேலதிகாரம் கொண்டவன்; ஆனால் அவன் இறையச்சமுள்ள சிந்திக்கும் மக்களுக்கு மிக நெருக்கமானவன்

ஆவான். அவன் அவர்களுடைய பிரார்த்தனைக்கு பதிலளிக்கின்றான். அவர்களுக்கு உதவுகிறான். தன்னை நேசிக்கும் மக்களை அவனும் நேசிக்கின்றான். அவர்களுடைய பாவங்களை மன்னிக்கின்றான்; அவன் அவர்களுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றான்; அறிவையும் வெற்றியையும் வழங்குகின்றான்; வாழ்வையும் பாதுகாப்பையும் அளிக்கின்றான்; தன்னுடன் அமைதியாகவும் சமாதானமாகவும் இருக்க விரும்பும் அனைவரையும் அவன் வரவேற்கின்றான்; அவர்களில் எவரையும் அவன் நிராகரிப்பதில்லை. அவன் மனிதன் நல்லவனாயிருக்க வேண்டுமென்றும் நற்செயல் புரிந்து தீயசெயலை விட்டு விலகி நிற்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றான். அவன் மிக நல்லவனாகவும் அன்புடையவனாகவும் இருக்கின்ற காரணத்தால் அவன் நல்ல சரியான விஷயங்களையே பரிந்துரைக்கின்றான்; அவற்றையே ஏற்கின்றான். வாய்மையுடன் அவனது ஆதரவையும் பாதுகாப்பையும் தேடுகின்ற எவராயினும் அவருக்கு அவனது கருணைக்கதவு எப்போதும் திறந்தேயிருக்கின்றது.

(திருக்குர்ஆன் 2:186;50:16)

இறைவன் தன் படைப்புக்கள் மீது செலுத்தும் அன்பு அளவற்றது; மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்டது. அவன் நம் மீது பொழிந்திருக்கும் அருட்கொடைகளை நம்மால் எண்ணிடவோ அளவிடவோ முடியாது; அவன் நம்மைப் படைக்கின்றான். நம்மீது தனிக்கவனம் செலுத்தி நம்மைப் பாதுகாக்கின்றான். நாம் பிறக்கின்ற நேரத்திலும் அதற்குப் பின்னாலும் மட்டுமல்லாமல், நாம் பிறப்பதற்கு வெகுநாட்களுக்கு முன்பிருந்தே நம்மைப் பாதுகாக்கும் பணியை அவன் செய்து வருகின்றான்.

படைப்புக்களிலேயே மிகச்சிறந்த வடிவத்தில் அவன் நம்மை உருவாக்குகின்றான்; நமது வளர்ச்சிக்குத் தேவையான எல்லாப் புலன்களையும் உறுப்புகளையும் நமக்கு அளிக்கின்றான். நமக்கு நாமே உதவி செய்து கொள்ள நாம் இயலாதிருக்கும் நேரத்தில் அவன் நமக்கு உதவி செய்கின்றான். அவன் நமக்கும் நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கும் உணவு மற்றும் வாழ்வாதாரங்களை அளிக்கின்றான்; அவன் மனிதனுக்குள் புரிந்து கொள்ளும் உள்ளத்தையும், ஆன்மாவையும், இறையச்சமுடையவர்களாகவும் நல்லவனாகவும் இருப்பதற்கான தன்னுணர்வையும் தோற்றுவிக்கின்றான். அன்பும் மனிதாபிமானமும் உடையவர்களாயிருப்பதற்குத் தேவையான உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றான்.

அவனது கருணையினால்தான் நாம் உண்மையான அறிவைப் பெறுகின்றோம். உண்மையான வெளிச்சத்தைப் பார்க்கின்றோம். அவன் கருணையாளனாக இருக்கின்ற காரணத்தால் அவன் நம்மை அழகிய வடிவத்தில் படைக்கின்றான். மேலும் அவன் நமக்கு சூரியனையும் சந்திரனையும் தருகின்றான். இவை

யனைத்தையும் இன்னும் பலவற்றையும் நமது நன்மைக்காகவும் நமது உபயோகத்திற்காகவும் படைத்தவன் அவனேயாவான். இந்த உலகில் நமக்கு ஊழியம் புரிகின்ற பொருள்களை அவனே படைக்கின்றான். மனிதனுக்கு கண்ணியத்தையும் மதிப்பையும் மரியாதையும் அறிவாற்றலையும் அளிக்கின்றான். ஏனெனில் மனிதன் படைப்பினங்களிலேயே மிகச் சிறந்தவனும் பூமியில் இறைவனின் பிரதிநிதியும் ஆவான்.

இறைவனின் கருணை நமக்கு நம்பிக்கையையும் அமைதியையும் அளிக்கின்றது. தைரியத்தையும் தெம்பையும் அளிக்கின்றது. நமது கவலைகளுக்கும் துக்கங்களுக்கும் பரிகாரம் தேடிக்கொள்ளும் வாய்ப்பும் வழிவகையும் உடையவர்களாய் நம்மை ஆக்குகின்றது. நமக்கு நேரிடும் தொல்லைகளையும் இடையூறுகளையும் வெற்றி கொண்டிடவும் வெற்றியையும் மகிழ்வையும் பெற்றிடவும் சக்தியளிக்கின்றது. உண்மையில் இறைவனின் கருணை துயருற்றவர்களுக்கு நிவாரணமளிக்கின்றது. இன்னலுற்றவர்களுக்கு அவர்களின் துன்பம் நீக்கி உற்சாகமளிக்கின்றது. நோயுற்ற மக்களுக்கு ஆறுதலளிக்கின்றது. தேவையுடையோருக்கு வாழ்க்கை வசதிகளை அளிக்கின்றது. சுருங்கக் கூறின் நமது வாழ்வின் ஒவ்வொர் அம்சத்திலும் எல்லா நேரங்களிலும் எங்கும் இறை கருணை துணைபோய்க் கொண்டிருக்கின்றது. சிலர் இதனை ஏற்க மறுத்து விடுகின்றார்கள்; ஏனெனில் அவர்கள் இதனை அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை. ஆனால் அது ஓர் எதார்த்த உண்மையாகும். அதனை நமது உள்ளத்தால் நாம் உணர்ந்து கொள்ள முடியும்; நமது மூளையால் அதனை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அன்பாளனும் கருணையாளனுமான இறைவன் நம்மை எப்போதும் மறப்பதில்லை. அல்லது நம்மை வீழ்ச்சியடைய விடுவதுமில்லை. அவனை நாம் அழைக்கும்போது அந்த அழைப்புகளை, வேண்டுதல்களை, பிரார்த்தனைகளை அலட்சியப்படுத்துவதில்லை. தனது கருணையினாலும் அன்பினாலும்தான் அவன் நமக்கு நேர்வழியைக் காட்டியிருக்கின்றான். திருத்தூதர்களையும் போதகர்களையும் நூல்களையும் வேத வெளிப்பாடுகளையும் நமக்கு அனுப்பியிருகின்றான். நமக்கு உதவி புரிந்துவிடவும் நேர்வழி காட்டிடவும்தான் இவையனைத்தையும் செய்திருக்கின்றான்.

இறைவனிடமிருந்து வந்த இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இறைமறைகளில் தற்போதுள்ளவற்றில் மிக நம்பகமான வேதம் திருக் குர்ஆனேயாகும்.

நபிமொழிகள் வாயிலாகவும் குர்ஆனின் அறிவுரைகள் வாயிலாகவும் நாம் மன்னிக்கும் பண்புடைய இறைவனைப் பற்றி தெரிந்து கொண்டிருக்கிறோம். ஒரு மனிதன் பாவம் ஒன்றைச் செய்துவிட்டால் அல்லது குற்றம் எதனையாவது புரிந்துவிட்டால் அவன் இறைவனின் கட்டளையை மீறியவனாவான்;

இறைவனுக்கெதிராக கொடுங் குற்றத்தைப் புரிந்தவனாவான். தன் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தியவன் ஆவான். ஆனால் அவன் உண்மையிலேயே மன்னிப்புக் கோரவிரும்பி தன் தவறான செயல்களுக்காக வருந்தி இறைவனின் பக்கம் திரும்பிவர விரும்பினால், இறைவனின் மன்னிப்பை வாய்மையுடன் கோரி நேர்மையான முறையில் அவனை அணுகிட விரும்பினால், இறைவன் நிச்சயம் அவனை ஏற்றுக் கொண்டு மன்னிக்கின்றான். இறைவனையும் அவனது ஏகத்துவத்தையும் நிராகரிப்பவர்கள் தமது தவறான கருத்தையுணர்ந்து மனம் திருந்தி இறைவனின் பக்கம் திரும்பி வரத் தீர்மானித்தால் அவர்களுக்குக் கூட மன்னிப்புண்டு என்று உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக திருக்குர்ஆன் கூறுகின்றது:

''திண்ணமாக, இறைவன் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிப்பதில்லை; ஆனால் அவன் நாடுவோருக்கு அது தவிர உள்ள பிறவற்றை (பிற தீய செயல்களை) மன்னித்து விடுகின்றான். இறைவனுடன் பிறரை இணை சேர்ப்பவன் பெரும் பொய்யை இட்டுக் கட்டிவிட்டான். பெரும் பாவம் புரிந்துவிட்டான்.

(திருக்குர்ஆன் 4:48, 116).

''(நபியே!) நீர் கூறுவீராக; வரம்பு மீறி தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட என் அடியார்களே! அல்லாஹ்வின் கருணையை விட்டு நிராசையாகி விடாதீர்கள். இறைவனின் கருணையைவிட்டு நம்பிக்கையிழந்து விடாதீர்கள்; பாவங்கள் அனைத்தையும் இறைவன் மன்னித்துவிடுகின்றான்; ஏனெனில், அவன் மிக மன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கின்றான். உங்கள் இறைனின் பக்கமே (பாவ மன்னிப்புக் கோரி) திரும்புங்கள். வேதனை உங்களுக்கு வந்துவிடும் முன்பாகவே அவனுக்குக் கீழ்ப்படியுங்கள்; வேதனை வந்துவிட்ட பிறகு உங்களுக்கு எவரும் உதவி புரியமாட்டார்கள். உங்கள் இறைவனிடமிருந்து உங்கள் மீது இறக்கியருளப்பட்ட திருமறையின் மிகச் சிறந்த அம்சத்தைப் பின்பற்றுங்கள்; நீங்கள் சற்றும் உணராதிருக்கும் நிலையில் உங்கள் மீது திடீரென்று வேதனை இறங்குவதற்கு முன்னால் அதனைப் பின்பற்றுங்கள்!

(திருக்குர்ஆன் 39:53-55).

தனது இந்த பேருபகாரங்களுக்கும் அன்புக்கும் பகரமாக இறைவன் நம்மிடமிருந்து எதனையும் வேண்டுவதில்லை; ஏனெனில், அவன் தேவைகள் அற்றவன். எதனையும் சார்ந்திராதவன். தனது அருட்கொடைகளுக்காக நாம் அவனுக்கு விலை ஏதும் தரவேண்டும் என்று அவன் கேட்பதில்லை. ஏனெனில் நாம் அவனுக்கு சன்மானம் அளித்திடவோ அவனது அளவிட இயலாத உதவிகளையும் கருணையையும் மதிப்பிட்டு முடித்துவிடவோ நம்மால் இயலாத ஒன்று. அவன் நமக்குக் கட்டளையிடுவதெல்லாம் இவைதாம்:

நீங்கள் நல்லவர்களாக வாழ்ந்திட வேண்டும். நன்றியுணர்வுள்ளவர்களாகவும் மதிப்புணரக் கூடியவர்களாகவும் திகழ்ந்திட வேண்டும். அவனது பரிந்துரைகளைப் பின்பற்றி அவனது சட்டங்களைச் செயல் படுத்திட வேண்டும். நன்மைக்கும் மேலான நற்பண்புகளுக்கும் சரியான முன்மாதிரியாக விளங்கிட வேண்டும். பூமியில் அவனது நேர்மையான பிரதிநிதிகளாகவும் உண்மையான பொறுப்பாளர்களாகவும் திகழ்ந்திட வேண்டும் என்பதுதான். அவன் நம்மை அடிமைப்படுத்திட விரும்பவில்லை. ஏனெனில் நம்மைப் படைத்து மற்றப் படைப்புகள் அனைத்தையும் விட நமது அந்தஸ்தை உயர்த்துபவன் அவனே. ஆகவே, அவன் நமக்கு அளிக்கின்ற சட்டங்களும் அறிவுரைகளும் நமது நன்மைக்காகவும் நலனுக்காகவும்தான் அளிக்கப்படுகின்றன. நமது உலக வாழ்க்கையை ஒருவரோடொருவர் அமைதியான முறையில் அன்பு வழியில் சகோதரத்துவப் பாதையில் பரஸ்பர ஒத்துழைப்புடன் நாம் அனுபவித்திட நமக்கு உதவிடுவதற்காகவே அளிக்கப்பட்டிருக்கின்றன. அவை நாம் இறைவனின் மகிழ்ச்சிகரமான நட்பைப் பெற்றுக் கொள்ளச் செய்திட வேண்டும்; மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்வில் நிரந்தர மகிழ்வை அடைந்திட தேவையான மிக நிச்சயமாக ஓர் அணுகுமுறையை நாம் மேற்கொள்ளச் செய்திட வேண்டும் என்னும் குறிக்கோளுடன் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இதனையறிந்து கொள்ள பல்வேறுபட்ட வழிகள் உள்ளன. அவனைப்பற்றிக் கூறுவதற்கும் பல விஷயங்கள் உள்ளன. இந்த உலகில் காணப்படும் மனங்கவரும் அற்புதப் படைப்புகளும் பேரதிசயமான பொருள்களும் அல்லாஹ்வைப் பற்றி எடுத்துரைக்கும் சிறந்த புத்தகங்களைப் போல் விளங்குகின்றன. அவற்றில் இறைவனைப் பற்றி நம்மால் பல விஷயங்களைப் படித்து அறிந்திட முடியும்; ஆகவே இயற்கையைக் குறித்து சிந்திப்பதன் வாயிலாகவும் இறைத்தூதர்களின் சொற்களைக் கேட்பதாலும் வேத வெளிப்பாடுகளைப் படிப்பதாலும் இறைவனைக் குறித்து நம்மை முழுமையாகத் திருப்திபடுத்தும் அறிவை நாம் பெற்றிடமுடியும்; அவனை அடைவதற்கான நேரான பாதையைக்காண முடியும்.

மேற்சொன்ன விவாதங்கள் பின்வரும் உண்மைகளை நம்முன் சமர்ப்பிக்கின்றன.

இறைவன் இருக்கின்றான் அவன் ஒருவனே!

இந்தப் பேரண்டத்தை படைத்தவன்; அதற்கு வாழ்வாதாரத்தை அளித்து அதனைப் பாதுகாப்பவன்; அதிலுள்ள உயிரினங்களுக்குத் தேவையானவற்றை அளித்து அதனைப் பாதுகாப்பவன்;. வாரி வழங்குபவன் அவனே! அவனது இறைமையில் பங்குதாரர்களோ, அவனுக்கு இணையானவர்களோ எவருமில்லை.

அவன் ஒருவனே நமது வாழ்வின் எல்லாத்துறைகளிலும் நமக்கு வழிகாட்ட முடியும். அவனுடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுவதில் தான், இம்மையிலும் மறுமையிலும் மனிதனுக்கு அவனது பிரச்னைகளுக்குரிய தீர்வும் வெற்றியும் அடங்கியுள்ளது.

**திருகுர்ஆன் கூறுகிறது:**

"தன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறொருவருமில்லை என்று அல்லாஹ்வே சாட்சியமளிக்கின்றான். வானவர்களும் அறிவுடையோர் அனைவரும் அந்த வல்லமை மிக்கவனை - மிகைத்தவனை - நுண்ணறிவாளனைத் தவிர உண்மையில் இறைவன் எவனுமில்லை என்று சாட்சியமளிக்கின்றார்கள்."

(திருக்குர்ஆன் 3:18)

"(நபியே நீர்) கூறுவீராக! உண்மையில் அல்லாஹ்வின் வழிகாட்டுதலே சரியான வழிகாட்டுதல் ஆகும். (அவன் தரப்பிலிருந்து) அகிலங்களின் அதிபதிக்கே கீழ்ப்படியும்படி நாங்கள் கட்டளையிடப்பட்டுள்ளோம்."

(திருக் குர்ஆன் 6:71)

இனி இறைவனை ஏற்றுக்கொள்வதும் அவனது வழிகாட்டுதலைப்பற்றிய அறிவைத் தேடிப் பெறுவதும் அவனது வழிகாட்டுதலுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து வாழ்வதும் நம் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

# 10

# இஸ்லாத்தில் இறைத்தூதுத்துவம்

பெருங்கருணையாளனான அல்லாஹ், இந்த உலகில், மனிதனுக்கு என்னவெல்லாம் தேவைப்படுகின்றதோ அவையனைத்தையும் அவனுக்கு வழங்கியிருக்கின்றான். புதிதாகப் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் பார்ப்பதற்குக் கண்களுடனும், கேட்பதற்குக் காதுகளுடனும் முகர்வதற்கும் மூச்சு விடுவதற்கும் மூக்குடனும், தொடுவதற்குக் கரங்களுடனும், நடப்பதற்குக் கால்களுடனும், சிந்திப்பதற்கு மூளையுடனும் தான் இந்த உலகிற்கு வருகின்றது. சுருங்கச் சொன்னால், ஒரு குழந்தைக்கு தற்போது தேவைப்படுகின்ற அல்லது இனி அதனுடைய வளர்ச்சியின் பல்வேறு காலகட்டங்களில அதற்குத் தேவைப்படக் கூடிய திறமைகள், ஆற்றல்கள், வலிமைகள் அனைத்துமே நுணுக்கமாக, கவனத்துடன் முன்கூட்டியே அக்குழந்தையின் சின்னஞ்சிறு உடலில் வைக்கப்பட்டுள்ளன.

மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த உலகமும் இப்படிப்பட்டதுதான். மனிதன் இந்த பூமியில் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவையாக விளங்கும் ஒவ்வொரு பொருளும் மிகுந்த கவனத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, காற்று, நீர், ஒளி, வெப்பம் ஆகிய இன்றியமையாப் பொருள்கள் ஏராளமாக வழங்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதன் தான் படைக்கப்பட்டிருப்பதற்கான குறிக்கோள், இந்த உலகின் உண்மைநிலை, அதில் அவன் இயங்க வேண்டிய முறை ஆகியன பற்றி அறிந்து கொள்ள வேண்டிய தேவையுடையவனாயிருக்கின்றான். பண்டைக் காலந்தொட்டே மனிதன் இந்த அறிவைத் தேடிப்பெற்றிட பெருமுயற்சி செய்து வந்திருக்கின்றான். ஆனால் எந்தத் துணையும் உதவியும் இன்றி அந்த அறிவைப் பெறுவது சாத்தியமற்றதாயிருப்பதைக் கண்டான்.

இந்தப் பிரபஞ்சம் என்பது என்ன, நமது வாழ்க்கை எப்படித் தொடங்கியது, நமது முடிவு என்னவாயிருக்கும் என்பதையெல்லாம் அறிந்து கொள்ளமனிதன் விரும்புகின்றான். எது நன்மை, எது தீமை, அவற்றின் உண்மை இயல்புகள் என்ன, மனித இனம் எவ்வாறு கட்டுக்கோப்பாக இயங்கமுடியும் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முயல்கின்றான். இந்தப் பல்லாண்டு கால வினாக்களுக்கு

விடைகாண்பதற்காக மனிதன் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் அப்பட்டமான தோல்வியையே தழுவின. சற்றே ஒப்பு நோக்கும்போது, இந்தப் பருப்பொருள் உலகைக் குறித்து பரந்த ஒரு அறிவைப் பெற்றிட நமக்குக் குறுகிய காலமே பிடித்திருக்கின்றது. ஆனால் மனித வாழ்வியல் துறையில் மட்டும் மிகச் சிறந்த மூளையுடைய மனிதர்களின் மிக நீண்டகால முயற்சிகள் கூட அதன் அடிப்படைக் காரணிகளைக் கூட நிச்சயிக்க முடியவில்லை. இந்தக் துறையில் நாம் இறைவனின் வழிகாட்டுதலும் உதவியும் தேவையுடையவர்களாயிருக்கின்றோம் என்பதற்கு இதைவிடப் பெரிய சான்று வேறென்ன இருக்க முடியும்?

இறைவழி காட்டுதலும் இறையுதவியுமின்றி நாம் எந்த அடிப்படைக் கோட்பாடுகளின்படி இவ்வுலகில் வாழ்க்கை நடத்திடக் கடமைப்பட்டிருக் கின்றோமோ அவற்றை அடைந்திட நம்மால் முடியாது; மார்க்கம், வாழ்க்கை நெறிஎன்றால் என்ன என்று நம்மால் அறிந்து கொள்ள முடியாது; சத்தியம் என்றால் என்னவென்று நிச்சயமாக நம்மால் புரிந்துகொள்ள முடியாது.

வாழ்க்கை என்பது இன்னும் கூட விடுவிக்க முடியாத ஒரு புதிராக இருந்து வருகிறது என்பதனை நவீன மனிதன் ஒப்புக்கொள்கின்றான். இருந்தும் நிச்சயம் ஒருநாள் இந்தப் புதிருக்கான விடையை நாம் கண்டுபிடித்தே தீருவோம் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றான். மனித வாழ்வியல் துறைகளில் மூழ்கி, ஆய்வு செய்த பலரும் இன்னும் உண்மையைக் கண்டுபிடிக்கமுடியாமல் தமது சொந்தக் கற்பனைகளின் உலகில் திசைதெரியாமல் தடுமாறி அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏனெனில் நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தால் உருவாகியிருக்கிற தற்காலச் சூழ்நிலை, மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு படைப்பு என்கிற ரீதியில் அவனுடன் ஒத்துப்போவதாய் இல்லை.

ஆகவே, இறை உவப்பைப் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலை அவனுக்கு வாய்ப்பதில்லை. இயற்பியல் மற்றும் பருப்பொருள் தொடர்பான அறிவியல் துறைகள் அளப்பரிய வளர்ச்சியை அடைந்துவிட்டிருக்கின்றன. ஆனால். பூமியில் உயிர்வாழும் மாந்தர்கள் பற்றிய இயல்கள் மட்டும் இன்னும் ஆரம்பநிலையிலேயே உள்ளன. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவரும் நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர். அலெக்ஸிஸ் கேரல் (Dr. Alexis Carrel) என்னும் அறிஞர் கூறுகிறார்:

''பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிப்படையாய் அமைந்த கொள்கைகளும் மார்க்ஸ், லெனின் ஆகியோரின் கருத்துக்களும் வெற்றுருத் தத்துவமாயுள்ள (வெறும் கருத்தாயுள்ள- உண்மையில் நடைமுறையில் இல்லாத) கற்பனை மனிதர்களுக்கு மட்டுமே பொருந்துவனவாகும். மனித உறவுகளுக்கான சட்டங்கள் இன்னும் அறியப்படாமலே இருக்கின்றன என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய

சமூகவியலும் பொருளியலும் வெறும் அனுமானத்தின் - ஊகத்தின் அடிப்படையிலான இயல்களேயாகும். அதாவது போலி அறிவியல்களாகும்.'' (நூல்:**MAN THE UNKNOWN)**

தற்காலத்தில் அறிவியல் பெருமளவிற்கு வளர்ச்சியடைந்து வருவது உண்மையே! ஆனால் மனித வாழ்வியல் பற்றிய குழப்பங்களைத் தீர்த்திட அது நமக்கு உதவிடவில்லை. அறிவியலின் எல்லைகள் குறித்துக் கூறும்போது அறிஞர் **J.W.N. Sullivan** என்பார் கூறுகின்றார்: ''இப்பேரண்டத்தைப் பற்றிய உண்மைகள் பலவற்றைக் கண்டறிய தற்காலத்தில் அறிவியல் ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும் அறிவியல் சிந்தனையின் வரலாற்றிலேயே மிகவும் மர்மமான ஒன்றாக, பெரும் புதிராக இன்று வரையிலும் விளங்கிக் கொண்டிருப்பது இப்பேரண்டமேயாகும். இயற்கையைப் பற்றி தற்காலத்தில் நாம் பெற்றிருக்கின்ற அறிவு முந்தைய யுகம் எதனையும் விட அதிகமானதே என்றாலும் இதுவும்கூடப் போதுமானதன்று; ஏனெனில் நாம் இப்பேரண்டத்தில் எங்கு திரும்பினாலும் புதிர்களும் முரண்பாடுகளுமாகவே காட்சியளிக்கின்றன,''

வாழ்வின் இரகசியத்தை அறிந்திட உலகியல் அறிவுத்துறைகள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பரிதாபகரமான தோல்வியையே தழுவின. இந்தத் தோல்வி, வாழ்வின் இரகசியம் மனிதனால் அறிந்து கொள்ளவே முடியாத ஒன்று எனும் அதிருப்தியான எண்ணத்தை நமக்கு ஏற்படுத்திவிட்டது. வாழ்க்கையின் உண்மை அறியப்படாமலே தான் இருக்கும் என்றால் தனி மனிதர்களாகவும் சமுதாயங்களாகவும் நாம் தொடர்ந்தும் எப்படிச் செயல்பட முடியும்? நமது நுண்மையான உணர்வுகள் வாழ்வின் உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமென்றே விழைகின்றன. நமது மிக உயர்ந்த ஆற்றலாகத் திகழும் பகுத்தறிவு, தணியாத அறிவுத்தாகம் உடையதாயிருக்கின்றது.

வாழ்க்கையின் அமைப்பு முழுவதுமே மிக வேகமாக சீர்கெட்டு விடுகின்றது. ஓர் ஒழுங்கமைந்த வாழ்க்கை நெறி இல்லாமல் மனித சமூதாயம் வளர்ச்சியடைவதென்பது முடியாத ஒரு காரியமாகும். ஆயினும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

அந்தத் தீர்வை கண்டறிவதுதான் இன்றைய அவசரத் தேவையாகும். ஆனால் அது நாம் சொந்தமாக சாதிக்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. நமது நிலையே மனிதனுக்கு இந்த உதவி அவசியம் தேவைப்படுகின்றது என்பதற்கான ஆதாரமில்லையா?

வாழ்க்கையின் உண்மையை அறிந்துகொள்வதின் இன்றியமையாமையும், இந்த அறிவு நாமாகக் கண்டறிய முடியாததாக இருப்பதுமே பேருண்மையொன்றை நமக்கு உணர்த்துகின்றது. அதாவது, இந்த உண்மையை அறிந்திட மனிதனுக்கு இறைவனின் உதவி மிகவும் தேவைப்படுகின்றது. வெப்பத்தையும் வெளிச்சத்தையும் சூரியக்கதிர்களின் வடிவில் இயற்கை நமக்கு அளித்திருப்பது போலவே இந்த அறிவும் நமக்கு புறத்திலிருந்தே கிடைக்க வேண்டியதாயுள்ளது.

மனித வாழ்வுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கும் பெருங்கருணையாளனான இறைவன், மேற்சொன்ன இன்றியமையாத வாழ்க்கைத் தேவையை உண்மையைப் பற்றிய அறிவை மனிதனுக்கு அளித்திடாமலே அவனை அறியாமை இருளில் தடுமாற விட்டிருப்பானா? நிச்சயம் அவ்வாறு விட்டிருக்கமாட்டான் என்று நம் அறிவே கூறுகின்றது.

எனவேதான், அவன் அந்த உண்மை அறிவை மனிதனுக்கு அளித்திடும் பொறுப்பை, தானே எடுத்துக் கொண்டிருக்கிறான். திருக்குர்ஆன் கூறுகின்றது. ''ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய படைப்பின் அமைப்பை வழங்கி, அதற்கு வழிகாட்டியவன் எவனோ அவனே எங்கள் இறைவன் ஆவான்.'' (20:50)

இந்தக் குறிகோளுக்காக, பெருங்கருணையாளனும் பேரருளாளனுமான இறைவன் தேர்ந்தெடுக்கப்பட்ட தன் அடியார்களான திருத்தூதர்கள் வாயிலாக அந்த மெய்யறிவை வழங்கியுள்ளான்.

இனி மனிதன் தனது வாழ்வின் உண்மை நிலைபற்றிய அறிவை அடைந்திடவும், தான் படைக்கப்பட்டிருப்பதற்கான குறிக்கோளை அறிந்து கொள்ளவும் இறைத்தூதர்களைத் தவிர வேறெந்த வழிவகையும் துணைச் சாதனமும் அவனுக்கு இல்லை. ஆகவே, இறைத்தூதுத்துவம் என்பது உணவையும் நீரையும் போல் அத்தியாவசியமான ஒன்றாகத் திகழ்கின்றது.

இறைத்தூதர்கள் மனிதனுக்கு அவன் படைக்கப்பட்டிருப்பதற்கான குறிக்கோளை அறிவுறுத்தி இறைவழிகாட்டுதலை அவனுக்கு எத்தி வைத்தது மட்டுமின்றி அவனுக்கு இன்னும் பல அறிவுகளை அளித்தார்கள்.

அவையாவன:

அ) இறைவனைக் குறித்தும் அவனது பல்வேறு பண்புகள் குறித்தும் தூய்மையான கருத்தோட்டம்.

ஆ) மறைவான உண்மைகள் பற்றிய அறிவு. எடுத்துக்காட்டாக மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை, வானவர்கள், ஜின்கள், சொர்க்கம், நரகம் போன்றவை பற்றிய அறிவு.

இ) மனிதனின் செயல்களுக்கான விளைவுகள் என்னவாயிருக்கும் என்பதைப் பற்றிய அறிவு.

ஈ) நன்மை எது, தீமை எது என்பதைப் பற்றிய அறிவு.

உ) மனிதனின் சமூக, பொருளாதார, ஒழுக்க, அரசியல் வாழ்வுக்கான சட்டதிட்டங்கள் ஆகியன.

இவையனைத்திற்கும் மேலாக, இறைத்தூதர்கள் நமக்கு முன்னே, உயர்ந்ததொரு வாழ்க்கை நெறிக்கான அழகிய, செயல்ரீதியான முன்மாதிரியையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

## இறைத்தூதரை அடையாளம் கண்டு கொள்வது எப்படி?

1. அவர் தமது சமுதாயத்தினரிடையே மிகச்சிறந்த மனிதராயிருப்பார்; ஒழுக்க வலிமையுடையவராகவும் அறிவுத் திறனில் மேம்பட்டவராகவும் விளங்குவார். அவரது மிக மோசமான எதிரிகள் கூட அவரது ஒழுக்கத்தையும் வாய்மையையும் சந்தேகிக்கத் துணியமாட்டார்கள். எடுத்துக்காட்டாக, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை பார்ப்போம். அவர்கள் தூதுச்செய்தியில் நம்பிக்கை கொள்ளாதிருந்த யூதர்கள் கூட அவர்களது பாராபட்சமற்ற நேர்மையின் காரணத்தால், தங்கள் சச்சரவுகளில், தகராறுகளில், அவர்களைத் தமது நடுவராக ஏற்றுக்கொண்டார்கள். இந்த நேர்மையும் வாய்மையும் இறைத்தூதுத்துவ அந்தஸ்திற்கு இன்றியமையாத நிபந்தனைகளாகும். ஏனெனில் இறைத்தூதர்களின் வாழ்க்கை அவர்களைப் பின்பற்றுவோர்க்கு ஒரு முன்மாதிரியாக விளங்கக்கூடியதாகும். இறைத்தூதரின் ஆளுமை, அவர் கூறுவது உண்மையே; அது இறைவனிடமிருந்து வந்ததே என்பதற்கான தெளிவான ஆதாரமாக இருக்க வேண்டும்.

2. அவர் ஒரு மோசடிக்காரரர் அல்லர் என்பதை நிரூபித்திட அற்புதங்கள் வாயிலாக அவருக்கு வலுவூட்டப்பட்டிருக்கும். இந்த அற்புதங்கள் இறைவனின் சக்தியாலும் அவனது அனுமதியுடனும் தான் நடைபெறும். இறைத்தூதர் கொண்டுவரும் செய்திகள் அனைத்தும் இறைவனின் தரப்பிலிருந்து வருபவையே; அவரது சொந்தக் கருத்துகளல்ல என்கிற உண்மைக்குச் சான்றாக இறைவனின் இசைவாணையால் நிகழ்கின்றன. அந்தந்தக் காலத்து மக்கள் சிறப்பு பெற்றிருந்த துறையிலேயே நபிமார்களுக்கு அற்புதங்களும் வழங்கப்பட்டன.

மூஸா(அலை) காலத்தில் ஏராளமான மந்திரவாதிகள் இருந்தனர். மிகப்பெரிய மந்திரவாதியின் சக்தியையும் வீழ்த்தக் கூடிய அளவுக்கு மூஸா(அலை) அவர்களின் அற்புதம் வெளியானது. இறைவனின் தூதர் என்று அனைவரும் நம்புவதற்காகவே இத்தகைய அற்புதங்கள் வெளியாக்கப்பட்டன. ஈஸா(அலை) காலத்து மக்கள்

மருத்துவத் துறையில் கை தேர்ந்தவர்களாயிருந்தனர். எனவே குருடர்களை குணமாக்கும் ஆற்றல், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் அற்புதம் ஈஸா(அலை) அவர்களுக்கு அருளப்பட்டது.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் சமகாலத்தவர்களான அரபிகள் தமது சொல்லாற்றல் மற்றும் கவிதைப் புலமையில் பிரபல மானவர்களாயிருந்தார்கள். ஆகவே, முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அற்புதம் திருக்குர்ஆனாகவே இருந்தது. திருக்குர்ஆன் திரும்பத் திரும்ப அறைகூவல் விடுத்தும்கூட அரபுக் கவிஞர்கள், பேச்சாளர்களின் பட்டாளம் முழுவதும் சேர்ந்தும், கருத்துச் செறிவிலும், சொல் வீச்சிலும் அதற்கிணையான ஓர் இலக்கியத்தைச் சமர்ப்பிக்க முடியவில்லை.

இது மட்டுமன்றி, இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அற்புதமான திருக்குர்ஆனுக்கு இன்னொரு சிறப்புக்கூறும் உண்டு.. முந்தைய இறைத்தூதர்களுக்கு அருளப்பட்ட அற்புதங்கள் அனைத்தும் காலம், இடம் ஆகிய வரம்புகளுக் குட்பட்டவையாகும். குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே அவை வழங்கப்பட்டன. ஆனால் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அற்புதமான திருக்குர்ஆனோ உலகளாவியதும் என்றும் நீடித்து நிற்பதுமாகும். முந்தைய தலைமுறைகள் இவ்வுண்மைக்கு சாட்சியாக விளங்கி வந்திருக்கின்றன. இன்றைய தலைமுறையும் அதற்கு சான்று வழங்குகிறது. வருங்காலத் தலைமுறைகளும் இவ்வுண்மைக்குச் சான்று வழங்கும்.

3. இறைத்தூதர்கள் ஒவ்வொருவரும் தாம் அறிவுறுத்தும் கொள்கைகளும் சட்டங்களும் தமது சொந்தக் கருத்தல்ல என்றும், பேரண்டத்தின் படைப்பாளனிடமிருந்து தமக்கு அறிவிக்கப்படுபவையே என்றும் தெளிவாகக் கூறுவர். மேலும் அவர் தமக்கு முன் அருளப்பட்டதையும், தமக்குப் பின்னர் நிகழப்போவதையும் உறுதியாகக் கூறுவர். தான் இறைவனின் செய்தியை அறிவிப்பவரே என்று உணர்த்துவதற்காகத்தான் ஓர் இறைத்தூதர் இவ்வாறு செய்கின்றார்.

இறைத்தூதர் அனைவரின் செய்தியும் ஒன்றுதான். வாழ்வின் உண்மை நிலையை மனிதன் புரிந்துகொண்டு தன்னைப் படைத்தவனின் விருப்பத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து வாழ்ந்திட வேண்டும். நாம் இறைவனின் முன்னால் நமது சொற்கள், செயல்கள் அனைத்திற்கும் பதில் தருவதற்காக அழைக்கப்படுவோம் என்னும் தன்னுணர்வு மனிதனுக்கு இருக்க வேண்டும்.

## *இறைத்தூதுத்துவத்தின் சுருக்கமான வரலாறு*

இந்தப் பூவுலகில் அடியெடுத்து வைத்த முதல் மனிரான ஆதம் (அலை) அவர்களே இறைவனின் முதல் தூதராக விளங்கினார்கள். இறைவன் தனது வழிகாட்டுதலை

ஆதத்துக்கு அருளி அவரது சந்ததிகளுக்கு அந்த வழிகாட்டுதலை எத்திவைக்கும்படி அவருக்குக் கட்டளையிட்டான். அன்னாரின் வழித்தோன்றல்களில் நல்லவர்களாயிருந்தவர்கள், தங்களுக்குக் காட்டப்பட்ட நேரிய வழியை சரியாகவும் கண்டிப்பாகவும் பின்பற்றினார்கள். ஆனால் அவர்களில் தீயவர்களாயிருந்தவர்கள் தமது தந்தையின் அறிவுரைகளை - முதல் இறைத்தூதரின் வாயிலாக எத்திவைக்கப்பட்ட வழிகாட்டுதலைக் கைவிட்டு விட்டார்கள்; ஆதத்தின் சந்ததிகள் பூவுலகம் முழுவதிலும் பரவிவிட்டபோது அவர்கள் பல்வேறு இனங்களாகவும் நாடுகளாகவும் பல்கிப் பெருகினர். ஒவ்வொரு நாடும் தனக்கென தனியொரு சமயத்தை, தனக்கேயுரித்தான சடங்குகள், சம்பிரதாயங்களைப் பெற்றிருந்தது. ஆதத்தின் வழித்தோன்றல்கள் இறைவன் தமக்காக அருளிய வாழ்க்கை நெறியை மறந்துபோனது மட்டுமல்ல; ஏக அதிபதியும் படைப்பாளனுமான இறைவனை சிறிது சிறிதாகப் புறக்கணிக்கலானார்கள். தமது சொந்த விருப்பு வெறுப்புகளையும் மன இச்சைகளையும் பின்பற்றத் தொடங்கினார்கள். அதனால் எல்லாவகையான தீய பழக்கவழக்கங்களும் தலைதூக்கின.

இந்தக் கட்டத்தில் தான் இறைவன் ஒவ்வொரு சமுதாய மக்களிடையும் தன் திருத்தூதர்களை அனுப்பத் தொடங்கினான். திருக்குர்ஆன் கூறுகின்றது. ''தமக்கிடையே எச்சரிப்பவர் ஒருவர் (இறைத்தூதர்) வந்து சொல்லாத சமுதாயத்தினர் எவருமில்லை''.

(35:24)

''திண்ணமாக ஒவ்வொரு சமுதாயத்தினரிடையும் நாம் ஓர் இறைத்தூதரை அனுப்பியிருந்தோம்''.

(16:36)

இறைத்தூதர்கள் அனைவருக்கும் ஒரேவிதமான பொறுப்பும் ஒரேவிதமான தூதுச் செய்தியும் தான் வழங்கப்பட்டிருந்தன. அதாவது, இறைவனுக்கு முற்றிலும் பணிந்து வாழ்ந்திட மக்களை அழைக்க வேண்டும். இறைநம்பிக்கையாளர்கள் இறைவனின் திருத்தூதர்கள் அனைவரையும் ஏற்று அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளும்படியும் அந்தத் திருத்தூதர்களிடையே வேற்றுமை பாராட்டிடக் கூடாது என்றும் திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது.

இறைவன் ஆணையிடுகின்றான்:

கூறுங்கள்: ''நாங்கள் அல்லாஹ்வின் மீதும் எங்கள் மீது இறக்கியருளப்பட்டிருக்கின்ற நேர்வழியின் மீதும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் மற்றும் யஃகூபின் வழித்தோன்றல்களுக்கு இறக்கியருளப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொள்கிறோம்.

நாங்கள் அவர்களிடையே வேற்றுமை ஏதும் பாராட்டிட மாட்டோம்; மேலும், நாங்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாவோம்''.

(2:136)

## *முஹம்மத் (ஸல்) அவர்களின் இறைத்தூது*

முஹம்மத் (ஸல்) அவர்கள் கி.பி. 570 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ந்தேதி மக்கா நகரத்தில் பிறந்தார்கள். ஆனால், அவர்களது நாற்பதாவது வயதில்தான் அவர்கள், இறைவன் தம்மைத் தனது இறுதித்தூதராக தேர்ந்தெடுத்திருப்பதாகவும், தனது செய்தியைத் தமக்கு அருளி, மனித சமுதாயம் முழுவதற்கும் அதனை எத்திவைக்கும் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைத்திருப்பதாகவும், தமக்குக் கீழ்ப்படிபவர்கள் எவராயினும் அவர் தாராளமாக வெகுமதியளிக்கப்படுவார்; தமக்கு மாறு செய்பவர்கள் அழிக்கப்படுவார்கள் என்பதாகவும் அறிவித்தார்கள். அவர்களது இந்த அறிவிப்புக்கு முந்திய வாழ்க்கைக் காலம் முழுவதிலும் அவர்கள் குறிப்பிட்டுக் கூறும் வகையில் உயர்ந்த ஒழுக்கப் பண்புடையவராய்த் திகழ்ந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் ''உண்மையாளர்'', ''நம்பிக்கைக்குரியவர்'' என்னும் சிறப்புப் பெயர்களை அக்கால கட்டத்தில் பெற்றிருந்தார்கள். அந்த அரபுப்பகுதி முழுவதிலும் அவர்கள் வசித்த இடங்களிலெல்லாம் அங்கிருந்த ஒவ்வொருவரும் அவர்களை மிக உயர்வாக மதித்தார்கள்; அவர்களெல்லாம் அன்னாரை ''மிகவும் நேர்மையாளர், சொல்வதைச் செய்து காட்டும் மனிதர், பொய்யே பேசியறியாதவர்'' என்றுதான் கருதினார்கள்.

இறை அழைப்புப் பணி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சமூகத்தினரை 'ஸபா' மலைக்குன்றின் அருகே முதல் முறையாக ஒன்று திரட்டினார்கள். தமது செய்தியை அங்கே கூடியிருந்த மக்களிடம் தெரிவிப்பதற்கு முன்னால் முதலில் அவர்களிடம் ''என்னைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?'' என்று வினவினார்கள். அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் ''உண்மையைத் தவிர உங்களிடம் நாங்கள் வேறெதனையும் கண்டதில்லை'' என்று பதிலளித்தார்கள்.

நபிகள் நாயகத்தின் கடும் பகைவனாக இருந்த அபூஜஹில் கூட ''முஹம்மதே நீர் ஒரு பொய்யர் என்று நான் கூறவில்லை; நீர் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் இந்தச் செய்தி உண்மையானதல்ல என்று தான் நான் கருதுகிறேன்'' எனக் கூறினான்.

இவ்வாறே குறைஷித் தலைவர் அபூஸுஃப்யான் இஸ்லாத்தைத தழுவாதிருந்த காலகட்டத்தில் ஒருமுறை இஸ்லாத்தைப் பின்பற்றுவோருக்கு எதிராக ஒரு தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கி ரோமப் பேரரசன் ஹிராக்ளியஸின் **(HERACLIUS)** அவைக்கு சென்றபோது ''முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்போதும் பொய்

கூறியதுமில்லை. தாம் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவிட ஒருபோதும் தவறியதுமில்லை'' என்று சான்றுபகர்ந்தார். இதனைக் கேட்ட ஹிராக்ளியஸ் ''மனிதர்களுக்கிடையிலான விவகாரங்களிலேயே அவர் பொய் பேசியதில்லை என்பது அனுபவப்பூர்வமாகத் தெரிந்துவிட்ட பிறகு இறைவனின் விவகாரத்தில் இவ்வளவு பொய்யை அவர் புனைந்திருப்பார் என்று எப்படிச் சொல்லமுடியும்?'' என்று கேட்டார்.

நபிகள் நாயகத்தின் கடும் எதிரிகள் கூட அவர்களின் உயர்பண்புகளை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்கிற உண்மையே அவர்கள் இறைவனின் திருத்தூதராகத் திகழ்ந்து கொண்டிருப்பதற்குப் போதுமான சான்றாகும். அறிஞர் **போஸ்வொர்த் ஸ்மித் (BOSWORTH SMITH)** கூறுகின்றார்:

''முஹம்மத் (ஸல்) அவர்கள் எந்த நபித்துவ அந்தஸ்து தமக்குரியது என்று முதன்முதலாக வாதிடத் தொடங்கினார்களோ அதே அந்தஸ்தைத்தான் தமது ஆயுட்காலத்தின் இறுதிவரையிலும் தமக்கென அவர் உரிமை கொண்டாடினார். முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் உண்மையான இறைத்தூதரே என்கிற அவரது வாதத்தை ஏற்றிட ஒவ்வொருவரும் சம்மதிப்பார்கள் என்று நான் தைரியமாக நம்புகின்றேன்''.

## தூதுத்துவம் முடிவு பெறல்

நபிகள் நாயகத்திற்கு அருளப் பட்ட வேதவெளிப்பாடு எல்லா வகையிலும் முழுமையானதும் அனைத்து அம்சங்களையும் தழுவிய முழு வாழ்க்கைத் திட்டமும் ஆகும். திருக்குர்ஆன் இந்த உண்மையைப் பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றது.

''இன்று நான் உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நிறைவுபடுத்திவிட்டேன்; உங்கள் மீது எனது அருளை முழுமையாகப் பொழிந்து விட்டேன்; எனக்குக் கீழ்ப்படிவதையே (இஸ்லாத்தையே) உங்களுக்குரிய மார்க்கமாக ஏற்றுக்கொண்டேன்''.

(5:3)

ஆகவே, இப்பொழுது இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாயிலாகவே மனிதன் உண்மையான நேர்வழியைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டியவனாயிருக்கின்றான். பின்வரும் தெளிவான காரணங்களை முன்னிட்டு முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த இறைத்தூதரும் வரமாட்டார். திருக்குர்ஆனுக்குப் பிறகு எந்த வேதவெளிப்பாடும் அருளப்படாது. ஏனெனில்,

1. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாயிலாக அருளப்பட்டிருக்கும் வழிகாட்டுதல் எல்லாவித திருத்தங்கள், மாற்றங்கள், இடைச்செருகல்களை விட்டும் தூய்மையானதாய் திகழ்கின்றது.

திருக்குர்ஆன் கூறுகின்றது:

''திண்ணமாக இதனை நாம்தாம் இறக்கியருளினோம்; மேலும் நாமே இதனைப் பாதுகாப்போராகவும் இருக்கின்றோம்.''

(15:9)

2. இந்த வழிகாட்டுதல் எல்லா வகையிலும் முழுமையானதாகும்; மறுமை நாள்வரை போதுமானதாகும்.

3. முந்திய இறைத்தூதர்களைப் போலன்றி இறுதித்தூதர் அவர்கள் மனித இனம் முழுமைக்கும் வழிகாட்டிடவே அனுப்பப்பட்டார்கள். எந்தக் குறிப்பிட்ட நாட்டுக்கும் குறிப்பிட்ட சமுதாயத்திற்கும் அனுப்பப்படவில்லை. திருக்குர்ஆன் பறைசாற்றுகின்றது:

''(நபியே!) உம்மை (உலக) மக்கள் அனைவருக்கும் இறைத்தூதராகவே நாம் அனுப்பியுள்ளோம். அவர்களுக்கு நற்செய்தி கூறக்கூடியவராகவும் (பாவங்களைக் குறித்து) அச்சுறுத்தி எச்சரிப்பவராகவும் (அனுப்பியுள்ளோம்)''.

(34:28).

இனி இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வாயிலாக அருளப்பட்ட இறைவழி காட்டுதலைத் தேடிப்பெற்று செயல்படுத்தி பிறருக்கும் எடுத்துரைப்பது மாந்தர் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

இனி, இந்த உலகில் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்காகவும் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வில் ஈடேற்றமும் வெற்றியும் அடைவதற்காகவும் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பக்கமும், இறுதி வேதவெளிப்பாடான திருக்குர்ஆனின் பக்கமும் மனிதன் திரும்பிவரக் கடமைப்பட்டிருக்கின்றான்.

# 11

# இம் மாமனிதரைத் தெரிந்து கொள்ளுங்கள்

நீங்கள் ஒரு நாத்திகராக இருக்கலாம்; அல்லது கடவுள் நம்பிக்கையைப் பற்றிக் கவலைப்படாதவராக இருக்கலாம்; அல்லது இன்று இவ்வுலகில் நிலவும் பல மதக் கோட்பாடுகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றுபவராக இருக்கலாம். நீங்கள் ஒரு பொதுவுடைமை வாதியாகவோ, ஜனநாயகம் மற்றும் மனித சுதந்திரக் கொள்கையில் ஆர்வம் உள்ளவராகவோ விளங்கலாம். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்களது மதம் மற்றும் அரசியல் கொள்கை எதுவாக இருப்பினும் சரி, உங்களது தனிப்பட்ட மற்றும் சமூக பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தாலும் சரியே, நீங்கள் அவசியம் இம்மாமனிதரைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இம்மாமனிதரைப் பற்றித்தான் பிரிட்டானியக் கலைக்களஞ்சியம், ''மதத்தலைவர்கள் அனைவரிலும் தலைசிறந்த வெற்றியாளர்'' என்று புகழ்கிறது. உலகப் புகழ் வாய்ந்த அறிஞர் பெர்னாட்ஷா, ''முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இன்று நம்மிடையே இருப்பாரானால், இன்று மானிட நாகரிகத்தையே அழித்திட முனைந்திருக்கும் பிரச்னைகள் அனைத்திற்கும் தீர்வு காண்பதில் வெற்றி கண்டிருப்பார்'' என்று இம்மாமனிதரைப் போற்றுகிறார்.

உலகில் தோன்றிய மனிதர்கள் அனைவரையும் விட இவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவர் ஒரு அறநெறியைப் போதித்தார்; ஓர் அரசை நிறுவினார்; ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் ஒரு நாட்டை உருவாக்கினார்; எண்ணற்ற சமூக, அரசியல் மாற்றங்களுக்கு வித்தூன்றினார்; தாம் அறிவுறுத்திய கொள்கைகளை நடைமுறைப்படுத்த ஒரு வலுவான, நிலையான சமுதாயத்தை நிறுவினார்; மனித சிந்தனைகளையும், போக்கையும் புரட்சி மயமாக்கி புதிய சகாப்தத்தை உருவாக்கினார்.

***அம்மாமனிதர் தாம் முஹம்மத் (ஸல்) அவர்கள்.***

ஆம்; அவர்கள் தாம் மிகக் குறுகிய காலமாகிய இருபத்தி மூன்று ஆண்டுகளில் மாபெரும் சாதனைகளைப் புரிந்து பலரும் புகழும் பெருமை உடையவரானார்கள். அவர்கள் கி.பி. 571-ஆம் ஆண்டு அரேபியா நாட்டில் பிறந்தார்கள். தம்முடைய அறுபத்திமூன்று ஆண்டு வாழ்வுக் காலத்திற்குள் மக்கள் அனைவரையும் சிலைவணக்கத்தினின்றும் விடுவித்து, ஒரே இறைவனை வணங்கும் உன்னத நிலைக்கு உயர்த்தினார்கள். சூது,மது, மாது ஆகியவற்றில் மூழ்கிக் கிடந்த அம்மக்களை அவற்றினின்றும் நீக்கிப் பண்பும் பக்தியும் உடையோராய் மாற்றினார்கள்; சட்டத்தையும் அரசையும் விரும்பாத அவர்களின் வாழ்வை ஒழுங்கும் கட்டுப்பாடும் உடைய வாழ்வாக மாற்றினார்கள். இத்தகைய முழுமையான சமூக மாற்றத்தை உலக வரலாறு அதற்கு முன்பு கண்டதில்லை; பின்பும் கண்டதில்லை.

நமது காலத்தின் தலைசிறந்த சரித்திர ஆசிரியர் லாமர்டின் மனித மேன்மையின் சிறப்பைக் குறித்து கூறுகிறார்: ''உயர்ந்த இலட்சியம், குறைவான வசதிகள், வியப்பூட்டும் வெற்றி, ஆகிய இம் மூன்றும் தான் மனித நுண்ணறிவை, மனித ஆற்றலை அளந்திடும் அளவுகோல்கள் என்றால் இந்த நவீன வரலாற்றின் எந்த மாமனிதரையும் முஹம்மத் (ஸல்) அவர்களுடன் ஒப்பிட எவருக்குத்தான் துணிச்சல் வரும்? புகழ் மிக்க மனிதர்களெல்லாம் ஆயுதங்களை உருவாக்கினார்கள்; சட்டங்களை இயற்றினார்கள்; பேரரசுகளை நிறுவினார்கள். அவர்கள் செய்ததெல்லாம் இவைதாம்! பெரும்பாலும் தமது கண்களின் முன்பே சிதைந்து விழுந்துவிட்ட உலகாயதக் கோட்டைகளைத்தான் அவர்களால் நிறுவமுடிந்தது. ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களோ போர்ப்படைகள், சட்டமியற்றும் சபைகள், பேரரசுகள், மக்கள் சமுதாயங்கள், அரசவம்சங்கள் ஆகியவற்றை மட்டும் பாதித்து அவற்றை மட்டும் வெற்றி கொள்ளவில்லை; அவற்றுடன் அன்றைய உலகின் மூன்றிலொரு நிலப்பரப்பில் வசித்துவந்த கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களையும் ஈர்த்தார்கள். வழிபாட்டுத் தலங்களையும், சமய நெறிகளையும், பல்வேறு கருத்துக்களையும், கொள்கைகளையும், நம்பிக்கைகளையும், ஆன்மாக்களையும் ஈர்த்து அவற்றில் தமது தாக்கங்களைப் பதித்தார்கள். வெற்றியின் போது அவர்கள் காட்டிய பொறுமை, பணிவு, சகிப்புத் தன்மை, தாம் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாக தம்மையே முழுமையாக அர்பணித்துக் கொண்ட அவரது உயர் நோக்கம், ஆழ்ந்த விருப்பம், அரசாட்சியை அடைந்திட வேண்டும் என்ற குறுகிய எண்ணம் கொள்ளாமல் உலகப் பற்றற்று வாழ்ந்து வந்த நிலை, அவர்களின் முடிவில்லாத தொழுகைகள், பிரார்த்தனைகள், இறைவனுடன் அவர்கள் நடத்தி வந்த மெஞ்ஞான உரையாடல்கள், அவர்களின் மரணம், மரணத்திற்குப் பின்னரும் அவர்கள் அடைந்த வெற்றி இவையனைத்துமே அவர்கள் ஓர் ஏமாற்றுக்காரர் என்றோ, மோசடி குணம் உடையவர் என்றோ பறை சாற்றிடவில்லை. மாறாக, சமயக்கொள்கை ஒன்றை நிலைநாட்டிட அவர்களுக்கிருந்த மனோ உறுதியைத்தான் பறைசாற்றுகின்றன.

இந்த சமயக் கொள்கை இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, இறைவனின் ஒருமை; மற்றொன்று இறைவனின் ஸ்தூலப் பொருளற்ற தன்மை. முந்தியது இறைவன் என்றால் என்னவென்று எடுத்துரைக்கின்றது. பிந்தியது இறைவன் என்னவாக இல்லை என்பதைத் தெரிவிக்கின்றது. ஒன்று, தவறான கடவுள்களைத் தனது பலத்தால் தூக்கியெறிகின்றது; மற்றொன்று பிரச்சார துணையில் ஒரு புதிய கருத்தை உருவாக்க விழைகின்றது.

தத்துவபோதகர், சொற்பொழிவாளர், இறைத்தூதர், சட்டநிபுணர், மாபெரும் போர்வீரர், கருத்துக்களை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுப் பூர்வமான கொள்கைகள் நம்பிக்கைகளை நிலைநாட்டியவர், மாயைகள், கவர்ச்சிகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கைவழி நாகரித்தை உருவாக்கியளித்த மாமேதை, ஒரே ஆன்மீக தலைமையில் இருபது பூவுலகப் பேரரசுகளின் நிறுவனர் தாம் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

**(Lamartine, Historie de la Turquie, paris, 1854, Vol II, pp 276-277)**

உலக மேதாவிகள் ஏதாவது ஒன்றிரண்டு துறைகளிலேயே உயர்ந்து நிற்கக் காண்கின்றோம். ஆனால், வாழ்வின் அனைத்து துறைகளிலும் உன்னத நிலையில் வாழ்ந்து காட்டிய தனிப்பெரும் பெருமை அண்ணலாரையே சாரும். மேலும், அத்தலைவர்களின் வாழ்வும் அறிவுரைகளும் காலப்போக்கில் மங்கிவிட்டன. அவர்களுடைய பிறப்பும் வளர்ப்பும், வாழ்வும் வாக்கும், சொல்லும் செயலும் பற்றிய பல்வேறு கருத்துக்களும், கற்பனைகளும், புரட்டல்களும் நிலவுகின்றன. ஆகவே அவர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு இன்றைய மனிதன் தன் தனிப்பட்ட வாழ்வையும் கூட்டு வாழ்வையும் அமைத்திட இயலாதவனாய் திக்கற்று இருக்கின்றான்.

இம் மாமனிதருடைய தனிப்பட்ட வாழ்வு, சமூக வாழ்வு, பொது வாழ்வு, அவர்களுடைய சொல், செயல் அனைத்தும் மிகவும் நுணுக்கமாக அவர்களுடைய தோழர்களால் குறிக்கப்பெற்றுள்ளன. அவை அணுவளவும் மாற்றமின்றி இன்றும் நமக்குக் கிடைக்கின்றன. இம் மாமனிதர் குறித்துப் பாதுகாக்கப்பட்ட இவ்விபரங்கள் (வரலாற்றுக் குறிப்புகள்) உண்மையானவை; சரியானவை என்று அவர்களைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்ல; விருப்பு, வெறுப்பற்ற நிலையில் விமர்சிப்பவர்களும், திறந்த மனத்துடன் ஆராயும் அறிஞர்களும் அவை சரியானவைதான் என்று சான்று பகர்கின்றனர்.

'யங் இந்தியா-வில் முஹம்மத் நபியின் பண்பைக் குறித்து மஹாத்மா காந்தி கூறுகிறார்:

''மனித சமுதாயத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களின் மீது சர்ச்சைக்கிடமின்றி இன்று ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஒருவரின்

மிகச்சிறந்த வாழ்க்கையை அறிந்திட நான் ஆவல் கொண்டேன். (அவ்விதம் அதனை நான் படித்தறிய முற்பட்டபோது) இஸ்லாத்திற்கு அக்காலத்திய வாழ்க்கையமைப்பில் உயர்ந்த ஓர் இடத்தைப் பெற்றுத்தந்தது வாள் பலமல்ல என்று முன் எப்போதையும் விட அதிகமாக நான் உணர்ந்தேன். நபிகள் நாயகத்தின் மாறாத எளிமை, தம்மைப் பெரிதாகக் கருதாமல் சாதாரணமானவராக நடந்துகொள்ளும் உயர் பண்பு, எந்நிலையிலும் வாக்குறுதியைப் பேணிக்காத்த தன்மை, தம் தோழர்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழிய அன்பு, அவரது அஞ்சாமை, இறைவன் மீதும் தமது பிரச்சாரப்பணியிலும் அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை ஆகியவைதாம் அவரது வெற்றிக்குக் காரணங்கள். இவையே உலக சக்திகள் அனைத்தையும் நபிகள் நாயகத்தின் முன்பும் அவர்களின் தோழர்கள் முன்பும் கொண்டு வந்து குவித்தன. எல்லாத்தடைகளையும் வெற்றி கொண்டன. அவரது மகத்தான வெற்றிக்கு இவைதாம் காரணமே தவிர வாள்பலம் அல்ல!''

''ஹீரோஸ் அண்ட் ஹீரோ ஒர்ஷிப்'' எனும் நூலில் வரலாற்று ஆசிரியர் தாமஸ் கார்லைல் கார்லைல் வியக்கிறார்: ''சண்டையும், சச்சரவும் நிறைந்த குலம் கோத்திரங்களையும், நாடோடிகளையும் தமது தனி முயற்சியால் இணைத்து ஒரு இருபது ஆண்டுகளுக்குள்ளேயே நாகரிகம் மிகுந்த - பலம் பொருந்திய சமூகமாக எவ்வாறு தான் அவரால் உருவாக்க முடிந்ததோ!''

கொள்கையளவில் அவர்கள் தந்த தத்துவத்தைக் காண்போம்: மனித வரலாறு அறிந்த மத, சமூக, அரசியல் தத்துவங்கள் யாவுமே அவர்கள் தந்த கொள்கை (இஸ்லாம்)க்கு இணையாக அமையவில்லை. அது மதச் சார்பற்றக் கொள்கையாக இருந்தாலும் சரியே; அல்லது சமூகம் அரசியல் சார்ந்தக் கொள்கையாக இருந்தாலும் சரியே. விரைந்து மாறிவரும் இவ்வுலகில் ஏனைய கொள்கைகள் தம்முல் மாற்றம் கொள்கின்றன. ஆனால், அண்ணலாரின் வாழ்க்கைநெறி (இஸ்லாம்) மட்டுமே கடந்த 1400 ஆண்டுகளாக அணுவளவும் மாறவில்லை. அதுமட்டுமன்றி மனித சிந்தனை செயல்களில் ஏற்பட்டு வரும் ஆக்கபூர்வமான ஆரோக்கியமான மாற்றங்களில் இஸ்லாம் தன்னுடைய செல்வாக்கையும் சாயலையும் படியச் செய்யும் சக்திமிக்கதாய் உள்ளது.

இப்பொழுது அக்கொள்கைகள் செயலுருவில் மலர்வதைப் பார்ப்போம்: உலகில் தோன்றிய சிந்தனைச் சிற்பிகள் தம் தத்துவங்களைச் செயலாக்கி, அதன் பலனைத் தம் வாழ்நாளில் காணக்கொடுத்து வைக்கவில்லை. ஆனால் இம்மாமனிதர் தம் அருமையான தத்துவங்களை அறிவுறுத்தியதோடு அன்றி தம் வாழ்நாளிலேயே அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்கள். அவர்களுடைய மரணத்தின்போது அவருடைய அறிவுரைகள் யாவும் நன்கு பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கான மாந்தர் பின்பற்றக்கூடிய வாழ்க்கை நெறியாக மலர்ந்தன. அம் மனிதர்களில் ஒவ்வொருவரும் அன்னாருடைய அறிவுரைகளின் செயலுருவாகத் திகழ்ந்தனர்.

வேறு எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும், எந்த ஓர் அரசியல் - சமூக, மத, திட்டமோ, தத்துவமோ, கோட்பாடோ இத்தகைய வியத்தகு முழுமையான சாதனையைக் கண்டதுண்டா?

இஸ்லாத்தின் கொள்கைகளைப் பற்றி எட்வர்ட் கிப்பன் மற்றும் ஸைமன் ஒக்லே எழுதுகின்றனர்:

''ஓரிறைவனையும் இறைத்தூதர் முஹம்மதையும் நான் நம்புகிறேன்'' என்பது இஸ்லாத்தின் மிக எளிமையான, அடிப்படைக்கொள்கையாகும். இறைவனைப் பற்றிய அறிவார்ந்த சிந்தனையை எந்தச் சிலையாலும் குறைத்திட முடியாது. நபியின் மாண்புகள் மனித பண்புகளுக்கு உகந்தது. அவருடைய வாழ்வும், வாக்கும் அவருடைய தோழர்களின் சமயமாக பரிணமித்தது.

**(History of the Saracen Empires, London 1870,P.54)**

முஹம்மத் (ஸல்) ஒரு மனிதரேயன்றி வேறல்லர். ஆனால், ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காக உழைத்த மனிதர். ஒரே இறைவனை வணங்குமாறு மனிதகுலத்தை அழைப்பதும், இறைக்கட்டளையினடிப்படையில் நேர்மையான, சத்திய வாழ்வை மேற்கொள்ள மக்களுக்கு கற்பிப்பதும் அவரின் புனித இலட்சியங்களாகும். அவர் தம்மைத் தாமே ஓர் இறைத்தூதராக, இறையடிமையாக பிரகடனப்படுத்தினார். அவருடைய ஒவ்வொரு செயலும், நடவடிக்கையும் இதனை மெய்ப்பிக்கும் வகையிலேயே அமைந்திருந்தது.

இந்தியாவின் புகழ்பெற்ற பெண் கவிஞர் சரோஜினி நாயுடு இஸ்லாத்தின் சமத்துவக் கொள்கையைப் பற்றி குறிப்பிடுகிறார்:

''ஜனநாயகத்தைப் போதித்து, செயல்படுத்திய முதல் மதம் இஸ்லாம் மஸ்ஜிதில் நாளொன்றுக்கு ஐவேளை பாங்கொலி எழும்போது தொழுகையாளர்கள் அனைவரும்-ஆண்டி முதல் அரசர் வரை - ஓரணியில் நின்று பணிந்து கூறுகின்றனர்: இறைவன் மட்டுமே மிக உயர்ந்தவன்: இஸ்லாத்தின் இந்த ஒருமைப்பாட்டை, மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே என நிரூபிக்கும் பண்பைக் கண்டு நான் வியப்புறுகிறேன்.''

புகழ்பெற்று வாழ்ந்தவர்களின் வாழ்வை 'தெய்வீகமாக்கும்' முயற்சியில் உலகம் என்றைக்கும் சளைத்ததில்லை. அவர்களின் இலட்சியமும் இதனால் கற்பனை கலந்த கதையாக மாறிவிடும். சரித்திரப் பூர்வமாகப் பார்க்கையில் முஹம்மத் (ஸல்) அவர்களின் சாதனையில் பத்தில் ஒரு பங்கைக்கூட இவர்கள் சாதித்ததில்லை. இருப்பினும், முஹம்மத் (ஸல்) அவர்கள் தம்மைக் கடவுள் என்றோ, கடவுளின் அவதாரம் என்றோ, கடவுளின் மகன் என்றோ கூறிக்கொள்ளவில்லை. மாறாக, தாம்

ஒரு சாதாரண மனிதர்; மாந்தர் அனைவரையும் சத்தியப்பாதையின்பால் அழைக்கவும், அவர்களுக்கு முழுமையான வாழ்வுநெறியின் முன்மாதிரியாக அமையவும் இறைவனால் நியமிக்கப்பட்ட ஒரு தூதர் என்றே கூறினார்கள்.

மைக்கேல் H. ஹார்ட் மனிதகுல மேம்பாட்டிற்காக பங்காற்றிய சிறப்புக்குரியவர்களின் தொகுப்பை எழுதும்போது விவரிக்கின்றார்:

''உலகில் செல்வாக்கு மிகுந்தவர்களின் பட்டியலில் முதன்மையானவராக, முஹம்மதை நான் தெரிவு செய்தது சில வாசகர்களுக்கு வியப்பையும், வினாவையும் எழுப்பலாம். சமயஞ்சார்ந்த மற்றும் சமயச்சார்பற்ற வட்டத்தில் மாபெரும் வெற்றி பெற்றவர் மனித சரித்திரத்தில் அவர் ஒருவரே!''

**(M.H.Hart, 'The 100! A ranking of the most influential persons in History', New York, 1978, PP.33)**

1400 ஆண்டுகள் கழிந்த பின் இன்றும் அவர்களுடைய வாழ்வும் வாக்கும் குறைக்கப்படாமலும் கூட்டப்படாமலும் எந்தவொரு மாற்றமுமின்றி நமக்கு அப்படியே கிடைக்கின்றன. மனித சமூதாயத்தின் பெரும் பிரச்சினைகளை அப்போதனைகள் அன்று தீர்த்து வெற்றி கண்டதைப் போலவே இன்றும் தீர்க்கும் வல்லமை வாய்ந்தவையாய் இருக்கின்றன. இதுவே வாய்மையாய் யாம் உலகிற்கு மொழியும் கூற்றாகும்; வரலாற்றை ஆராயும் ஒவ்வொருவருக்கும் தென்படும் தவிர்க்க முடியாத முடிவாகும்.

நீங்கள்-அறிவும் ஆர்வமும் வாய்ந்த நீங்கள்-செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்: சற்று நிதானித்து, உங்களை நீங்களே வினவிக் கொள்ள வேண்டும்: 'இந்தக் கூற்றுக்கள் எல்லாம் உண்மைதானா? இந்த அசாதாரணமான, புரட்சிகரமான சாதனைகள் உண்மையில் நடைபெற்றனவா? அவை உண்மையாயிருப்பின் இம்மாமனிதரை நான் அறிந்திருக்கின்றேனா?'

இன்று வரையிலும் நீங்கள் அவர்களை அறிந்து கொள்ளவில்லை என்றால் இனியும் நேரத்தை வீணாக்காமல் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். அதற்கு உங்களுக்கு அதிக நேரமும் சக்தியும் அவசியப்படாது. அன்றியும் உங்களுடைய இந்தத் தூயமுயற்சி உங்கள் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கும் ஒரு பொன்னான வாய்ப்பாக அமைந்துவிடும்!

வாருங்கள்! வியக்கத்தக்க இம்மாமனிதருடைய வாழ்வைப் பயில நாம் முற்படுவோம். இவரைப் போன்ற எந்தவொரு மனிதரும் இம்மண்ணுலகில் வாழ்ந்ததேயில்லை. அவருடைய வாழ்வையும் முன்மாதிரியையும் பின்பற்றுவோமேயானால் நம் வாழ்விலும் பெரும் திருப்பம் ஏற்படும்: உன்னதமிக்க ஒரு புத்துலகம் உருவாகும். இறைவன் அண்ணலார் மீது சாந்தி மழை பொழிவானாக!